# MY JOURNEY
## Memories

**Compiled & Edited by**
**Dr. V Shanta**

**என் பயணம்**
**நினைவலைகள்**

**தமிழாக்கம்**
**பத்மா நாராயணன்**


**Cancer Institute WIA**
**2013**

# நன்றி

புற்று நோய் என்ற பெயர் பல வித உணர்வுகளை மனதில் எழுப்புகின்றன; என்றாலும், பொதுவாக அவை கலவரம், வலி மற்றும் குணப்படுத்த முடியாத ஒன்றே என்ற எண்ணங்கள் தாம் பரவலாகத் தோன்றுகின்றன. அந்த நோயிலிருந்து மீண்டு வந்து உயிர் வாழ்பவரின் மன நிலை, முதலில் நோய் இருப்பதைக் கண்டறிதல், சிகித்சைக் காலத்தின் பல் வேறு நிலைகள், புனர் பரிசோதனைகள், அனைத்திற்கும் பின் இறுதியில் குணமாகி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டோமென்ற மகிழ்ச்சி என்ற தொடர் நினைவுகளைக் கொண்டது. இந்த நோய்க்கு அன்பான ஒருவரைப் பறி கொடுத்தவருக்கோ இழப்பின் துயரம், அனுபவித்த சோதனைகள் ஆகியவற்றை நினைவில் கொண்டு நிறுத்தி, புற்றுநோய் ஏன் வருகிறது, அதைத் தடுத்து நிறுத்தி குணப்படுத்தி இருக்க முடிந்திருக்குமா, அப்படியானால் எனக்கு ஏன் இந்த இழப்பு - போன்ற கேள்விகள் மனதை வாட்டுகின்றன.

தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருந்த நோயாளிகளின் அனுபவக் குறிப்புகளை நான் சேகரிக்கத் தொடங்கினேன். சிலருக்குப் பற்பல காரணங்களுக்காக ஒருவிதத் தயக்கம் இருந்தது; அதற்கு, இன்றும் இந்த நோய்க்கு இருக்கும் ஒருவித இழிவுப் பெயர் ஒரு முக்கியக் காரணம். எனக்குக் கிடைத்த பலருடைய நினைவுக் குறிப்புகள் அவர்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தினதுடன் சில ஊக்கமளிக்கும் வகையிலும் இருந்தன.

புற்று நோய் சிகித்சைக்கு பல கோணங்கள் இருக்கின்றன. நோயை இனம் கண்டறிவதும், சிகித்சை செய்வது மட்டுமல்ல அது. பன்முகப் பட்ட ஒரு சிகித்சை முறை அவசியம். நோயை அகற்றுவதற்கப்பாலும் சென்று நோயிலிருந்து மீண்டு வருபவர் ஒரு வித முழுமையுடன் வாழ்வதற்கு வழி செய்வதே குறிக்கோளாகிறது. இதை எந்த அளவு வெற்றிகரமாகச் செய்ய முடிந்திருக்கிறது? இந்தக் கோணத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது இந்த சுயக் குறிப்புக்கள்.

குணமான ஒருவரின் செய்தியை பொதுமக்கள், நோயைச் சந்தித்த வேறு சிலர், நோயுற்றிருப்பவர்கள், என பலரும் புற்று நோயைப் பற்றிய அவர்களுடைய பல சந்தேகங்களுக்கும், பயங்களுக்கும் விடைகள் காண்பதும் இந்த நோயைப்பற்றிய சில புனைவு கதைகளை அழிப்பதுமே இந்த வெளியீட்டின் குறிக்கோள். நான் இணைத்திருக்கும் குறிப்புக்கள் புற்று நோய் விழிப்புணர்வை பொதுப்படையான தகவல்கள் அளிப்பதன் மூலம் அதிகரிப்பதற்காகத்தான்.

இந்த நூலிற்கு முகவுரை எழுதக் கனிவுடன் இசைத்த ஹிந்துவைச் சேர்ந்த திரு ராம் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. எங்கள் முயற்சிக்கு அது புதிய ஒரு பரிமாணத்தை தந்திருக்கிறது.

திருமதி மினி கிருஷ்ணனிற்கும், திருமதி கிரேசி வர்கீஸிற்கும் உபயோகமான, கவர்ச்சிகரமான, மக்களுக்கு உதவ வேண்டுமென்ற குறிக்கோளுடன் வரும் இந்த இதழை வெளியிடுவதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் மிக்க அக்கறையுடன் செய்தமைக்கு மிக்க நன்றி.

இதில் தம் அனுபவங்களை பதிவு செய்து, புற்று நோய் குணமடைந்தவர்கள் புற்று நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க உதவும் தூதுவர்களாக விளங்கும் பலருக்கும் நன்றி என்ற ஒரு வார்த்தை சொல்வது போதாது. எங்கள் முயற்சியில் அவர்களுடைய பங்களிப்பு மகத்தானது,

(டாக்டர் வி. சாந்தா)
தலைவி

# முகவுரை

புற்று நோயைப் பற்றிய பயம் சாமானியமான ஒன்றல்ல. கண்களால் மட்டுமே கண்டறியும் தோற்றங்கள், அறியாமை மற்றும் காரணமில்லாத வெறுப்பு, ஆகிய பொதுவான குணங்களைக் கொண்ட அதை (1933ல் அமெரிக்காவின் ஜனாதிபதி ப்ஃராங்களின் டெளானோ ரூஸ்வெல்ட் தன்னுடைய ஏற்பு விழா உரையில் கூறிய வார்த்தைகளை இரவல் வாங்கிக்கொண்டு கூறுவதானால்) 'ஒரு தனி மனிதனின் அல்லது குடும்பத்திற்கு ஏற்படும் எதனுடனும் ஒப்பிட முடியாத ஒரு சவாலை சந்திக்கத் தேவையான முயற்சிகளைச் செய்ய முடியாமல் அவரைச் செயலிழக்கச் செய்யும் ஒரு வித பயமென்றுதான் கூற வேண்டும். விஞ்ஞானத்தின் புரட்சிகரமான முன்னேற்றங்கள் அளிக்கும் நற்பயன்களால், புற்று நோயைக் கண்டு பிடித்தலும், அதைக் குணமாக்கச் செய்யப்படும் முயற்சிகளும், மிகுந்த சிரமப்பட்டு கிடைத்திருக்கும் பொது மக்களிடையே இருக்கும் இந்த நோயைப்பற்றின அறிவும், முன்பு சாபக்கேடாகப் பார்க்கப்பட்ட சமூகப் பார்வையில் மாற்றமும் ஏற்படுத்தி வருவதைக் காண்கிறோம்.

எனினும் இந்த சவாலைச் சந்திக்க எடுக்கப் பட்டிருக்கும் நம் தேசிய சுகாதார கொள்கைகள், நோயைக் குணம் செய்யும் முயற்சிகளில் போதிய அளவு முன்னேற்றம் அடைய முடியாமல் தடைகளாக இருக்கின்றன. 80 மில்லியன் மக்கள் பகுதியினரின் மத்தியில் புற்று நோயால் பாதிக்கப் பட்டவர்களைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க 28 பதிவிடங்களை ஏற்படுத்தியிருப்பது ஒரு வித முன்னேற்றம் தரும் சாதனைதான்; ஆனாலும் பெரும்பாலான இந்தியர்கள் வசிக்கும் கிராமப்புற மக்களைப் பற்றின விவரங்கள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. சில வருடங்களாக புற்று நோயின் பாதிப்பு அதிகமாகி வரும் நிலையிலும், மேலும் வரும் பத்து வருடங்களில் இன்னமும் அதிகமாகுமென்று கூறப்படுவதாலும், இன்னமும் இதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டிய நோய் என்று அறிவிக்கப்படவில்லை. தகவல் ஊடகங்கள் மத்தியிலும் மற்றும் பொதுமக்கள் கலாசாரத்திலும் இந்த நோயைக் குறித்த எதிமறையான செய்திகளே பரவலாக இருப்பதும் மற்றொரு பிரச்சினை. பொது மக்களிடையே நோயைப்பற்றிய அறிவில் சிறிய முன்னேற்றம் இங்கும் அங்குமாக இருக்கிறதென்றாலும், அறியாமை என்னும் இப்பிரச்சினையால் தொடர்ந்து சமூக நிலைபாடுகளிலும் புற்று நோய் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடுப்பங்களிடையேயும் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறையவில்லை.

ஒரு முக்கியமான நோயைப்பற்றி மக்களிடையே நேரும் அச்சத்தையும் மரண விகிதத்தையும் கடக்க, சென்னை புற்று நோய் மருத்துவமனையையும், அதன் திறமை மிக்க தலைவியாக சேவை செய்யும் டாக்டர் சாந்தாவையும் விட நீண்ட நாட்களாக அதிகப்பங்களித்த வேறு ஒரு மன்றமோ, தலைவரோ இருப்பதை பொது நல ஆரோக்கியத்துறையில் நான் கண்டதில்லை. 2005 ம் ஆண்டு ராமன் மேகஸேஸே விருதுப் பத்திரத்தில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டிருந்த வார்த்தைகள் வெறும் உபசாரத்திற்காகக் கூறப்பட்டவை

அல்ல 'இந்தியாவில் சிறப்பு மருத்துவ சிகித்சை வாணிக மயமாக்கப்பட்டு விட்ட இத்தருணத்தில் டாக்டர் சாந்தா தன்னுடைய மன்றத்தின் குறிக்கோளான, "அனைவருக்கும் சேவை" என்பதிலிருந்து சற்றும் விலகாமல் நிற்பதற்கு இடைவிடாமல் முயற்சி செய்து வருகிறார். ஒரு வருடத்தில் இம்மன்றத்திற்கு வரும் ஒரு இலட்சம் நோயாளிகளில் 60% இலவசமாகவோ, குறைந்த கட்டணத்திற்கோ சிகித்சை அளிக்கப் படுகிறார்கள். எழுபத்தியெட்டு வயதான சாந்தா இன்றும் நோயாளிகளைப் பரிசோதிக்கிறார். அறுவை சிகித்சைகள் செய்கிறார் என்பதுடன் இருபத்தி நான்கு மணி நேரமும் தன் கடமையைச் செய்யத் தயார் நிலையில் இருக்கிறார்.

அனுதாபம், அக்கறை, மற்றும் அளவில்லா கனிவு ஆகியவைகளுடன் சமூகத்தின் அனைத்து நிலைகளிலிருந்து சென்னை புற்று நோய் மருத்துவமனையை வந்தடையும் நோயாளிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அபரிமிதமான பரிவு காட்டப்படுகிறது; மேலும், இவற்றுடன் தொழில் சார்ந்த திறமை, நோயை இனம் கண்டறிதல், சிகித்சை முறைகள் மற்றும் நோயின் கட்டுப்பாடு இவற்றில் இன்றுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தின் அடிப்படையில் செயல்படுவதும் நோயாளிகளின் மனதில் நம்பிக்கை ஊறும் வகையில் இருக்கின்றது. இந்தக் கலவைதான், அறுபது வருடங்களாக இம்மன்றத்தினுள் நுழைந்து வெளியேறும் இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கையும் ஆதரவுமான மிகப் பெரிய சொத்தை டாக்டர் சாந்தா தலைமையில் இயங்கும் இம்மருத்துவமனைக்கு அளிக்கிறது.

டாக்டர் சாந்தாவின் வார்த்தைகளில் கூற வேண்டுமானால், 'புற்று நோய் ஒரு சிக்கலான உடல் நிகழ்வு. அது ஒரு தனிப்பட்ட வியாதியன்று. உடற்கூற்றளவில் பல வேற்றுமைகளுடன் அவற்றில் தோன்றும் கார்ஸினோஜெனஸிஸ் கூட வேறு வேறு தான்.' ஏறக்குறைய 200 வகை புற்று நோய்கள் இருந்தாலும் பிரச்சினை என்னமோ அசாதாரண உயிரணுக்களின் தோற்றம், வளர்ச்சி, பரவுதல் ஆகியவற்றை மையப் படுத்தியே அறியப் படுகிறன என்று குடும்ப மருத்துவ நூல் கூறுகிறது. மனிதகுலம் விதியின் கையில் அகப்பட்டு கையறு நிலையில் இருப்பவர்கள் என்றோ, யதேச்சையான குழப்பங்கள் மிக்க ஒரு விளையாட்டின் சதுரங்கக் காய்கள் தாமென்றோ தான் இதன் அர்த்தமா?

'என் பயணம்' நினைவுச் சரங்கள், பலதரப்பட்ட, எளிமையான மனதை நெகிழ்த்தும் வகையில் கூறப்பட்ட கதைகளால் நெய்யப்பட்டிருக்கும் ஒன்று - இந்த சுய அனுபவங்கள் அதிர்ச்சி, 'பெயரற்ற காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்ட, நியாயமற்ற பயம்', கையறு நிலைமை ஆகியவைகளின் உணர்ச்சிபூர்வமான சித்திரங்களாக இருப்பதுடன் விவேகம், புரிதல், தாக்குப் பிடிக்கும் வலிமை, தைரியம், வலிவான குடும்ப உறவுச் சங்கிலிகள், மனித ஒற்றுமை, மற்றும் சமூக பரிமாற்றம் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றன. இறுதியில், நோயின் மீதான வெற்றிகளையும் கூறுகின்றன. முக்கியமாக இந்த அனுபவங்களைப் பதிவு செய்யும் பெண்கள் வலிமை மிக்கவராக

வெளிப்படிகிறார்கள். இந்த புற்று நோயிலிருந்து மீண்டு வந்து வாழ்பவர்களின் குரல்களின் தொகுப்பில், செயற்கையின்மை, கவிதை, ஆழ்ந்த உணர்ச்சிகள், ஒவ்வாமை போன்ற ஆழ்ந்த உணர்வுகள் ஒலிக்கின்றன. மிகக் குறைந்த அளவிலேயே இந்தப் பதிவுகளில் பதிப்பாசிரியரின் இடைமறிப்போ, விளக்கங்களோ இருக்கின்றன.

எதிகாலம் எப்படி இருக்கும்? இன்றிருக்கும் மருத்துவ அறிவின் அடிப்படையில் டாக்டர் சாந்தா கூறுவது, "மூன்று பேர்களில் ஒருவரை நாங்கள் குணப்படுத்தி வருகிறோம். ஆனால் தக்க நேரத்தில் நோய் இனம் கண்டறியப்பட்டு நவீன முறை சிகித்சைகளும் அளிக்கப்படுமானால், மூன்றில் இரண்டு பேர்களை குணமாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. மீதியுள்ள ஒருவர் இன்னமும் ஆராய்ச்சிகள் செய்யப்படும் பகுதியில் தான் இருக்கிறார். நோயை முற்றாத நிலையிலேயே அடையாளப் படுத்துதலும், நவீன மருத்துவ முறைகளும், நோயாளிகளின் நம்பிக்கை, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் ஆதரவு, மற்றும் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்காமல் அளிக்கப்படும் தேசிய சிகித்சை திட்டங்கள் ஆகியவையும் இணையும் போது டாக்டர் சாந்தா எதிர்பார்க்கும் விகிதம் புற்று நோய் குணமாக்கப் படுவதில் சாத்தியமென்ற நம்பிக்கை இந்த சுய அனுபவக் கூற்றுகளை வாசிக்கும் போது உங்கள் மனதில் உதிக்கிறது.

என். ராம்

(Former Editor-in-chief, The Hindu

& Director, Kasturi & Sons Limited,

Publishers of The Hindu Group of Newspapers

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஒரு சுறுசுறுப்பான வாழ்க்கை - *வினோத் வி. சர்மா* | |
| 2 | என் கதை - *பி.எஸ்.நாராயணன்* | |
| 3 | பதுங்கி வந்து உயிரை எடுக்கும் கொலைகாரனை எதிர் கொண்டு வென்றேன் - *திருமதி ரமணி கோஷி* | |
| 4 | நினைவுகள் - *சித்ரா மஹேஷ்* | |
| 5 | எனது அனுபவங்கள் - *ஜயஸ்ரீ ராஜன்* | |
| 6 | உங்களால் அதனை எதிர் கொள்ள முடியும் - *சுமித்ரா கல்யாணராமன்* | |
| 7 | திருமதி ராதா மோஹனின் மருத்துவக் குறிப்புகள் - *பெய மாற்றப்பட்டுள்ளது* | |
| 8 | புற்று நோயுடனான எனது போராட்டம் - *மஹாலக்ஷ்மி சூர்யாநந்தம்* | |
| 9 | புற்று நோயை எதிர்த்து நின்ற ஒரு இளம் நோயாளி - *மிஹிர் எம் ஷா* | |
| 10 | நம்பிக்கையுடனான சிந்தனைகள் அளிக்கும் மன வலிமை - திருமதி ரமாமணி ரவி | |
| 11 | எனக்கு குணமாகிவிட்டது -*கே உமா குமாரி* | |
| 12 | நம்பிக்கையின் உறைவிடம் - *ஸிஸ்டர் செலீன் பால் FMM* | |
| 13 | பதினைந்து வருட போராட்டத்திற்குப் பின் புற்று நோயிலிருந்து விடுதலை - *மாலினி* | |
| 14 | குறைந்த பட்ச அபாயம், அதிகபட்ச ஆதாயம் - ஒரே வழி - புற்று நோய் மருத்துவமனை - *கற்பகம் சுந்தரம்* | |
| 15 | நோயாளியாக நுழைந்தேன்; ஆரோக்கியமாக வெளிவந்தேன் - *டாக்டர் ஸ்ரீமதி பி. செல்வம்* | |
| 16 | புற்று நோய்க்குப் பின்பும் வாழ்க்கை உண்டு - புற்று நோயுள்ளபோதே கூட வாழ்க்கையுண்டு - *பெயர் குறிப்பிர விரும்பாதவர்* | |

| | | |
|---|---|---|
| 17 | நினைவுப் பாதையினூடே - *கிரேசி வர்கீஸ்* | |
| 18 | புற்று நோயுடன் நான் செய்து கொண்ட சமரசம் - *கேப்டன் கீர்த்தன் குமார்* | |
| 19 | உலகளவில் புகழ் பெற்ற ஒரே ஒரு மருத்துவமனை - *ஸ்ரீநிவாசன் பாலாஜி* | |
| 20 | ஒவ்வொரு நோயாளிக்கும் கிட்ட வேண்டும் - *ஆர் சுலோசனா* | |
| 21 | என் கதை - *பி. ஸ்ரீமதி* | |
| 22 | வாழ்க்கை ஒரு புதிர் - *ஹரீந்தர் கௌர் ஸ்ரா* | |
| 23 | புற்று நோயால் பாதிக்கப் பட்ட அனுபவங்கள் - *கீதா ஸ்ரீனிவாசன்* | |
| 24 | புற்று நோயை மனதால் விரட்ட முயற்சிப்பது முட்டாள்தனம் விருப்பமில்லாவிட்டாலும் சிகித்சை அவசியம் - *எழுதியவரின் பெயர் கொடுக்கப்படவில்லை* | |
| 25 | புற்று நோய் ஒன்றும் பயங்கரமானதில்லை ஆனால் சிகித்சையை தாமதப்படுத்துவது தான் அபாயம் - *எழுதியவரின் பெயர் கொடுக்கப்படவில்லை* | |
| 26 | வீட்டிற்கு வெளியே ஒரு வீடு - *கீதா தாஸ்* | |

# ஒரு சுறுசுறுப்பான வாழ்க்கை

வினோத் வி சர்மா

விமலா சர்மா தென் இந்தியாவின் ஒரு பெரிய குடும்பத்தில் 1925ம் வருடம் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். அவள் ஒரு சுறுசுறுப்பான குழந்தை. ஒரு மைல் தூரத்தில் இருந்த பள்ளிக்கூடத்திற்கு ஒவ்வொரு நாளும் நான்கு தடவை நடந்து செல்வது, பலவித விளையாட்டுக்களில் பங்கேற்பது, மரங்கள் ஏறுவது மற்றும் சைக்கிள் ஓட்டுவது அவருக்கு மிகவும் பிரியமானவை. பள்ளிக்கூட படிப்பு முடிந்தவுடன் கல்யாணம் செய்து கொண்டு 1945ல் இடம் பெயர்ந்து தில்லியில் முதன் முதலாக தனக்கான வீடு ஒன்றில் வாழ்க்கையை துவங்கினார். இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அவருடைய கணவரின் வேலையில் அடிக்கடி இட மாற்றங்களை சந்திக்க நேரிட்டது. இதனால் வீடு, பள்ளிக்கூடம் மற்றும் நண்பர்கள் என சூழ்னிலையில் மாற்றங்கள் வந்து கொண்டே இருந்தன. இந்த ஒரு அசௌகரியத்தைத் தவிர மற்றபடி அவர் வாழ்க்கை சீராக போய்க்கொண்டிருந்தது.

1976ல், விமலா சர்மாவின் 50 வது வயதில் அவருக்கு மார்பக புற்று நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது; கட்டியை அகற்றுவதற்காக மேஸ்டெக்டமி செய்து கொண்டார். வாழ்க்கை சாதாரண நிலைக்கு திரும்பியது; புற்று நோய் மறக்கப்பட்டது. ஆனால் அதை அப்படி ஒதுக்கிவிட அந்த நோய் அனுமதிக்கவில்லை. 20 வருடங்கள் கழித்து அவர் காலில் கடுமையான வலி தோன்றியது. புற்று நோய் அவரை விட்டு அகலாமல் அவருடைய எலும்புகளுக்குள் ஊடுருவிப் பரவி இருந்தது. அவர் கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சு போன்ற சிகிச்சைகளைச் செய்து கொண்டு, அதனால் வரும் பசியின்மை, சோர்வு போன்ற பக்க விளைவுகளால் அவதிப்பட்டார். ஆனாலும் ஒரு மாத சிகித்சைக்குப்பிறகு தன் அன்றாட நடவடிக்கைகளுக்கு திரும்பினார்.

1966 க்குப் பிறகு, அந்தப் புற்று நோய் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை, ‘ நான் இன்னும் உன்னை விட்டு விடவில்லை’ என்று கட்டிகளால் பாதிக்கப்பட்ட எலும்புகள் நினைவுபடுத்திக்கொண்டே இருந்தது. ஒவ்வொரு முறையும் அவர் கதிர் வீச்சு சிகித்சையை ஒரு மாதம் எடுத்துக் கொள்வார். அதிருஷ்டவசமாக, சில வாரங்களுக்குப் பிறகு வலி குறைந்து நின்றுவிடும். சில வருடங்களுக்குப் பிறகு அவருடைய முதுகெலும்பின் இரண்டு சில்லுகள் காலப்போக்கில் நேரும் சிதைவுகளினால்-மேடாஸ்டேசஸினால் (Metastasis) -- நொறுங்கிவிட்டன; ஆனாலும் அவர் நிமிர்ந்தே நடந்தார். ஒவ்வொரு கதிர் வீச்சு சிகித்சைக்குப் பிறகும் தன் அன்றாட வேலைகளுக்குத் திரும்பிவிடுவார். சென்னையின் அடையார் புற்று நோய் மருத்துவமனை, அவரை புற்று நோயிலிருந்து மீண்டு நீண்ட நாட்கள் வாழ்பவர்களில் ஒருவராகக் கருதி அவர் மற்ற புற்று நோயளிகளை சந்தித்து ஊக்கமளிக்க ஏற்பாடுகள் செய்தது.

அவர் தன் கணவருடன் தங்கியிருந்த சென்னை வீட்டை, 1998ல் கணவர் இறக்கும் வரை நிர்வகித்துக் கொண்டிருந்தார். அதன் பிறகு தன்னுடைய மகன் மருமகளுடன் அவர்கள் வீட்டில் வசிக்கலானார். அவருக்கு, சமையல், தோட்ட வேலை, பின்னல் வேலை, அலங்கார பின்னல், தைப்பது, படிப்பது மற்றும் பாட்டு முதலிய பலவித பொழுது போக்குகளில் ஆர்வம் உண்டு. அவர் எப்பொழுதும் - சுவற்றை அலங்கரிக்க மெல்லிய அலங்காரப் பாய்கள், மேசை விரிப்பு என - ஏதாவது கைவேலை செய்வதில் காலம் கழித்துக் கொண்டிருப்பார். அவருக்கு மிகவும் பிடித்தது பயணம் செய்வது; தனியாகவே UK ல் இருந்த தன் மகள் வீட்டிற்கோ அல்லது US ல் வசித்த தன் சகோதரியின் இருப்பிடத்திற்கோ போக அவர் ஒரு போதும் தயங்கியதில்லை. தன் குடும்பத்தோடு பஹாமாஸிற்கு கடல் வழிப் பயணம் சென்று அங்கு ஊஞ்சலில் (Hammock) ஆடவும் சளைக்கவில்லை. மலைப் பிரதேசங்களில் நடை பழகவும் அங்கு இருக்கும் பூக்களையும் செடிகளையும் ரசிப்பதற்கும் மிகவும் பிடிக்கும்.

சமகால நிகழ்வுகள் மற்றும் செய்திகளில் நல்ல அறிவு பெற்றிருந்த அவர் அரசியல், மட்டைப்பந்து, திரைப்படங்கள், சின்னத்திரை தொடர்கள் என எந்த துறையைப் பற்றிய விவாதமானாலும் தாமும் கலந்து கொண்டு தன் அபிப்பிராயத்தைத் தயங்காமல் கூறுவார். புது வித தொழிற் கல்வி, கணினிகள் எதுவானாலும் பிரச்சினை ஏதும் இல்லை. தன்னுடைய 70 வயதுகளில் விமலா சர்மா கணினியைக் கையாளக் கற்று தாமே மின்னஞ்சல்களை அனுப்புவதில் தேர்ச்சி பெற்றார். சுடொகு - அது அவருடைய தினசரி பொழுது போக்கு அம்சங்களில் ஒன்று. அவரைச் சந்தித்தவர்கள் எவருமே அவருக்கு புற்று நோய் இருப்பதை ஊகித்ததில்லை என்பதில் வியப்பென்ன?

ஆனால் வாழ்க்கையின் நல்ல நாட்களுக்கும் ஒரு முடிவு வரத்தான் செய்தது. 32 வருடங்கள் புற்று நோயுடனான தன் போராட்டத்தை நடத்தியிருந்தார். அவர் 2007, டிஸம்பரில் அவருடைய கால்களில் நீர் கோர்த்துக் கொண்டது. பரிசோதனைகளில் புற்று நோய் அவருடைய கணயத்திற்கும் பற்பல கட்டிகளுடன் பரவி இருந்தது தெரிய வந்தது. அவருக்கு அப்போது 52 வயது. பயாப்ஸி ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் மென்மையான கணயத்தின் திசுக்களைத் தாக்கியிருக்கும் புற்று நோயின் தீவிரத்தை குறைப்பதற்கு பதில் அவருடைய வலியையும் உடலால் படும் துன்பங்களையும் தான் அதிகரிக்கும்.

பங்களூர் பேப்டிஸ்ட் மருத்துவமனையுடன் ஆலோசனைகள் நடத்திய பிறகு அந்த மருத்துவமனையின் பேல்லியேடிவ் - ஹோம் கேர் டீம் (Palliative and Home Care - வலிக்கு ஆறுதலும் நோயாளியை வீட்டிலேயே வைத்துக் கவனித்துக் கொள்ளும் குழு) அவரை நோயாளியாகப் பதிவு செய்து கொண்டது. அந்தக் குழு தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலிகளுடன் வாரம் ஒரு முறை வீட்டிற்கு வந்து நோயாளியின் வலியையும் அசௌகர்யங்களையும் குறைப்பதற்கான பரிந்துரைகளையும் சிகிச்சைகளையும் அளித்தது. குழுவின் அங்கத்தினர்கள் நோய்களைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருந்ததோடு

மனித நேயம் மிக்கவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுடைய உதவியால் விமலா சர்மா பிப்ரவரி 2008 ல் வீட்டிலேயே தன் உற்றமும் சுற்றமும் சூழ்ந்திருக்க இயற்கை எய்த முடிந்தது.

புற்று நோய் இருப்பதற்கான கண்டுபிடிப்புடன் ஒருவருடைய வாழ்நாட்கள் முடிந்து விட்டதெனக் கருதத் தேவையில்லை. நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் பார்வையும் வாழ்வதற்கான உற்சாகமும் இருந்தால், ஒருவரால் தாம் விரும்பும் எதையும் சாதிக்க முடியும். புற்று நோய் தன்னைத் தாக்கிய பின்னரும் முப்பது வருடங்கள் வாழ்க்கையை முழுமையாக விமலா சர்மா வாழவில்லையா?

(வினோத் சர்மா, விமலா சர்மாவின் மகன்; ஹைதராபதிலுள்ள இண்டியன் ஸ்கூல் ஆப் பிஸினெஸ் ல் பணியாற்றுகிறார்.)

# என் கதை

பி.எஸ். நாராயணன்

எனக்கு புற்று நோய் மருத்துவமனையில் 20.06.1983 லிருந்து இன்று வரையில் அளிக்கப் பட்டு வரும் மருத்துவ சிகிச்சைகளின் உண்மையான வரலாற்றை இங்கு பதிவு செய்ய நான் முயல்வேன். நான் புதுக்கோட்டையில் டி.வி.எஸ். நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். 14.04.1983, புது வருஷப் பிறப்பு நாளன்று, நான் இரவு உணவு உண்ணும்போது உணவில் இருந்த ஒரு சிறிய கல்லைக் கடித்ததால் என்னுரைய வலது பக்க பற்களில் ஒன்று உடைந்து போனது. வாயில் தங்கிவிட்ட பல்லின் பகுதியின் கூரான முனை என் நாக்கைக் குத்தித் துன்புறுத்தியது. நான் புதுக்கோட்டையிலிருந்த டி.வி.எஸ் மருத்துவ மனையில் ஒரு மாதத்திற்கும் மேலாக சிகிச்சை பெற்றேன். இதற்குள் என் வலது புற நாக்கில் காயம் ஏற்பட்டது. நிறுவனத்தின் மருத்துவர் அது புற்று நோயினால் இருக்குமோ என்று சந்தேகித்து, என்னை, சென்னை அடையாரிலிருந்த புற்று நோய் மருத்துவ மனைக்குச் செல்ல பரிந்துரைத்தார். நாக்கின் குறிப்பிட்ட பகுதியில் பல பரிசோதனைகள் செய்த பின் நான் கெனால் சாலையிலிருந்த புற்று நோய் மருத்துவமனைக்கு கதிரியக்கச் சிகித்சை பெறுவதற்காக அனுப்பப் பட்டேன். ஆனால் எனக்கு 104 டிகிரி ஜூரம் வந்துவிட்டதால், சிகிச்சை ஒத்திவைக்கப்பட்டது. அவர்கள் பனிக்கட்டிப்பைகளைத் தலையின் மீது வைத்து ஜூரத்தைக் குறைக்க முயற்சித்தார்கள். ஈறுதியில், என்னுடைய திருமண நாளான 11.07.1983 அன்று கதிரியக்கம் அளிக்கப்பட்டது. அவர்கள் 8000 ரேட் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு மருத்துவமனையிலிருந்து என்னை விடுவித்து புற நோயாளியாக வந்தால் போதுமென்று கூறினார்கள். நான் என் மாமாவின் வீட்டில் தங்கியிருந்தேன்; அங்கிருந்து செவ்வாய்க்கிழமைகள் மற்றும் வியாழக்கிழமைகளில் மருந்துகள் மூலமான கெமொதெரபி சிகிச்சை பெற மருத்துவமனை சென்று வந்தேன். 13.09.1983 அன்று நான் நான்கு மணி நேரம் கொண்ட வலது தாடை எலும்பை அகற்றுவதற்கான அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டேன். 30.09.1983 அன்று நான் வீடு திரும்பினேன்.

உங்கள் மருத்துவமனையின் அனைத்து மருத்துவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து செயலாற்றிய அனைத்து செவிலிகளுக்கும் நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் அனைவருமே என்னுடைய சிகிச்சைக் காலம் முழுவதிலும் தங்கள் சேவைகளை முழுமையான அர்ப்பணிப்புடனும், ஈடுபாடுடனும் எனக்கு அளித்தார்கள்.

நான் ஆசிரியர்களும், மருத்துவர்களும் கடவுளின் பிரதினிதிகளென்று எப்போதும் கூறுவதுண்டு.

என்னுடைய குடும்பத்தினர் அனைவரும், என்னுடைய சிகிச்சைக் காலத்தில் அளிக்கப்பட்ட மருத்துவ உதவிக்கும் மனோதைரியத்திற்கும் டி வி எஸ் நிர்வாகத்திற்கு, என்றென்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்களென்பதை

இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் என்னுடைய மறுபரிசீலனைக்கான மருத்துவப் பரிசோதைக்காலங்களிலும் அவர்கள் என் நலத்தைப் பேணி வருகிறார்கள்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்திக்கும் டாக்டர் சாஸ்த்திரிக்கும் அவர்கள் மறைவிற்கான என் மனமார்ந்த இரங்கல்கள், அவர்களின் ஆத்மாக்கள் சாந்தி அடைவதாகுக.

இந்த இடத்தில் என்னுடைய மனவி குழந்தைகள் மற்றும் தம் பிரார்த்தனைகள் மூலம் எங்களுக்கு துணை நின்ற என்னுடைய குரும்பத்திற்கும் மிக நன்றி. நான் மருத்துவமனையிலிருந்து வெற்றிவாகை சூடி வெளியே வந்தேன். என்னுடைய டி வி எஸ் மேலதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

நான் மருத்துவ மனையில் பல ஏழைகள் சிகிச்சை பெற வந்ததைக் கண்டேன். சாதி, மதம், இனம் என்று எந்த பாகுபாடுமின்றி அனைவரும் சிகிச்சையுடன் அவர்களுக்கு அந்த நேரம் தேவைப்பட்ட அனுதாபத்துடன் நடத்தப் படுவதைக் கண்டேன்.

ஒவ்வொரு வருடமும் என்னால் முடிந்த அளவு நிதியை நான் மருத்துவமனையின் விரிவாக்கத்திற்கு உதவும் வகையில் அளித்து வருகிறேன்.

இந்த மருத்துவமனை மேலும் மேலும் வளர்ந்து, மேலும் மேலும் அனைவருக்கும் சேவை செய்வதில் ஈடுபடட்டும்.

# பதுங்கி வந்து உயிரை எடுக்கும் கொலைகாரனை எதிர்கொண்டு வென்றேன்

திருமதி ரமணீ கோஷி

உடல் வேதனையோ, கவலையான தருணங்களோ என்னவென்றே எனக்குத் தெரியாது - சத்தமின்றி உயிரை எடுக்கும் கொலைகார நோயான புற்று நோயை சந்திக்கும் வரை, நான் கடந்த 35 வருடங்கள் சென்னையிலும், புது டில்லியிலும் உயர் நிலைப்பள்ளி ஆசிரியையாக இருந்த பின் மார்ச் 2009 ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

நான் பிறந்தது டிஸம்பர் 1948 ல், திருமணம் புரிந்துகொண்டது டிசம்பர் 1977ல்; ஒரே ஒரு குழந்தையை பெற்றேடுத்த்து ஆகஸ்ட் 1979ல்.

எல்லாம் ஆரம்பமானது மார்ச் 1983ல் நான் தில்லியில் இருந்த போது, என் வலது மார்பில் கெட்டியாக இருந்த ஒரு இடத்தை என் விரல்களால் தொட நேர்ந்த போது, பயாப்ஸியும் (Biopsy) மற்ற பரிசோதனைகளும், என்னுடைய வலது பக்கத்து ஆக்சியலில் நோட்களுடன் (axial nodes) புற்று நோய் இருப்பதை உறுதி செய்தன. ஆனால் அந்த மெடுலரி கார்ஸினோமா (Medulary Carcinoma) ஆரம்ப நிலையில் இருந்தது. எனக்காகவும் மற்றும் எனக்கான மருத்துவ தீர்வுகளை எடுக்கப்போகும் மருத்துவர்களுக்காகவும் பல தனி நபர்களும், குழுக்களும் செய்த பிரார்த்தனைகள் கவசமாகத் திகழ நான் என் எதிரியுடன் யுத்தத்திற்கு ஆயத்தமானேன். அந்தப் பழமை வாய்ந்த அடையார் புற்று நோய் மருத்துவமனையின் வாசலினுள் நான் ஜூன் 1983ல் நுழைந்தேன். அது முற்றிலும் வேறு விதமான ஒரு கட்டிடம். நீண்ட தாழ்வாரங்கள் கொண்ட அந்த இடத்தில் வாழ்க்கையின் அனைத்து தளங்களிலிருந்தும் வந்திருந்த எல்லா நோயாளிகளும் வித்தியாசம் ஏதுமில்லாமல் ஒரே மாதிரி கவனிக்கப்படும் ஒரு அபூர்வமான, தனித்தன்மையை அந்த மருத்துவமனையில் காண முடிந்தது. இந்தக் காட்சி என் மனதைத் தொட்டது.

இளமையும் உத்வேகமும் கொண்ட என்னுடைய மருத்துவர் என்னைப் பரிசோதித்துவிட்டு “ நாங்கள் முழு முயற்சியுடன் செயல்படுவோம்’ என்று கூறினார். அந்த வாக்கூறுதி என் மனதிற்கு தைரியத்தை அளித்து, மருத்துவர்களிடம் முழு நம்பிக்கையும் கொள்ளச் செய்தது. பின் புற்று நோய் மருத்துவமனைக்கு உள்ளே போவதும் வெளியேறுவதுமான என் பயணம் துவங்கியது. அந்த நாட்கள் மற்ற நோயாளிகளைக் கவனிப்பதும், அவர்களுடன் சம்பாஷிப்பதிலும், பொறுமையாக அவர்கள் அனுபவங்களைக் கேட்பதிலும், அவர்களுக்கும் எனக்கும் சேர்த்து பிரார்த்தனைகள் செய்வதிலுமாக கழிந்தது. என் மருத்துவமனை விஜயங்களின் போதும், நான் அங்கேயே தங்க நேர்ந்த போதுகளிலும் சில சக நோயாளிகளும், அங்கு பழக்கமான பணியாட்களும்

என்னை தங்களுக்கு உந்துதலும், உற்சாகமும், மனோதிடமும் அளிக்கும் ஒருவராகப் பார்த்தார்கள்.

சிகிச்சை கீமோவுடனும் கதிரியக்கம் (Chemo and Radiation) அளிப்பதன் மூலமும் துவங்கியது. இது தான் வலி அதிகமாக உணர்ந்த காலகட்டம். டாக்டர் ரஞ்சனிக்கு அவர் எனக்கு அளித்த பக்க பலத்திற்கு நன்றி. இரண்டு மாதங்களுக்குப் பின் நான் தில்லி திரும்பினேன். மீண்டும் 1983 ஸெப்டம்பரில் மருத்துவமனைக்கு வந்தேன். 1983 அக்டோபர் 6ம் தேதியன்று மார்பகம் முழுமையாக அகற்றப்படும் டோடல் மேஸ்டெக்டமி (total mastectomy) செய்யப்பட்டது. நான் போர்ட் ப்ளேயரிலுள்ள (Port Blair) சிறைச்சாலை அறைகளைப்பற்றி படித்தும் நேரில் பார்த்தும் உள்ளேன். இங்கு அதேபோல் இருப்பதைக் கண்டேன்; ஒரே வித்தியாசம் இங்கு அளிக்கப்பட்ட அக்கறையும் உறுதுணையும் அளவில்லாதபடி இருந்ததுதான். ஐந்து நாட்களில் நான் வீடு திரும்பி, பள்ளிப் பணியில் சேர தில்லிக்கும் வந்து விட்டேன்.

1985ல் என் மருத்துவர் எனக்கு ஊஃபோரெக்டொமி (Oophorectomy) அறுவையினால் நன்மை பயக்குமென்று அதைப் பரிந்துரைத்தார். அதுவும் செய்யப்பட்டது. மீண்டும் 09.06.1986 முதல் 16.03.1987 வரை கீமோ சிகித்சை அளிக்கப்பட்டது. அதற்குப்பின் கடவுளின் கிருபையால் நான் இன்று வரை நல்ல உடல் நலத்துடன் இருக்கிறேன்.

மருத்துவர்கள் பரிந்துரைத்த அனைத்து ஆலோசனைகளையும் சிகிச்சை முறைகளையும் நான் அப்படியே ஏற்று முழுமையாகக் கடைபிடித்தேன்.. அவர்கள் கூறிய பரிசோதனைகளை எல்லாம் செய்து கொண்டேன். தவணைகள் தவறாமல் 3, 6 மாதங்கள், ஒரு வருட இடைவெளிகளில் நான் மறு பரிசோதனகளுக்காக அடையார் மருத்துவ மனைக்கு வந்து, மார்பு எக்ஸ்ரே, வயிறு மற்றும் மற்ற மார்பகத்தின் அல்ட்ரா ஸ்கேன் என அனைத்தையும் தவறாமல் செய்து கொண்டேன். பாதுகாப்பான எல்லையை அடைந்து விட்டதாகக் கூறி 20 வருடங்களுக்குப் பிறகு நான் மீண்டும் அங்கு வரத் தேவையில்லை என்று கூறினார்கள். ஆனாலும் இன்றும் நான் வருடத்திற்கு ஒரு முறை பரிசோதனைகளைச் செய்து கொண்டு என் மருத்துவமனைக்கு என் உடல் நிலை விவரங்களை அளிக்கிறேன். எனக்கு வேறு ஏதாவது நோய் வந்தாலும் நான் அவர்களுக்கு உடனேயே அதைத் தெரிவிக்கிறேன். புற்று நோய்த்துறை சிகித்சையில் முன்னேற்றம் காண இவை உதவுமென்று நான் நம்புகீறேன். கடந்த வருடங்களில் என்னை பாதித்த வியாதிகள் ருமெடாயிட், ஆர்த்ரைடிஸ், ஸார்கோடொஸீஸ், ஹர்பிஸ் (Rheumatoid, arthritis, sarcodozis, herpes) ஆகியவை. இப்போது ஒழுங்கு முறையற்ற குடல்களின் உபாதை (Irritable Bowel Syndrome) என்னைத் தாக்கியுள்ளது.

நான் உயிர் பிழைத்து விட்டேன்; இல்லை நான் வென்று விட்டேன். எப்படி? கடவுள் கருணையினால்; அதற்கு அடுத்தபடியாக மருத்துவர்களின் இடையறாத முயற்சிகளினால், மூன்றாவதாக இந்த மருத்துவமனையில்

கிடைத்த அன்பும் அக்கறையினாலும் .இறுதியாக ஒன்று கூறுகிறேன் - உடலில் தோன்றும் எந்த விதக் கட்டியையும் அலக்ஷியம் செய்யாதீர்கள்.

# நினைவுகள்

சித்ரா ரமேஷ்

முதன் முதலாக புற்று நோய் மருத்துவ மனை பற்றி நான் தெரிந்து கொண்டது 1988/90 களிலேயே என்றாலும் இப்போது திரும்பிப் பார்க்கும் போது அது ஒன்றும் அவ்வளவு நாட்களாகி விட்டதாக தோன்றவில்லை; அத்தகைய மையங்களும் மருத்துவமனைகளும் என்னைப் பொருத்த வரை மற்றவர்களுக்காக செயல்படுபவை. இரண்டரை வருடங்களுக்கு முன் திருமணம் செய்து கோண்டு என் கணவராக நான் ஏற்றுக் கொண்டவருக்கும் அதற்கும் தொடர்பு ஏற்படக் கூடுமென்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை; ஆனால், மனித இனத்திற்குப் பாடங்கள் கற்பிப்பதென்பதற்கு வாழ்க்கை ஒரு தனிப்பட்ட முறையை வகுத்திருக்கிறதே! இந்த முன்னுரை, அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுத்த பாடத்தை பல வருடங்களுக்குப் பின் பதிவு செய்யும் முயற்சி,

மகேஷுடையதும் என்னுடையதுமான கதை புதியதொன்றுமில்லை. மகேஷ் என்ற இந்த அபூர்வமான மனிதர் தன் ஒளி வீசும் ஆளுமையையும் வலிமையையும் புற்று நோய்க்குத் தாரை வார்க்க வேண்டி வந்ததை எங்களைச் சார்ந்த பலரும் அறிவார்கள். அவரை இந்த நோய் தாக்கிய மூன்று முறைகளிலும் அவர் அந்த நோயின் பிடியிலிருந்து மீண்டு வந்ததற்கு காரணம் அவருடைய வாழ்க்கையை அணுகும் முறை மட்டுமில்லை. புற்று நோய் நிறுவனத்தில் தங்களை சேவை செய்வதற்காகவே அர்ப்பணித்துக் கொண்ட மருத்துவர் குழாமும் தான் என்பது பலருக்கும் தெரியும்.

நாங்கள் முதன் முதலாக புற்று நோய் மருத்துவசாலைக்கு வந்த போது நடந்தவையெல்லாம் ஒரு பனி மூட்டத்தினுள் நடப்பது போல் தெளிவின்மையாக இருந்தன. எங்களுக்கு அங்கு ஒருவரையும் தெரியாது; அங்கு வந்து கூடும் ஆயிரக்கணக்கான புற நோயாளிகளில் ஒருவராகத்தான் நாங்களும் இருந்தோம். நோயாளிகளின் பெயர்கள் தொடர்ந்து கூவப்படும் ஒலிகளில் எங்களைத் தாண்டிப் போனவர்கள் பற்றிய கவலையில் இருந்தோம்.

எங்களுக்கான தீர்ப்பை அறிய நாங்கள் ‘படேல் ப்ளாக்’ ல் காத்திருந்து எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. மகேஷுடைய குடும்பத்தினரும் சில நண்பர்களும் அந்த அறையில் எங்களுடன் இருந்தனர். அப்போது மகேஷின் இருதயத்திற்கும், நுரையீரலிற்கும் அருகே குடியேறியிருந்த சதை பிண்டத்தின் தன்மையைக் கண்டறிய தோரோ கோடோமி என்னும் பரிசீலனை செய்ய அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப் படவேண்டும் என்று எங்களுகு அறிவிக்கப் பட்டது. அப்போது 26 வயதேயான என் மனதில் இதன் தீவிரம் ஆழமாகப் பதியவில்லை. அவ்வளவு பரவலாக இருந்ததென்றும் கூற முடியாது. அப்போது எனக்குத் தெரிந்ததெல்லாம் வாழ்க்கையின் வினோதங்களை ஆர்வமுடன் எதிர்கொள்ளும் இந்த மனிதர் ஒரு அறையில்

அடைக்கப்பட்டு, அறுவைக்கு உட்படப் போகிறாரென்பது மட்டுமே. ஆனால் பின் நிகழ்ந்த்தென்னவோ ஒரு நீண்ட தொடர் கதை. அவை ஒரு புத்தகமாகப் பதிவு செய்யப்பட வேண்டியதென்றாலும் இப்போது நினைவில் இருப்பதெல்லாம் மிகக்குறைந்த வசதிகள் கொண்ட அறைகளில் தங்கியும், உடல் நிலைகளின் ஏற்றத்தாழ்வுகளை ஒத்து நல்ல மற்றும் மோசமான தருணங்கள் பலவற்றையும் கடந்தும், ஒரு வருட காலச் சிகித்சை பெற்ற பின் மகேஷுக்கு நோயிலிருந்து விடுதலை கிடைத்து அவருக்கு மறு வாழ்வு கொடுக்கப்பட்டதும் அதை அவர் அழகாக வாழ்ந்தாரென்பதும் தான். மருந்து, மனம், உணர்வுகள் மூன்றும் இணைந்து செயல்படும் போது உண்டாகும் விளைவிற்கு அவர் ஒரு தெள்ளத் தெளிந்த உதாரணமாகத் திகழ்ந்தார். ஆனால் அந்த நோய் மீண்டும் தன் தலையைத் தூக்கியது - வாழ்விற்கும் சாவிற்கும் இடையே உள்ள மெல்லிய இடைவெளியை உணர்த்துவது போல மருத்துவ மனைக்கு மீண்டும் போக வேண்டாமென்ற மகேஷின் மறுப்புகளையும் மீறி (அவர் செல்ல மறுத்தது அவருக்கு அந்த இடம் பிடிக்காததால் அல்ல - அந்த சிகித்சை, குமட்டல்கள், ஊசித்துளைகள், இயல்பு வாழ்க்கையிலிருந்து வெகு தூரம் விலகியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் - இவைகளைப் பற்றிய பயம் உருவாக்கிய எதிர்ப்பு) மீண்டும் புற்று நோய் மருத்துவமனைக்குச் செல்லத்தான் நேர்ந்தது.

மருத்துவர்கள் சிகித்சை முறைகளில் பல்வேறு மாறுதல்கள் இருக்குமென்று அவருக்கு உறுதி அளித்தார்கள். பல முக்கியமான சோதனைகள் மயக்க மருந்து கொடுத்துச் செய்யப் படுமென்பதுடன், குமட்டலைத் தடுக்க நல்ல மருந்துகளும் வந்து விட்டிருந்தன. சுருக்கமாகக் கூறினால் 6 மாதங்களுக்கு சிகித்சை நடந்தது. அது உடல் வலியும் மனதில் பயமும் கொண்ட பல தருணங்களையும் உள்ளடக்கி இருந்தது. ஸெப்டிசீம்யா வந்து ஒரு முறை தீவிர சிகித்சை அறையில் மகேஷ் தங்க வேண்டி வந்தது நினைவிற்கு வருகிறது. என்னை நம்புங்கள் - அது ஒன்றும் ஒரு அழகான இடமில்லை, ஆனால், அங்கிருந்த மருத்துவர்களைப் போலவே சேவை மனப்பான்மை கொண்ட செவிலியர் குழாமின் நட்பினாலும், ஊக்கத்தினாலும் நாங்கள் அவையெல்லாவற்றையும் கடந்து வந்தோம்.

அதன் பிறகு சில நாட்களுக்கு அந்த சிகித்சை மன்றத்தைப் பார்க்காமல் இருக்க முடிந்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. எனினும், இதற்குள் அடங்கியிருந்தவர்களில் அனேகம் பேர் எங்களுக்கு ஆப்த நண்பர்களாகவே ஆகிவிட்டிருந்தார்கள். மகேஷ் அவர்களை ஒரு நாள் தன்னுடன் விருந்துண்ண வீட்டிற்கு அழைக்க வேண்டுமென்று விளையாட்டாக கூறியது கூட உண்டு. ஆனால் அதை நிறைவேற்றும் சந்தர்ப்பம் தான் வரவேயில்லை. அவர்களுடைய உறவையும், புற்று நோய் மன்றத்தையும் நாங்கள் மறக்காமல் இருப்பதற்கென்றே வருவது போல நோய் மீண்டும் வந்தது!

ஆனால் இந்த முறை மகேஷின் உடல் ஓய்ந்து போய்விட்டிருந்தது. ஆத்மாவும் உள்ளமும் தொடர்ந்து போராடத் தயாராக இருந்த போதிலும் உடல்

ஒத்துழைக்கவில்லை. ஒரு தளராத போராட்டத்திற்குப் பின் அந்த மனிதர் போராடுவதை நிறுத்தி விட்டார். மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்துவிட்டனர். அவர்கள் இத்தகைய நிலைமையை எதிர் பார்க்காததால் தோன்றியதல்ல அந்த அதிர்ச்சி; உற்றார் உறவினர் போல அவர்களும் மகேஷின் போராடும் வலிமையின் முன் நோய் தோற்றுவிடும் என்று நம்பியதால் வந்த அதிர்ச்சி அது. அம்மருத்துவமனை அளிக்கும் முக்கியச் செய்தி தைரியம், நம்பிக்கையுடனான அணுகுமுறை மற்றும் நோயைப் பற்றிய பொது அறிவு ஆகியவற்றைக்கொண்டு புற்று நோயை வெல்ல முடியுமென்பதே. இதற்கு ஓர் சிறந்த உதாரணமாக அவர்கள் மகேஷைக் கருதியதால்தான் அவர்களுக்கு இந்த ஏமாற்றம்.

அத்துடனான பல வருடங்களின் தொடர்பால் நாங்கள் இந்த மருத்துவமனை ஏழைகளுக்கு எவ்வளவு அர்ப்பணிப்புடன் சேவை செய்கிறதென்பதைக் கண் கூடாகக் கண்டிருந்தோம். இந்த நோயின் சிகித்சையும் பின் தொடரும் மருத்துவ உதவிகளும் பெற பெரிய அளவில் பணம் தேவைப்படுகிறது என்பது ஒரு துர்பாக்கியம்தான். நோயாளிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உடல், உள்ள பலத்துடன் நிதி நிலைமையையும் சரிக்கட்டி சமன் படுத்தி போராட வேண்டிய நிலை ஒரு சவாலாக இருப்பது மகேஷின் மனதை பெரிதும் பாதித்தது. அதனாலேயே அவர் தன்னுடைய இறுதி விருப்பமாக மருத்துவமனையைச் சார்ந்தவர்களுக்கு எந்த விதத்திலாவது உதவ வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார். படுக்கையில் பலவித மருந்துகள் அவர் உடலில் செலுத்தப்பட்டிருந்த நிலையிலும் அவர் மருத்துவர்களுடன் நிதி திரட்டும் வகைகளைப் பற்றி விவாதித்தது என்னால் ஒரு போதும் மறக்க இயலாது. அவருடைய அந்த இறுதி ஆசையை நிறைவேற்ற அவருடைய நண்பர்களெல்லாம் (அவர்களெல்லாருக்கும் கடவுளின் துணை எப்போதும் இருக்கட்டும்) ஒன்றிணைந்து, 'மகேஷ் நினைவு அறக்கட்டளை' என்ற அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கினார்கள். இந்தக் கட்டளை புற்று நோய் மன்றத்திற்கு நிதி திரட்டுவதன் மூலம் சிகித்சை சிலவுகளை எதிர்கொள்ள முடியாத பல குழந்தைகளுக்கு உதவியுள்ளதை கூறிப்பாகக் கூறவேண்டும். மகேஷிற்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம்; அந்தப் பிஞ்சுகள் உடல் வருந்துவதை பார்க்க அவரால் முடிந்ததேயில்லை; அவர்களுடைய உபாதைகளைக் குறைத்து ஆறுதலளிக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று அவர் விரும்பினார்.

அறக்கட்டளை நிதி திரட்டுவதற்காக நடத்திய முதல் நிகழ்ச்சி ஏ.ஆர். ரஹ்மானின் இசை நிகழ்ச்சி. இது இக்கட்டளை செய்து வரும் சேவைகளைப் பற்றிய உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியதோடு குழந்தைகள் தங்கி சிகித்சை பெற்று குணம் அடைய தனியான ஒரு இடம், ஒரு குழந்தைகள் பிரிவைக் கட்ட உதவியது. அக்டோபர் 5 2003 அன்று இக்கட்டிடத்திற்கான பூமி பூஜை அடையாரில் உள்ள பழைய மருத்துவமனையின் அருகே நடந்த்து. அது முழுமை பெறும் போது அங்கு புது நம்பிக்கையுடனும், போதிய அளவு உடல்

வலிமையுடனும்  குழந்தைகள் ஓடித் திரிவார்கள், அவர்களினுள் மகேஷின் மலர்ந்த புன்னகையை கண்டிப்பாகக்  காண்போம்.

# எனது அனுபவங்கள்

ஜயஸ்ரீ ராஜன்

என் பெயர் ஜயஸ்ரீ ராஜன். நான் என் அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 1991 ல் எனக்கு புற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. தற்பொழுது நான் கிட்ட தட்ட இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். கல்யாணமான ஒன்றரை வருடங்களில் 22வது வயதில் (ஒரு ஆறு மாத பெண் குழந்தையுடன்) இருந்த எனக்கு ஹாட்ஜ்கின் லிம்போமா (Hodgkain Lymphoma) என்ற கேடு விளைவிக்கக்கூடிய வியாதி இருப்பதாக மருத்துவ சோதனைகளின்படி தெரிய வந்தது. அடையார் புற்று நோய் மருத்துவ சாலையில் சேர்க்கப்பட்டு கீமோதெரபி மற்றும் கதிர் வீச்சு மூலம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சிகிச்சை காலத்தில் என்னுடைய மாமியார் குழந்தையைப் பார்த்துக்கொண்டார். அப்பொழுது நான் என் சினேகிதிகள் மற்றும் உறவினர்களுடன் தங்கிக் கொண்டிருந்தேன். சிகிச்சை காலம் முற்றிலும் என் தாய் மற்றும் கணவரின் முழு ஆதரவு - என் மனதிற்கும் உடலிற்கும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. எனது சகோதரிகளும் மற்றும் நெருங்கிய உறவினர்களும் காட்டிய பரிவு இன்றும் நினைவிருக்கிறது. எனது சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு மார்பகப் புற்று நோய் (Carcinoma)) எனக்கு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. நான் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன்; தற்பொழுது மருந்துகள் சாப்பிடுகிறேன். நோய் முற்றுவதற்கு முன் நாம் மருத்துவர்களின் ஆலோசனை பெறவேண்டும்; அப்போதுதான் மருத்துவர்கள் நமக்கு பயனளிக்கக் கூடிய பூரண சிகிச்சை அளிக்க முடியும். காலம் தாழ்த்தினால் வியாதி பரவக்கூடும்; அதனால் சிகிச்சை காலம் நீடிக்கக்கூடும்.

எனக்கு ஏன் இந்த வியாதி மறுபடியும் வந்தது என்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஆனால், நாம் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருந்தால், வியாதியை நிச்சயமாக குணப்படுத்த முடியும். இந்த வியாதி யாருக்கும் வரக்கூடியது; காலம் தாழ்த்தாமல் வியாதியை கண்டுபிடித்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

சிகிச்சையை விட முக்கியமானது மருத்துவர்களால் நிர்ணயிக்கப் பட்ட தினங்களில் தவறாமல் சிரத்தையுடன் பரிசோதனைகளைச் செய்து கொள்வது தான்.

இறுதியாக ஒன்று. மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அளித்த முழுமையான ஒத்துழைப்பையும் அவர்களுடைய மகத்தான சேவையையும் எனது கடைசி மூச்சு வரை மறக்க மாட்டேன்.

# உங்களால் அதனை எதிர் கொள்ள முடியும்

**சுமித்ரா கல்யாணராமன்**

அது 1994 வருடத்தின் கோடைக்காலம். தொடர்ந்து இருந்து வந்த கர்ப்பப்பை ரத்தக் கசிவிற்காகவும், சில நேரங்களில் ஏற்பட்ட அதிகமான உதிரப்போக்குக்காகவும், எனக்கு டி அண்ட் சி (D & C) செய்து கொள்ள வேண்டி வந்தது. அப்போது செய்யப்பட்ட பயாப்ஸியில் (Biopsy) கர்ப்பப்பையில் புற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. என் முழுக் குடும்பமும் அதிர்ச்சியில் ஆழ்ந்தது. அத்துடன் குடும்பத்தில் பணம் ஈட்டும் ஒரே நபர் நான். எனக்கு செய்து முடிக்க வேண்டிய கடமைகள் பல இருந்தன. அந்த சமயத்தில் என் மூத்த மகளுக்கு மட்டும் தான் திருமணம் ஆகி இருந்தது. என்னுடைய இரண்டாவது பெண் ஒரு வாரத்தில் மேல் படிப்பிற்காக யு.எஸ் போகும் ஆயத்தத்தில் இருந்தாள். என் மகன், என்னுடைய குழந்தைகளில் கடைசி, படித்துக்கொண்டிருந்தான்.

லேப்ர்ஸ்கோப் முறையில் என்னுடைய முழு கர்ப்பப்பையும் ஹிஸ்டரெக்டமி செய்யப்பட்டு அகற்றப்பட்டது. கர்ப்பப் பையின் உள்ளே படர்ந்திருக்கும் எண்டோமெட்ரியத்தில் புற்று நோய் இருப்பது இப்போது செய்யப்பட்ட பயாப்ஸியில் மேலும் உறுதி செய்யப்பட்டது. என் நோயை எண்டோமெட்ரியத்தில் ஏடினோகார்ஸினோமா - முதல் கட்டமென்று வகைப் படுத்திக் கூறினார்கள். அது நோயின் ஆரம்ப நிலை. முதற்கட்டம்.

கர்ப்பப்பை அகற்றப்படும் அறுவை சிகிச்சைக்கு அளிக்கப் பட வேண்டிய முக்கிய வழிமுறைகளைப் பற்றி என் மூத்த மகள் பல மருத்துவர்களிடமும் அவர்களுடைய அபிப்ராயங்களையும் கேட்டறிவதற்காக சந்தித்தாள். அவர்கள் அனைவரும் ஒரேமுகமாகக் கூறியதென்னவோ அடையாரிலிருந்த புற்று நோய் மன்றம் (WIA) தான் அனைத்திலும் சிறந்ததென்பது தான். பின் நாங்கள் அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவரைச் சந்திக்க பல் வேறு முயற்சிகள் செய்து கடவுள் அருளால் அதைப் பெற்றோம். என்னைப் பரிசோதித்த பின் அவர் முதலில் என்னிடம் கூறியது,"உங்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. கவலை வேண்டாம்" என்பதுதான், நோயின் ஆரம்ப நிலையில் இருந்ததால், முழுமையான ஹிஸ்டரெக்டமி செய்யப்பட்டிருந்த போதிலும் நான் நான்கு வாரங்களுக்கு கதிரியக்கச் சிகிச்சை பெற வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. உடலில் எங்காவது ஒளிந்து மறைந்திருக்கக் கூடிய புற்று நோய் உயிரணுக்கள் வேறு எங்கும் பரவி விடாமல் இருக்கத்தான் இந்த முன்னேற்பாடு.

சிகிச்சையின் போது ஏற்பட்ட பக்க விளைவுகளை நான் தைரியத்துடனும் மன உறுதியுடனும் சகித்துக் கொண்டேன். சிகிச்சையின் முடிவில் நான் குணமாகி விடுவேனென்ற நம்பிக்கையை எனக்கு பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி

பாபாவிடமிருந்த பூரண விஸ்வாசம் அளித்தது. எட்டு வாரங்களுக்குப் பிறகு நான் முழுவதும் குணமாக்கப்பட்டு மீண்டும் பணியில் சேரலாமென்று கூறப்பட்டது. என்னுடைய சிகிச்சையின் ஒவ்வொரு கட்டத்திலும் அன்புடனும், அக்கறையுடனும் என் உள்ளத்தில் நம்பிக்கை ஊற்றை தொடர்ந்து ஊறச்செய்த புற்று நோய் மன்றத்தின் அனைத்து மருத்துவர் குழாமிடம் என் மனதில் தோன்றும் மனமார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கூற வார்த்தைகளில்லை. முதலில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் கடைசியாக வருடத்திற்கு ஒரு முறையும் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டுமென்று எனக்குப் பரிந்துரைக்கப்பட்டது. நோய் அடையாளம் காணப்பட்டு சிகிச்சையும் அளிக்கப்பட்டு 16 வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் இப்போதும் நான் உரிய காலப் பரிசோதனைகளுக்குப் போய் வருகிறேன். இடையிடையே சாதரணப் பரிசோதனைகளுடன் அல்ட்ரா ஸௌண்ட் மேம்மோக்ராம், எக்ஸ் ரே போன்ற பரிசோதனைகளும் செய்யப் படுகின்றன.

எனக்கு இப்போது 72 வயது ஆகிறது. நான் வேலை செய்த நிறுவனத்தில் 60 வயது வரை பணி செய்தேன், கடந்த 12 வருடங்களாக ஓய்வடைந்த பின்னர், எனது நேரத்தை என் குழந்தைகளை பார்ப்பதற்கு பிரயாணம் எய்து கொண்டும், சத்திய சாயி நிறுவனத்தில் சேவை செய்து கொண்டும் மகிழ்ச்சியுடன் கழித்து வருகிறேன். இவை அனைத்தையும் சாத்தியமாக்கியது எனது புற்று நோய் ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்கப் பட்டு உடனடியாக சரியான சிகிச்சை அளித்ததும் அதை அளித்த மருத்துவர்களும் அவர்களுடைய குழுக்களும் எனக்குக் கொடுத்த தைரியமும் மட்டுமே. நான் என்றும் அவர்களுக்கு நன்றியுள்ளவளாக இருப்பேன். 'ரீ யூனியன் டே' (Reunion day) சந்திப்புகளை நான் ஒரு போதும் தவற விடுவதில்லை. அங்கு மிக உக்கிரமான புற்று நோய் தாக்குதல்கள் பற்றியும், அதிலிருந்து குணம் பெற்று ஆரோக்கியமாக இருப்பதையும் பற்றி கேள்விப்படும்போது, புற்று நோயை குணப்படுத்த முடியுமென்பது உறுதியாகிறது. ஒருவர் கவனத்தில் கொள்ள வேண்டிய விதிமுறைகள் என்னவென்றால்

1. உடலில் அசாதாரணமான வளர்ச்சி, கட்டிகள் அல்லது அறிகுறிகள் தென்படுவதைக் கவனிக்காமல் இருந்து விடாதீர்கள்
2. சரியான மருத்துவமனை மற்றும் மருத்துவரை தேர்ந்தெடுங்கள்
3. உரிய சிகிச்சையை பெறுங்கள்
4. குணமான பின்பும் தொடர்ந்து செய்ய வேண்டியவற்றைப் புறக்கணிக்காதீர்கள்.
5. உங்கள் நம்பிக்கையை ஒரு போதும் இழக்காதீர்கள்.

உங்கள் நம்பிக்கையான மனப்போக்கும் மனோதிடமும் 50% மற்றும் சிகிச்சை 50% என்னும் விகிதத்தை சார்ந்து நீங்கள் குணமடைவது இருக்கும்.

# திருமதி ராதா மோஹனின் மருத்துவக் குறிப்புகள்

பெயர் மாற்றப்பட்டுள்ளது

1985ல் சந்தோஷமாக திருமணம் செய்து கொண்டு, ஒரு மகனும் உள்ள தம்பதியான எங்களை திருமதி ராதா மற்றும் திரு மோகன் என்று இங்கு அறிமுகம் செய்து கொள்கிறோம். 1903ல் இந்தியாவின் ஒரு மூலையில் இருந்த சிறிய கிராமத்தில் என் கணவரிடம் என் வலது மார்பகத்தில் தோன்றியிருந்த ஒரு சிறிய கருத்த மச்சத்தைப் பற்றி நான் கூறியது ஒரு இனிய காலைப் பொழுதில்தான். அவர் அதைப் பார்த்துவிட்டு அது ஒரு கொப்புளமாக இருக்கக் கூடும் என்றும், கவலைப் பட வேண்டாமென்றும் கூறினார். ஒரு மனைவிக்கு அன்பான கணவனின் வாக்கு வேதமல்லவா? பின் 1994 ல் நாங்கள் சென்னைக்கு மாற்றலாகி வந்த சில நாட்களில் நான் மறுபடியும் என்னுடைய வலது மார்பில் ஒரு சிறிய கட்டியை உணர்ந்தேன். நாங்கள் எங்கள் குடும்ப மகப்பேறு மருத்துவரை ஆலோசனை கேட்டதில் அவர் என் மார்பகங்களை நன்கு பரிசோதித்துவிட்டு ஒரு ‘பேப் ஸ்மியர் ‘ (Pap Smear) பரிசோதனை செய்த பிறகு, மேம்மோக்ராம் (Mammogram) என்னும் மார்பகப் பரிசோதனையை செய்து கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறினார். ஆனால், ஒரு ஆசாரமான பிராமண குடும்பத்தைச் சேர்ந்த, நல்ல பழக்க வழக்கங்களை கொண்ட தம்பதியான எங்களுக்கு அது போன்ற கொடுமையான நோயள் வர வாய்ப்பில்லையென்று கருதி மருத்துவரின் ஆலோசனையை புறக்கணித்தோம்.

சென்னையில் நாங்கள் ஒரு ஃப்ளாட் வாங்கி அதற்கு 1995, மே மாதம், கிரகப் பிரவேசம் செய்வதற்காக காத்திருந்தோம். ஏப்ரல் முதல் வாரத்தில், சிறிய கட்டி இருந்த என் வலது மார்பகத்தில் அவ்வப்போது தோன்றிய - கடந்த ஒரு வருடமாகவே தோன்றிய வலிதான் - சிறிய வலியை உணர்ந்தேன். என் கணவரின் நிறுவன மருத்துவரிடம் போனபோது அவர் என் இரு மார்பகங்களையும் முழுமையாக பரிசோதித்த பிறகு, உடனடியாக ஒரு மேம்மோக்ராம் செய்து கொள்ள வேண்டுமென்று கூறினார். அதன் படியே நாங்கள் அதை செய்து கொண்ட பிறகு அவர் அறுவை சிகிச்சை உடனெயே செய்யப்படவேண்டுமென்று ஏப்ரல் 14ம் தேதி அன்று என்னை அடையாரில் உள்ள புற்று நோய் மருத்துவமனைக்கு போகும்படி பரிந்துரை செய்தார்.

ஏப்ரல் 15, 1955 அன்று நாங்கள் காலையிலேயே புறப்பட்டு அவசர அவசரமாக - அன்று ஒரே நாளில் எல்லா மருத்துவ ஆலோசனைகளும் முடிந்து விடுமென்பது போல் ஒரு எண்ணம். புற்று நோய் மனையைச் சென்றடைந்தோம். மருத்துவமனைப் பணியாளர்கள் எங்களிடம் ஒரு பத்திரத்தைக் கொடுத்து அதில் எங்கள் குடும்பம், உணவு பழக்கங்கள் குடும்பத்தில் எவருக்கேனும் புற்று நோய் இருந்திருக்கிறதா, எங்கள் தினசரி வாழ்க்கை முறை ஆகியவை பற்றிய விவரங்களையெல்லாம் பதிவு செய்யச் சொன்னார்கள். அதை பதிவு செய்யும் போதே, என் மனதில் என்னைப் போன்ற

, உண்மையான, தெய்வ பக்தியுள்ள ஒருவருக்கு புற்று நோய் இருக்க முடியாதென்ற எண்ணம் தான் ஓடிக்கொண்டிருந்தது. தன் அருமைக் குழந்தைகளில் ஒருவளான எனக்குப் போய் கடவுள் அப்படிப்பட்ட சோதனைகளை அளிப்பாரா என்ன? நான் நீடில் பயாப்ஸி (Needle Biopsy) செய்து கொள்ள வேண்டுமென்று பரிந்துறைக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு எனக்கு வந்திருந்தது அதே தான் - 'வலது மார்பகத்தில் புற்று நோய் அது மூன்றாம் நிலையை அடைந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டு, அன்று மதியமே கீமோதெரபியும் (மருந்துகளாலான சிகிச்சை), மறு நாளிலிருந்து கதிரியக்கச் சிகிச்சையும் (Radiation) பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எனக்கு நோய் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றியதால் நான் மருத்துவரிடம் அவர்கள் சரியான 'சாம்பிளை' த்தான் பரிசோதித்தார்களா அல்லது ஒரு வேளை மற்ற ஒருவருடைய ஸாம்பிளோடு தவறுதலாக என்னுடையது கலந்து போய் விட்டிருக்குமோவென்ற சந்தேகத்தை எழுப்பினேன். மருத்துவர் ஒரு மெல்லிய புன்னகையோடு எனக்கு நோயிருப்பதை உறுதி செய்தார். என் கணவரின் நிறுவனம் மருத்துவச் செலவுகளை ஏற்றுக் கொள்ளுமென்பதால் பணத்தைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. அடையாரிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த நாங்கள், நான்காம் வகுப்பில் படித்து வந்த என் ஒன்பது வயது மகனைப் பற்றித்தான் கவலைப்பட்டோம்.

என் கணவர் நான் எடுத்துக்கொண்ட மருந்தின் அளவுகள் பற்றியும், என் நோயின் பெயரையும் பற்றி மருத்துவரிடம் கேட்டார். அதன் பெயர் கார்ஸினோமா. கார்ஸினோமா என்றால் புற்று நோய் என்பது எங்களுக்கு தெரிந்திருக்கவில்லை.. அது வேறு ஏதோ வியாதி என்றும் விரைவில் நான் குணமடைந்து விடுவேனென்றும் நாங்கள் நம்பினோம். கீமோதெரபியுடன் ரேடியேஷன் (கதிரியக்க) சிகிச்சையும் எனக்கு 21 நாட்களுக்கு அளிக்கப்பட்டது. கீமோதெரபி நான்கு சுற்றுகள் அளிக்கப்பட்டபின் நடந்த வழக்கமான ஆலோசனையின் போது எனக்கு அறுவை சிகிச்சை அவசியமென்றும், என் வலது மார்பகம் எடுக்கப்படுமென்றும் அவையெல்லாம் என் நன்மைக்காகத் தான் என்றும் என்னிடம் மருத்துவர்கள் கூறினார்கள்.

உணவு மேசையை சுற்றி உட்கார்ந்து என் கணவருடனும் , மகனுடனும் நான் இதைப் பற்றி பல முறை விவாதித்தேன். அவர்கள் என் மேல் வைத்த அதீத அன்பினால், எந்த விலையானாலும் கொடுத்து என்னை மீட்டு தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்பதிலேயே முனைப்பாக இருந்தார்கள். இதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த நான் என் கணவருக்காகவும் மகனுக்காகவும் வாழவேண்டுமென்று உணர்ந்தேன். என் சம்மதத்துடன் ஸெப்டம்பர் 1995 ல் ஒரு செவ்வாய்க்கிழமையன்று என் அறுவை சிகிச்சை நடந்தேறியது. உறவினர்களிடம் பார்க்க வருவதையும், உணவு கொண்டு வருவதையும் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். நான் வெகு

சீக்கிரம் குணமாகத் தொடங்கி நான்கு ஐந்து நாட்களுக்குள்ளாகவே என்னால் கையை உபயோகித்து ஒரு காகிதத்தில் எழுத முடிந்தது. என் கணவர் எனக்கு மிக்க உற்சாக மூட்டினார். எங்கள் குடும்பத்திற்கு தீபாவளிக்குத் தேவையான துணிமணிகள் மற்றும் பட்டாசுகளின் பட்டியலை என்னைக் கொண்டு என் கணவர் எழுத வைத்தார். அதன் பிறகு, சென்னை பல்கலைக் கழகத்தின் பொது மேலாண்மை முதுகலை பட்டத்திற்கான பாடங்களை எழுதி பாட திட்டத்தைப் பூர்த்தி செய்ய உந்தினார். என் மருத்துவர் நான் எழுதுவதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததுடன் அதை நான் தொடர்ந்து செய்வது விரைவிலேயே இயல்பு வாழ்க்கைக்கு நான் திரும்ப உதவுமென்றும் கூறினார்.

மருத்துவ மனையிலிருந்து திரும்பிய பின்னரும் நான் குறிப்பிட்ட இடைவெளிகளில் செய்து கொள்ள வேண்டிய பரிசோதனைகளுக்காக தொடர்ந்து மருத்துவ மனைக்குச் சென்று வந்தேன். இப்போது நான் 15 வருடங்களைக் கடந்து வந்து விட்டேன். என் உடல் நிலை சரியாக இருக்கிறது.

நான் அனைத்து நோயாளிகளையும் அவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்று வாழ்த்துகிறேன். புற்று நோய் இப்போது குணப்படுத்த முடியாத பயங்கரமான நோய் அல்ல. மனதில் நம்பிக்கையுடனும் மருத்துவர்களிடம் முழு விசுவாசமும் கொண்டு இருங்கள்.

# புற்று நோயுடனான எனது போராட்டம்

மஹாலகஷ்மி சூர்யாநந்தம்

என் பெயர் மஹாலக்ஷ்மி சூர்யாநந்தம்; என் கணவரின் பணி ஓய்விற்குப் பிறகு 1986 லிருந்து தில்லியிலிருந்து இடம் பெயர்ந்து திருவண்ணாமலையில், ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு அருகில் வசித்து வருகிறேன்.

இதோ என் இயல்பான வாழ்க்கையில் அதிரடியாகப் புகுந்த புற்று நோயின் கதை.

மார்ச் 1995 ஆரம்பத்தில், ஒரு இன்பகரமான காலையில், 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஸில், "மார்பகப் புற்று நோய் - அறிகுறிகளும் சிகிச்சையும்" என்ற தலைப்பில் டாக்டர் வி சாந்தா அவர்கள் திருப்பதியில் பேசிய பேச்சிலிருந்து சில பாகங்களைப் படித்தேன். அப்போது, எனது வலது மார்பகத்தில் ஒரு மச்சத்தைப் போன்ற சிறிய சிகப்பான தடித்த புள்ளி சில மாதங்களாக இருப்பது என் நினைவில் நிழலாடியது; ஆனால் அதனால் எனக்கு ஒருவித தொந்திரவும் இல்லையே! அந்த புற்று நோய் பற்றிய செய்தியை படித்தவுடன், எனது கணவர் எங்களுடைய குடும்ப மருத்துவரை உடனேயே நாங்கள் சந்திக்க வேண்டுமென்ற முடிவெடுத்தார்.

அடுத்த நாளே நாங்கள் சென்னை வந்தோம். எங்களுடைய மருத்துவரால நான் பரிசோதிக்கப்பட்டேன். மருத்துவர், என்னுடன் வந்த என் சகோதரியிடம் (ஓய்வு பெற்ற ஃபார்மொகாலஜி பேராசிரியர்) காலம் தாழ்த்தாமல் உடனேயே அடையார் புற்று நோய் மருத்துவமனைக்கு என்னை அழைத்துப் போகச்சொன்னார். எங்கள் மூவருக்கும் அது பெரிய அதிர்ச்சி தான்.

அது ஒரு சனிக்கிழமை. புற்று நோய் மனையிலுள்ள ஒரு மருத்துவ சமூக சேவகி என் குடும்பம், சூழ் நிலை பற்றிய பல கேள்விகளைக் கேட்டுவிட்டு, திங்கட்கிழமை அன்று மருத்துவரைப் பார்க்கச் சொன்னார். நான் பார்த்த மருத்துவர் எனது கல்லூரித் தோழி (அவரை வெகு நாட்களாக சந்திக்கும் சந்தர்ப்பம் நேரவில்லை) பரிசோதனைக்குப் பின், நான் கீமோதெரபி, அறுவை சிகிச்சை (Chemotheraphy, Surgery) ஆகியவை செய்து கொள்ள வேண்டும். அதன் பின் நான் குணமாகி விடுவேன் என்றார். நான் பதட்ட சுபாவமுள்ளவளாதலால் அவரிடம் நான் முற்றிலும் குணமடைந்துவிடுவேன் என்று உத்திரவாதம் அளிக்கக் கோரினேன். அவர் உடனே, "மஹாலக்ஷ்மி, என்னை உனக்கு நன்றாகத் தெரியும். நான் ஒரு போதும் பொய் சொல்ல மாட்டேன் என்றார். அவர்மேல் நான் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை என்னை, "நீங்கள் நிர்ணயிக்கும் எவ்விதமான சிகிச்சையையும் முழுமையாகவும் தயக்கமில்லாமல் செய்து கொள்ள தயாராக உள்ளேன்" என்று சொல்ல வைத்தது. அத்துடன் அந்த சம்பாஷணை முடிவடைந்தது.

என் மருத்துவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் கடவுளின் சரணாகதியுடனும் நான் புற்று நோய் மன்றத்தில் மார்ச் 10, 1995 அன்று அனுமதிக்கப்பட்டேன். அதன் பின் மூன்று அமர்வுகள் கீமோதெரபி சிகிச்சை, மே 9, 1995 அன்று செய்யப்பட்ட மேஸ்டெக்டமிக்கு முன்னும் பின்பும் செய்து கொண்டேன். அதைத் தொடர்ந்து முப்பது அமர்வுகள் கதிர் வீச்சு சிகிச்சையும் செய்யப்பட்டன. முழு சிகிச்சையும் செய்து கொள்ள ஐந்து மாதங்கள் பிடித்தன. அதைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்கொரு முறை பரிசோதனை மூன்று வருடங்களுக்கும், ஆறு மாதத்திற்கொரு மூறை பரிசோதனை அடுத்த மூன்று வருடங்களுக்கும் அதன் பின் வருடத்திற்கொரு முறை பரிசோனைகளும் புற்று நோய் மருத்துவ மனையில் செய்யப்பட்டன. பதினைந்து வருடங்களுக்கு பிறகு, இன்று நான் எனது எண்பத்தி நான்காவது வயதில் மனதும் உடலும் பூரண திடத்துடன் உள்ளேன்; சில சமயங்களில் எனக்கு புற்று நோய் வந்ததா என்று கூட ஆச்சரியமாக இருக்கிறது! எல்லாம் கனவு போலிருக்கிறது.

மேலும், இங்கு ஒன்றை நான் பதிவு செய்கிறேன்.சிகிச்சையில் என் ஆன்மீக பாதையில் செய்யும் ஒரு சாதனையாக - ஒரு வித வழிபாடாகக் - கருதி முழு மனதுடன் செயல்பட்டேன். இந்த மனப்பான்மை எனக்கு வந்த வியாதியை சுலபமாக வெல்லும் வலிமையைக் கொடுத்தது என்று உறுதியாக நம்புகிறேன்.

என்னுடைய சிநேகிதிகளில் பலரும் என்னிடம் கேட்பதுண்டு ‘ உன்னைப்போன்ற நல்லவர்களுக்கு புற்று நோய் ஏன் வருகிறது?” அவர்களுக்கு என் பதில், “புற்று நோய் வருவதென்பது அவமானப்பட வேண்டியதோ பாவத்தின் சின்னமோ இல்லை. ரமண மஹரிஷி, மற்றும் ராம கிருஷ்ண பரமஹம்ஸர் போன்றவர்களுடன் என்னையும் இருத்திப் பார்ப்பது எனக்கு மகிழ்ச்சியே.”

இது விளையாட்டாகக் கூறப்பட்டதெனினும், நாம் நடைமுறை உண்மை என்னவென்று யோசிக்க வேண்டும்; புற்று நோய் தவிர்க்க முடிந்த, குணப்படுத்த முடிந்த ஒன்று, நம்பிக்கையுடனான அணுகுமுறை, குடும்ப ஆதரவு, உங்கள் சிறப்பான மருத்துவரிடமும், மருத்துவமனையிலும் முழுமையான நம்பிக்கை, தளராத மன ஊறுதி, மகிழ்ச்சியான மன நிலை, பொறுமை இவை அனைத்துடனும் இணைந்து இறை ஆணைக்கு முழுவதுமாக உங்களை அர்ப்பணிக்கும் போக்கும் இருக்குமானால் உங்களுக்கு நிச்சயமாக மகிழ்ச்சியான மனதிற்கு திருப்தி அளிக்கும் உபயோகமான வாழ்க்கை வாழக் கிடைக்கும். அதனால் நோயை எதிர்த்து நில்லுங்கள்; அதனுடன் போராடுங்கள், அது புறமுதுகு காட்டி ஓடட்டும்; உங்களுக்கு எக்காலத்திற்கும் அதனிடமிருந்து விடுதலை கிடைக்கும்.

# புற்று நோயை எதிர்த்து நின்ற இளம் நோயாளி

மிஹிர் எம் ஷா

நான் அந்த மருத்துவமனையுள் முதன் முதலாக புகுந்தபோது என் கவனத்தை கவர்ந்தவை மருத்துவமனைக்கு வெளியே, ‘புற்று நோய் மருத்துவமனை WIA’ என்று கல்லில் பொறிக்கப் பட்ட எழுத்துக்கள் தாம். இங்கு என்னை ஏன் அழைத்துப் போகீறார்கள்? எனக்கு புற்று நோய் இருக்கிறதா என்ன? என்ற எண்ணங்களுடன் தான் நான் அக்கட்டிடத்துள் நுழைந்தேன்.

நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொள்ள முடியாத 1 வயது இளம் சிறுவன் நான்; என் பெற்றோர் எனக்கு என்ன கோளாறு என்பதைப் பற்றி எதுவும் கூறியிருக்கவில்லை; நானும் எனக்கு என்ன நேர்ந்திருக்கிறதென்பது பற்றி அவர்களிடம் எதுவும் கேட்கவில்லை; இன்று வரை நான் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்காமல் இருந்தேனென்பது எனக்கு ஒரு புதிராகவே இருக்கிறது. ஆனால் அப்போது அந்த மருத்துவ மனைக்குள் நுழையும் போது அந்தக் கட்டிடத்தின் பிரும்மாண்டமான தோற்றம் என் மனதில் திடீரென்று ஒருவித பிரமிப்பை ஏற்படுத்தியது. வானளாவிய கட்டிடம் ஒன்றைக் கற்பனை செய்திருந்த எனக்கு, இது மருத்துவமனை என்பதை நம்பமுடியவில்லை. மரங்கள் நிறைந்த விசாலமான இடத்தையும் மக்கள் அங்கும் இங்கும் போய்க்கொண்டிருந்ததையும் பார்த்த போது, அது நன்றாக ஓய்வெடுத்து உடல் நலம் பேணக்கூடிய ஒரு ஓய்வு விடுதி போலவே தோற்றம் அளித்தது. மருத்துவர் குழாமை அங்கு கண்ட போதுதான், அது “புற்று நோய் நிறுவனம்” என்பதே என் நினைவில் வந்தது. என்னை அங்கு அனுமதிக்க வேண்டியதற்கான பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, நான் “படேல் பிளாக்கில்” அனுமதிக்கப்பட்டேன். அங்கு என்னை மலர்ந்த முகத்துடன் மருத்துவர்கள், செவிலியர் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் குழு வரவேற்றது. அன்றே சில மருத்துவர்கள் வந்து என்னிடம் எப்படி இருக்கிறேனென்று விசாரித்தார்கள்; ஆனால் நானோ எனக்கு என்ன நேர்ந்துகோண்டிருக்கிறது என்பதைப்பற்றிய விவரங்களை அறிய ஆவலாக இருந்தேன். ஆனால் ஏனோ என்னால் அப்போது அவர்களிடம் ஒன்றும் கேட்க முடியவில்லை. அத்தகைய சந்திப்புகளிற்குப் பின் எனக்கு சிகிச்சை துவங்கியது. அது சாதாரணமான ஒரு நிகழ்வாகப் பார்க்கப்பட்ட போதிலும் எனக்கு மிகவும் துன்பத்தை அளித்த விஷயம் என் தலை முடியை நான் இழந்து ஒரு வழுக்கைத் தலையனாக வலம் வரவேண்டி இருந்ததுதான். என்னால் என் தலை மொட்டையாக இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தத் தடையை கடந்து வர என்னுடைய குடும்பத்தினரும், செவிலியர்களும் அளித்த ஆதரவு மிகவும் உதவின. அந்தக் கால கட்டத்தில் எனக்கு புற்று நோயைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் இருந்ததால் அதைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் என்னுள் அதிகமாகி, நோய் தாக்கிய என் துர்பாக்கியத்தை நொந்து கொள்வதைத் தவிர்த்து நான்

கேள்விகள் கேட்கத் தொடங்கினேன். மருத்துவர்களுக்கும் என்னுடைய ஆர்வத்தைப் புரிந்து கொண்டு பொறுமையாக என் உடல் நிலையை எளிமையான சொற்களில் விளக்கினார்கள். அதை என்னால் முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், அந்த மருத்துவ நோயாளிகளின் கேள்விகளையும் பிரச்சினைகளையும் சிரத்தையுடனும் அக்கறையுடனும் கேட்டுக்கொள்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. இதனிடையே என் சிகிச்சைக்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு முழு மூச்சுடன் நடக்கத் தொடங்கி இருந்தது. ஒவ்வொரு நாளும் பணியில் இருந்த மருத்துவர்கள் என் உடல் மன நிலைகளைப்பற்றி விசாரிப்பதுடன், எனக்கு ஏதாவது தகவல்கள் அறிந்து கொள்ள வேண்டி இருந்தால் அவர்களிடம் கேட்கலாமென்றும் கூறினார்கள். ஒவ்வொரு புதன்கிழமையும் மருத்துவ மனையின் தலைவி என் தந்தையையும் என்னையும் பெயர் சொல்லி அழைத்துப் பேசியதுதான் என்னை மிகவும் வியக்க வைத்த விஷயம். தடுமாற்றத்துடனான ஒரு “நமஸ்தே” தான் என்னால் சொல்ல முடிந்தது. அவருடைய கனிவான குரல் எனக்கு மிக்க மன ஆறுதலை அளித்ததுடன், நான் மிக பாதுகாப்பாக என்னிடம் அக்கறை கொள்பவர்கள் பொறுப்பில் இருக்கும் உணர்வையும் அளித்தது. என்னுடைய சிகிச்சையை மேற்பார்வை பார்த்து வந்த மற்ற மருத்துவர்களான டாக்டர் சாகர், டாக்டர் ரமணன் ஆகியோரும் பெரிய அளவில் ஆதரவு அளித்ததுடன் என் குடும்பத்தினரின் மன அழுத்தத்தையும் வெகுவாகக் குறைத்தார்கள். டாக்டர் ரமணனும் நானும் மிகவும் நெருங்கிப் பழகத் தொடங்கி ஒரு நாள் எங்கள் இருவருக்கும் பிறந்த தேதி ஒன்றேதான் என்பதை கண்டு பிடித்தோம். இன்றும் நாங்கள் இருவரும் சேர்ந்தே பிறந்த நாள் கொண்டாடுகிறோம். சிகிச்சை முழு மூச்சுடன் நடந்ததுடன் என் உடலும் மருந்துகளை செம்மையாக ஏற்றுவந்ததால் மருத்துவர்கள் விரைவிலேயே நான் வீடு செல்ல முடியுமென்ற நற்செய்தியைக் கூறினார்கள். சிகிச்சைக்காலத்தில் என்னுடைய உடல் நிலையில் பல ஏற்றத் தாழ்வுகள் தோன்றி என்னுள், பல சந்தர்ப்பங்களில் பல விதமான அசௌகரியங்களைத் தோற்றுவித்தன. சற்றும் தளராமல் எந்த நேரமானாலும், செவிலிகள் என் உதவிக்கு வர தவறவேயில்லை. ஒவ்வொரு நாள் காலையிலும் நான் புத்துணர்வு பெற அந்த மருத்துவ மனையைச் சுற்றி நடப்பேன். அப்போது அவ்விடத்தின் காவல் காரர்கள் மற்றும் அங்கு பணி புரிந்த வேலைக்காரர்களும் என் உடல் நிலையைப் பற்றி விசாரித்து என்னை ஆசீர்வதித்து, நான் அதிகம் நடந்து களைப்படையக் கூடாதென்று அக்கறையுடனும் அனுதாபத்துடனும் பேசுவார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது எட்டாம் வகுப்பில் படித்து வந்தேன். என் நோய் காரணமாக நான் எட்டாம் வகுப்பின் ஆண்டிறுதிப் பரிஷைகள் எழுத முடியாமல் போனது. மீண்டும் ஒரு வருடம் எட்டாம் வகுப்பிலேயே இருக்க வேண்டி வருமென்றுதான் நினைத்திருந்தேன். பள்ளித் தலைவி என் பெற்றோரை அழைத்து என் உடல் நலம் பற்றிக் கேட்டறிந்து என்னுடைய தகுதியைத் தீர்மானிக்க முனைந்தார். என் பெற்றோர்களுக்கும் நான் இறுதித் தேர்வுகளை எழுதாததால் அடுத்த வகுப்பிற்கு அனுப்பப்படுவேனென்ற நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் பள்ளித் தலைவி அப்படி நினைக்கவில்லை.

நோயின் காரணமாக ஏற்கெனவே மன உளைச்சலில் இருந்த நான் மேல் வகுப்பிற்கு போக முடியாவிட்டால், மேலும் கவலைக்குள்ளாவேன் என்பதை மனதில் கொண்டு என்னை அடுத்த வகுப்பிற்கு போக அனுமதித்தார். இந்த செய்தியைக் கேட்டவுடன் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இன்றும் என்னால் எனக்கு கிடைத்த அந்த வரத்தை மறக்க முடியவில்லை. என்னுடைய வாழ்வில் அத்தகைய மகிழ்ச்சியை நான் உணர்ந்ததே இல்லை. என்னை மருத்துவ மனையிலிருந்து விடுவித்து வீட்டிற்கு அனுப்பிய போது மருத்துவர்கள் நான் என் உடல் நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று அறிவுரை கூறி அனுப்பினார்கள். நான் அவர்களிடம், 'எனக்கு இந்த நோய் மீண்டும் வருமா' என்று கேட்டேன். அவர்கள் புன்னகையுடன் 'நாங்கள் எத்தனை சிரமம் எடுத்திருக்கிறோம், அதனால் உனக்கு இது மீண்டும் வரவே வராது" என்றார்கள். என்னுடைய நலனை உத்தேசித்து அவர்கள் எனக்கு சில நடைமுறை விதிகளைக் கூறினார்கள். நான் தேவைப்பட்ட இடைவெளிகளில் புனர் பரிசோதனகளுக்கு வர வேண்டும். உணவுக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். மற்றும் கூட்டங்களில் செல்வதையும் அதிகமாக உடலிற்கு அயர்வு கொடுப்பதையும் தவிர்க்க வேண்டுமென்றும் கூறினார்கள். இந்த அறிவுடைகளுடன் அவர்கள் எனக்குப் பிரியாவிடை கொடுத்தார்கள். என்னுடைய சிகிச்சை முடிவடைந்து விட்டது. முந்தைய நாங்கு மாதங்களாக சினேகபாவமும் அக்கறையும் கொண்ட முகங்களால் நான் சூழப்பட்டு இருந்ததால் நான் மகிழ்ச்சியுடன் அந்த மருத்துவ மனையை விட்டகன்றேன். இன்று நான் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் பணி புரிகீறேன். அந்த மருத்துவ மனையை விட்டு வந்து இப்பொது ஏழு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஆனால் இன்று நான் இந்த நிலைமையில் இருப்பதற்கு என் குடும்பத்தின் ஆதரவும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பராமரிப்பும் தான் காரணம். நான் என்றென்றும் அவர்களுக்கு நன்றியுடையவனாக இருப்பேன்.

# நம்பிக்கையுடனான சிந்தனைகள் அளிக்கும் மன வலிமை

திருமதி ரமாமணி ரவி

என்னுடைய மகளிர் நோய் மருத்துவர், ஒன்றுமில்லை என்று கூறிய பிறகும் அந்த மிகச் சிறிய கட்டியை சந்தேகக் கண்ணுடன் என்னைப் பார்க்க வைத்தது தான் எது? அதை உள்ளுணர்வு என்பதா அல்லது எப்போதும் என்னை வழி நடத்தி வரும் கடவுளின் கருணை என்று கூறுவதா? உண்மையில் இந்தப் பிரச்சினைக்கு என் உள்ளுணர்வை திறந்து வைத்த கடவுளின் கருணை என்றுதான் அதைக் கூற வேண்டும்.

"மீண்டும் பரிசோதனை எல்லாம் எதற்கு", அம்மாவின் குரலில் தொனித்த எரிச்சல் அவளுடைய அறியாமையால் ஏற்பட்டதல்ல; 25 வருடங்களுக்கு முன், தான் அனுபவித்த வேதனைகளை தன் மகளும் சந்திக்க வேண்டி வருமோ என்ற பயத்தில் எழுந்த கேள்வி அது. "அம்மா, உன்னைப்போல் ஆரோக்கியமாக நான் டாக்டர் சாந்தாவை சந்தித்தே ஆக வேண்டும்." என்பது என் பதிலாக இருந்தது. அது அவருக்கு எந்த வித சமாதானத்தையும் அளிக்கவில்லை. விரைவாகச் செய்யப்பட்ட பரிசோதனகளுக்குப் பிறகு உள்ளே புகுந்து பரவக்கூடிய கட்டிதான் அது என்பது உறுதியானதுடன் அது எந்த அளவில் ஆரம்ப கட்டத்தில் இருக்க முடியுமோ, அந்த அளவில் இருந்தது தெரிய வந்தது. நான் மருத்துவரிடம் கேட்ட முதல் கேள்வி, "டாக்டர், இதன் சிகிச்சை எவ்வளவு நாட்கள் எடுக்கும்? எனக்கு என் மகனின் திட்டங்கள் தொடர்ந்து தடை இல்லாமல் நடைபெறுவதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும்." உடனுக்குடன் வந்தது மருத்துவரின் நம்பிக்கைகுரலில் பதில், "ஆதற்கு 5, 6 மாதங்கள் ஆகலாம். ஆனால் நீங்கள் உங்கள் மகனுடன் செய்யும் வேலைகள் எவற்றையும் நிறுத்த வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் உங்கள் வழக்கமான வேலைகளை தொடர்ந்து செய்து வரலாம்." சிகிச்சையை மேற்கொள்ளத் தேவையான நம்பிக்கை அனைத்தையும் இச்சொற்கள் எனக்கு அளித்தது. 6 மாதங்கள் ஒரு திட்டவட்ட அவகாசமாக இருந்ததுடன், என் மகனுடன் நான் பயணிக்கும் நீண்ட பயணத்தில் அது ஒன்றும் அப்படி அச்சுறுத்தும் கால அளவாக இருக்கவில்லை.

என் மகன் எனக்குக் கற்பித்த பாடம்:

என் கல்யாணத்திற்குப் பிறகு, நான் சட்டம் (LAW) மற்றும் கணக்கர் (CHARTERED ACCOUNTANCY) படிப்புக்கள் படித்தேன். சட்டப் படிப்பில் மூன்று வருடங்களும், பல்கலைக் கழகத்திலேயே முதலாவதாக வந்து மூன்று தங்கப் பதக்கங்கள் பெற்றேன். என்னுடைய மகனுடைய உடலில் ஏதோ கோளாறு என்று தெரிந்த பிறகு, அவனுடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதற்காக நான் என் தொழிலை துறந்துவிட்டேன். அவன் மூளை வளர்ச்சியில் குறைபாட்டு அறிகுறிகள் உள்ள ஒரு குழந்தை (AUTISM) என்று

பரிசோதனைகளால் நிரூபிக்கப் பட்டது. பதினேழு வருடங்களுக்கு முன்பு, அதைப் பற்றிய அதிகத் தகவல்கள் இல்லாத நிலையிலும், என் உள்ளுணர்வு மற்றும் கடவுளின் அருளும் இணைந்து செயல்பட்டதில் என் மகன் பற்பல விதங்களில் நன்றாகவே முன்னேறியிருக்கிறான் என்று நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும். அவன் ஒவ்வொரு வேலையும் செய்து பழக பதினாறு வருடங்கள் இரவும் பகலுமாக உழைத்ததில் தன் வேலைகளை மற்றவர் உதவில்லாமல் தானே கவனித்துக் கொள்ள அவனால் முடிகிறது. அவனுக்கு கண்ணைச் சிமிட்டுவது, விளையாடுவது, ஓடுவது, நடப்பது, பேசுவது, சந்தோஷமாக இருக்கும் போது சிரிப்பது, அடி பட்டால் அழுவது, கோபப்பட்டால் கத்துவது எல்லாவற்றிகும் மேலாக தன் அம்மாவை அடையாளம் கண்டு கொள்வது போன்ற அடிப்படைச் செயல்களையும் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு சின்ன பாகங்களாகப் பிரித்து, படிப்படியாக சொல்லிக் கொடுக்க வேண்டி வந்தது.

ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொரு பாகமாகப் பிரித்து அவனால் அதைச் செய்ய முடியுமா என்பது தெரியாமலும், நான் அப்படிச் செய்வது சரியா இல்லையா என்று தெரியாமலும், மற்றும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேறு வழி உண்டா என்றும்கூட தெரியாமலும் அவன் அவைகளை செய்யத் தூண்டினேன். ஆட்டிசத்திற்கு எதிராகப் போராடுவது கண்ணாமூச்சி விளையாடுவது போலத்தான். உலகம் முழுவதிலும் ஆட்டிசத்தின் காரணிகள் என்ன என்றோ, அதற்கு நிவர்த்தி என்ன என்றோ இனம் காணப்படவில்லை. அதற்கு நிச்சயமான தீர்வோ அந்த தீர்வை அடைய எவ்வளவு நாட்கள் ஆகுமென்பதும் தெரியாது. என் குழந்தை சராசரி குழந்தையைப் போல ஆவானா என்ற கேள்விக்கு பதில் கிடையாது. எதாவது ஒரு பிரச்சினைக்கு தீர்வு இருந்தால் அது பிரச்சினையே இல்லை என்று கடவுள் என்னை உணர வைத்தார். புற்று நோயை நான் எதிர்த்து வெற்றி கொள்ள இது தான் காரணமாக இருக்கலாம்.

புற்று நோயை பொறுத்த வரையில் அதைக் கண்டுபிடிக்க திட்ட வட்டமான பரிசோதனைகள் உள்ளன. சிகிச்சைக்கு வழிமுறைகள் இருக்கின்றன. அதை நிச்சயமாக குணப்படுத்த முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக டாக்டர் சாந்தாவைப் போன்ற கடவுளால் நியமிக்கப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். அவருக்கு தேவையான அறிவும் அனுபவமும் உள்ளன. நான் எதற்கு பயப்பட வேண்டும்? என்னை அவரிடம் அர்ப்பணித்துக் கொண்டு அவர் சொல்வதைச் செய்தால் போதுமே. சிக்கலோ, பிரச்சினையோ, கவலையோ எதுவுமே தேவை இல்லை. பரிசோதனைகளை செய்து கொண்ட பிறகு அது ஒன்றும் அவ்வளவு வலியுள்ளதோ பயங்கரமானதோ இல்லை என்று தெரிந்து கொண்டேன்.

என் தாயின் முன் உதாரணம் எனக்கு பலம் அளித்தது.

என்னுடைய குடும்பத்தில் உள்ள எல்லோரையும் காரண காரிய புள்ளி விவரங்களை முன் வைத்து இந்த நோயை மனதளவில் ஏற்கச் செய்ய

என்னால் முடிந்தது. அதாவது, என் தாய் தவிர மற்ற அனைவரையும் பதினாறு வருடங்கள் இரவும் பகலும் இருந்த வலியைப்பற்றி அன்று ஏதும் குறை கூறாத அவளே தான் அப்போது அனுபவித்த அனைத்தையும் இப்போது பெரிய அளவில் நினைவு கூர்ந்தார். தான் கடந்து வந்த பாதைதானென்றாலும் தன் மகளுக்கு அதே வலி, வேதனை என்று வந்தபோது அது அவரால் தாங்கிகொள்ள முடியாத ஒன்றாக ஆகி இருந்தது. அவள் என் தாய். உலகத்திலேயே மிகச் சிறந்த தாயும் கூட; இதை நான் அழுத்தம் திருத்தமாகக் கூறமுடியும்; ஏனென்றால் அவர் புற்று நோயிலிருந்து மீண்டு வந்தவர் என்ற எண்ணமே எங்கள் மனதில் எழாத வண்ணம் அவர் எங்கள் தலைமுடியை வாரிப் பின்னுவது, எங்களுக்கு எண்ணைக் குளியல் செய்து வைப்பது போன்ற அனைத்து வேலைகளையும் செய்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை ஒன்றை வாழ்ந்ததைத்தான் நாங்கள் காண முடிந்தது. தன் மகள்களுக்கு அதிக பக்ஷ சேவைகள் செய்ய வேண்டுமென்ற மனப்போக்கே அவருக்கு அன்றும் இன்றும் வாழ்க்கயின் உந்துதல்களாக இருக்கின்றனவோ, என்னமோ! இந்த குணங்கள் எல்லாம் அவரிடமிருந்து பெற்றிருப்பதற்கு நான் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். எனக்கும் வாழ உந்துதல் அளித்த மிக முக்கியமான காரணி என் மகனை அவனுடைய அனைத்துப் பிரச்சினைகளிலிருந்து வெளியே கொண்டு வர வேண்டுமென்ற கரிசனமும் உத்வேகமும்தான்.
என் மருத்துவர் - என் தன்னம்பிக்கையை கூட்டுவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

மூன்று சுற்றுக்கள் கீமோதெரபி, 21 நாட்கள் கதிர்வீச்சு சிகிச்சைக்கு பிறகு மேஸ்டெக்டமி மற்றும் முட்டைப்பைகள் (OVERIES) அகற்றப்படும் அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டன. அதற்குப் பிறகு மீண்டும் இரண்டு சுற்றுக்கள் கீமோ அளிக்கப்பட்டன. அறுவை சிகிச்சைக்குப் பிறகு நான் படுக்கையில் இடது கையை மில்லிமீட்டரின் ஒரு சிறிய பாகம் கூட நகர்த்த முடியாமல் தவித்தது இன்றுதான் போலிருக்கிறது. நான் மருத்துவரிடம் “டாக்டர், நான் என் மகனை அவனுடைய வகுப்புகளுக்கு அழைத்துச் செல்ல எப்போது மீண்டும் காரை ஓட்ட முடியும்?” என்று கேட்டேன். இன்று வரை செயல் ஊக்கியாகத் திகழும், “ நீங்கள் நாளைக்கே உங்கள் வீட்டிற்கு வாகனத்தை ஓட்டிச் செல்லலாம்,” என்ற அவர் வார்த்தைகளை என் வாழ் நாளில் என்னால் மறக்க முடியாது. கையையோ, தோள்பட்டையையோ அடியோடு தூக்க முடியாமல் இருந்த எனக்கு அவர் வார்த்தைகள் வேடிக்கையாகக் கூறியதாகத் தோன்றவில்லை. அது அவர் அளித்த தீர்ப்பாகத்தான் பட்டது. டாக்டர் நான் வீட்டிற்கு வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியுமென்று கூறினாரென்றால், என்னால் அதைக் கண்டிப்பாக செய்ய முடியுமென்றுதான் அர்த்தம். அவர் தவறுதலாக ஒன்றையும் கூற மாட்டார். எனக்கு அவரிடமிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை சில மாதங்களுக்குப் பிறகு என் கையை அசைக்க முடிந்த போது நான் அறுவை சிகிச்சைக்கு முன் செய்து வந்த வேலைகளையெல்ளாம் முன்பை விடச் சிறப்பாக என்னால் செய்ய முடிந்தது. முதலில் காரைப் பின்னோக்கி செலுத்தும் கியரைப்போட நான் வலது கையை உபயோகித்தேனென்றாலும் மெல்ல மெல்ல அதை இடது

கையால் செய்யப் பழகிக் கொண்டேன். என் மகனுக்காக செய்த வேலைகள் அனைத்துமே என் கையை உபயோகிக்கும் பயிற்சி சிகிச்சைகளாக மாறி எனக்கு நன்மையையே அளித்தது.

இன்று நான் எங்கிருக்கிறேன் ?

ஐந்து வருடங்களை கடந்து வந்துள்ள நான் என்னை புற்று நோய்க்குப் பின் புனர் வாழ்வு பெற்றவரென்று என்னைக் கூறிக் கொள்ளலாமா? நான் வெற்றி வாகை சூடியவள் என்று கூறிக்கொள்ளப் பெருமைப்படுகிறேன். என் தாயோ மஹா வெற்றி கண்டவர். எல்லாவிதமான பயங்களையும் மற்றும் "புற்று நோய் கொல்லும்" என்ற புனைகதையையும் வென்றவர் புற்று நோயையே வென்றவர். என் உயிரின் மதிப்பு முன்பைவிட அதிகமாகத் தோன்றுகிறது. அதனால் நான் என்னால் முடிந்த அளவு சிறப்பாக செயல்பட வேண்டும். இன்று என் மகனுக்காக மட்டுமல்லாமல் 65 மாற்றுத்திறனுள்ளா குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றின் தினப்படி செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கோண்டிருக்கிறேன். தினமும் ஏதாவது ஒரு குழந்தையின் போராட்டத்தில் ஈடுபட்டு உழைக்கும் போது என்னுடைய புற்று நோயின் நினைவு சற்றும் மனதில் எழுவதில்லை. கடவுள் என்னிடம் ஒரு மிகப் பெரிய வேலையை அளித்திருக்கிறார். மாற்றுத் திறனாளிகளான குழந்தைகளின் வாழ்க்கைகளையும் அவர்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க என்னை நியமித்திருக்கிறான். அந்த சேவையை நான் சரியாகச் செய்ய வேண்டுமானால் நான் உடலளவிலும் மற்ற விதங்களிலும் வலிமை உள்ளவளாக இருக்க வேண்டும். அது என் மனதின் போக்கை சார்ந்திருக்கிறது.

வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கையில் கடவுள் நோயின் மூலம் நன்மையையே எனக்குச் செய்துள்ளார்! என்னுடைய சிகிச்சைக்காலத்திலிருந்து என் மகன் சுதந்திரமாக செயல்படுவது அதிகரித்திருக்கிறது. இதுவே என்னுடைய வேதனைகளையெல்லாம் மறக்கச் செய்து எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. எல்லாமே நம் பார்வையில் தான் இருக்கின்றன. வாழ்க்கையை சாதகமாகப் பார்க்கும் ஒருவருக்கு கோப்பை பாதி நிரம்பியிருப்பதாகத் தோன்றுமே தவிர பாதி காலியாக இருப்பதாகத் தோன்றாது அல்லவா?

என்னுடைய வெற்றிக்கும் ஆரோக்கியத்திற்கும் உதவிய காரணிகள் யாவை?

சிகிச்சை மற்றும் மருந்துகள் உட்கொண்டது மட்டும்தானா? அல்லது வேறு யாதேனும் உண்டா? ஆம்! உண்டே!

- மருத்துவரிடமும் அவருடைய வார்த்தைகளிலும் எனக்கிருந்த முழு நம்பிக்கை
- என்னுடைய மகனுக்கும் மற்ற குழந்த்தைகளுக்கும் உதவ தணியா விருப்பம்

- தன்னம்பிக்கை
- அனைத்திற்கும் மேலாக கடவுள் எப்போதும் உடன் இருப்பாரென்ற உறுதி

புனர் பரிசோதனைகளுக்காக போன ஒவ்வொரு முறையும் நான் மருத்துவரிடம் கேட்டது ஒரே கேள்விதான்; இன்றும் அதைத்தான் கேட்டு வருகிறேன். "டாக்ட்ர் உங்கள் மருத்துவத்தில் நீங்கள் என்ன மாயம் செய்தீர்கள்? முன்பை விட நான் பலமுள்ளவளாகவும் ஆரோக்கியமாகவும் நம்பிக்கை உள்ளவளாகவும் ஆகியிருக்கிறேன். இது எப்படி? அவருடைய வழக்கமான மலர்ந்த புன்னகையுடன் அவர் இந்த முறை எனக்கு பதிலளித்தார், "உன்னுடைய மனம் தான் இவை எல்லாவற்றையும் சாதித்திருக்கிறது".

# எனக்கு குணமாகி விட்டது

கே. உமா குமார்

புற்று நோயாளிகள் கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள் நான். என் தாய் வழிப்பாட்டியின் சகோதரி மார்பகப் புற்று நோயால் மரணம் எய்தினார். என்னுடைய தாயின் சகோதரி, சகோதரன் மற்றும் தந்தையின் சகோதரி என பலரும் புற்று நோய்க்கு பலியானவர்களே. அண்மையில் என் ஒன்றுவிட்ட சகோதரி மார்பகப் புற்று நோயால் இறந்து போனாள். 2006ல் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரர்களில் ஒருவரும் இந்த நோய்க்கு தன் உயிரைக் கொடுத்தவர்தான். உரிய சிகிச்சை பெறாததால் தான் இவர்களெல்லாம் உயிரையே கொடுக்க நேர்ந்த்து.

1995 ல் என் இடது பக்க மார்பகத்தில் ஒரு கட்டி கெட்டியாக இருப்பதைக் கண்டேன். ஒரு மருத்துவரிடமும் ஆலோசனைக்குப் போகும் முன்பே அது புற்று நோய் கட்டிதானென்று நான் முடிவு செய்தேன். அப்போது என் 80 வயதான தாயார் தீவிரமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். இந்தத் தகவல் மிக்க மன வேதனையை உண்டாக்குமென்று கருதி, அவரிடம் இது பற்றி நான் கூறவேயில்லை. மேலும் என் குடும்பத்தில் பலரும் சிகிச்சைகளின் போது பட்ட அவதிகளைக் கண்டிருந்த நான் எந்த சிகிச்சையையும் நாடப்போவதில்லையென்ற முடிவிற்கு வந்தேன். என் தாயாரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு மிக்க உடல் வேதனைகளை அனுபவித்த பிறகு டிஸம்பர் 28, 1997ல் மரணமடைந்தார்.

என் தாயின் மரணத்திற்குப் பிறகு நான் என்னுடைய அண்ணனுக்கும் அக்காவிற்கும் என் மார்பிலிருந்த கட்டியைப் பற்றிக் கூறினேன். அவர்கள் என்னை புற்று நோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற நிர்பந்தித்தார்கள். அவர்கள் 1998ல் என்னுடன் சென்னை வந்தார்கள். எல்லா பரிசோதனைகளும் செய்த பிறகு அந்த மருத்துவமனை எனக்கு வந்திருந்த கட்டி புற்றுத்தன்மை கொண்டதுதானென்று உறுதி செய்து டாக்டர் சாந்தாவை சந்திக்க வேண்டுமென்ற ஆலோசனை கூறியது. எனக்கோ இப்போதும் சிகிச்சை எடுத்துக் கொள்வதில் விருப்பமில்லை. எனினும் என் குடும்பத்தினர் என்னை நிர்பந்த்தித்து புற்று நோய் மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மலர்ந்த முகங்களுடன் காத்திருந்த எண்ணற்ற நோயாளிகளைக் கண்டேன். அவர்களுடன் பேசிப் பழகிய பிறகு நான் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு வந்திருப்பது போல் உணர்ந்தேன்.

என்னுடைய பெயர் அழைக்கப்பட்டது. நான் மருத்துவரை சந்த்தித்தேன். அவர் எனக்கு அளிக்கப் போகும் சிகிச்சை பற்றிய திட்டங்களை எடுத்துக் கூறி சிகிச்சைக்குப்பின் என் வாழ்க்கை நிலையில் முன்னேற்றமிருக்குமென்பதில் சந்தேகமே இல்லையென்று உறுதி அளித்தார். இது என்னுள் கடவுளின் பாதுகாப்பான அரவணைப்பில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

03.02.1998 அன்று நான் கீமோதெரபி செய்து கொள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டபோது என் கட்டியின் அளவு 5 X 3 சென்டி மீட்டராக இருந்தது. மூன்று சுற்று மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்ட பிறகு அது மந்திரத்திற்கு உட்பட்டது போல மிகச்சிறியதாக ஆகிவிட்டிருந்தது. சென்னையிலிருந்து 800 கிலோமீட்டர்கள் தூரத்தில் இருந்த ஒரு கல்லூரியில் நான் கணிதம் மற்றும் கணினிப் பிரிவின் தலைமை ஆசிரியையாக வேலை செய்து வந்தேன். என்னுடைய முதல் சுற்று கீமோ முடிந்த பின் நான் பணியிடத்திற்கு விரைந்தேன். எனக்கு பிரயாணம் செய்வதிலோ என்னுடைய பணி சம்பந்தக் கடமைகளை செய்வதிலோ எந்தவித சிரமமும் இருக்கவில்லை. என்னுடைய மாணாக்கர்களுக்கும் என் குடும்பத்தினருக்கும் புற்று நோய் மருத்துவமனைக்கும் முக்கியமாக அங்கு சேவை செய்து வந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

கீமோ சிகிச்சைக்குப் பிறகு, எனக்கு ரேடிகல் மேஸ்டெக்டோமி (RADICAL MASTECTOMY) செய்தார்கள். அந்த அறுவை சிகிச்சைக்கு முன்னரும் பின்னரும் எனக்கு கதிரியக்கமும் அளிக்கப் பட்டது. சிகிச்சைகளின்போது எனக்கு ஒருவித அசௌகர்யமோ வலியோ ஏற்படவேயில்லை.

2002ம் ஆண்டு நான் என் சகோதரனைச் சந்திப்பதற்காக யு.எஸ் சென்றேன். அங்கு அவர் என்னை ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பர்மிங்காம் பெண்கள் மருத்துவமனைக்கு ஒரு மருத்துவ ஆலோசனை பெறலாமென்று அழைத்துச் சென்றார். அங்கிருந்த மருத்துவர்கள் என்னுடைய நோய் பற்றிய விவரங்களை படித்துப் பார்த்த பின் எனக்கு மிகச்சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். இது புற்று நோய் மனையில் அளிக்கப்படும் மருத்துவச் சிகிச்சை உலகத் தரம் வாய்ந்ததென்ற என் நம்பிக்கையை மேலும் உறுதி செய்தது.

நான் நோயிலிருந்து மீண்டு இப்போது 12 வருடங்கள் ஆகின்றன. என்னுடைய பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தான் உடல் ஆரோக்கியத்துடன் ஒரு கிராமத்தில் உள்ள விவசாய நிறுவனத்தை மேற்பார்வை பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியான வாழ்வை வாழ்கிறேன்.

# நம்பிக்கையின் உறைவிடம்

ஸிஸ்டன் செலீன் பால் FMM

THE LORD IS MY SHEPHERD, THERE IS NOTHING I SHALL WANT
HE KEEPS ME IN THE PALM OF HIS HAND AND I AM PROTECTED AND SECURED IN HIS ARM

(கடவுள் என் மேய்ப்பான், எனக்கு வேண்டியதேதும் இல்லை தன் உள்ளங்கையில் என்னைத் தாங்குகிறார்; அவர் கையில் நான் காப்பாற்றப்பட்டு பாதுகாப்பாக உணர்கிறேன்.)

என் ஓவரியில் (OVARY) புற்று நோய் இருப்பது அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு ஸெப்டம்பர் 15 ம் தேதி அடையார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சையும் பெற்று இப்போது ஐந்து வருடங்கள் ஆகி விட்டன.

அவநம்பிக்கையுடன் கழித்த அந்த நாட்களை நினைவு கூறும் போது எனக்கு புனித பைபிளின் ST.MARK CH 9 VS 23 ல் கூறப்பட்ட வரிகள் தான் மனதில் எழுகின்றன. 'நம்பிக்கையுள்ளவர்களால் அனைத்தையும் சாதிக்க முடியும்'. இவ்வரிகள் என்னுடைய வேதனையில் துடித்த இருதயத்தையும் உணர்வுகளையும் குணமாக்கும் குளிர்ந்த களிம்பாக அமைந்தது.

என் துல்லியமான நினைவு சக்தி, ஒருவித புதிய மனோதிடத்துடனும், நம்பிக்கையுடனும் என்னுடைய மருத்துவரை நான் முதன்முதலாக சந்தித்ததை கண் முன்னே கொண்டு வருகிறது. முதலில் எனக்கு பரிசோதனைகள் செய்யப்பட தனியார் மருத்துவமனையிலிருந்து கொண்டுவந்திருந்த அறிக்கைகளை கவனமாகக் கூர்ந்து படித்துவிட்டு, நான் மேலும் சில பரிசோதனைகளை கூர்ந்து படித்துவிட்டு, நான் மேலும் சில பரிசோதனைகளை உடனேயே செய்துகொள்ள வேண்டுமென்று கூறினார் அந்த மருத்துவர். அவர் நான் அறுவை சிகிச்சையுடன் தொடர்ந்து மேலும் சில வகை மருத்துவ உதவிகளையும் பெற வேண்டியிருக்குமென்று விளக்கினார். அவருடைய அன்பில் தோய்ந்த ஊக்கமளிக்கும் சொற்கள் என் மனதிற்கு மிக்க ஆறுதலையும் நோயிலிருந்து விடுபட்டு விடுவோமென்ற நம்பிக்கையையும் அளித்தன. கடவுள் என்னைப் பார்த்துக் கொள்ளும் வேலையை இந்த மருத்துவரிடம் ஒப்படைத்திருக்கிறார். என்று எனக்குத் தோன்றியது.

இருப்பினும் குழப்பமும் போராட்டமும் மிக்க அந்த சில இருண்ட கணங்கள் நான் புயலில் பெருங்கடலில் பயணம் செய்யும் போது என் படகு வெள்ளப் பெருக்கத்தில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் போன்ற மன நிலையை உருவாக்கியிருந்தது. என்னை பல்வேறு பரிசோதனைகளுக்கும் குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கும் உட்படுத்திக் கொள்வது பற்றிய சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் அது. ஆனால் என்னுடைய தீர்வுகளைத் தேர்ந்தெடுக்கவும் மதிக்கவும் எனக்கு போதிய அவகாசம் தரப்பட்டது. இந்த

சோதனைகளுக்கெல்லாம் நான் என் உடலை உட்படுத்த வேண்டுமா என்ற கவலையும் சந்தேகமும் என் மனத்தை ஆட்டிவைத்துக் கொண்டிருந்தன. என்னுடைய மனதை அந்த நோயைப் பற்றிய பயமும் முடிவு என்னவாக இருக்குமோவென்ற சந்தேகமும் ஆட்கோண்டிருந்தன. அப்போது கீழ்க்கண்ட பாட்டு என் மனதில் எழுந்த்து. "இருதயத்திற்கென்ற தனி நியாயங்கள் இருக்கின்றன, அனைத்தையும் எக்காலத்திலும் சீர்தூக்கி அலசும் மனதால் அவற்றை புரிந்தது கொள்ள முடிவதில்லை" என்ற வாக்கியத்தையும் சேத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். என் நாதன், என் கடவுள் என்னுடைய வாழ்க்கையை தன் வசத்தில் வைத்திருக்கிறார். என்னுடைய கஷ்டமான கணங்களில் அவர் எனக்கு அமைதியையும் மனச் சாந்தியையும் அளிக்கிறார்."

என்னுடைய மருத்துவமனை வாசத்திலும் நான் அங்கு புனர் பரிசோதனைகளுக்கு சென்ற பொழுதுகளிலும் நான் சந்திக்க நேர்ந்த எல்லா மருத்துவர்களும் செவிலிகளும் மருத்துவமனைக்குழுவின் அனைத்து அங்கத்தினர்களும் சிறப்பாகவும் தன்னலமற்றும் சேவை செய்வதைக் கண்டேன். கடந்த ஐந்து வருட காலமாக நான் இந்த மருத்துவமனைக்கு வந்து கொண்டிருப்பதனால் என் மனதில் இதைப் பற்றின ஒரு ஆழமான நன்மதிப்பு உண்டாகியிருக்கிறது.

ஒன்று நிச்சயமாகத் தெளிவாகியுள்ளது. புதிய வாழ்வின் தோற்றத்தை ஏற்படுத்துவது பூகம்பம் அல்ல, உதாரகுணமும் ஒளிகுன்றா ஆத்மாவின் தரிசநங்களும் தான் புயலாக வந்து உற்சாகத்தையும் நம்பிக்கையையும் மக்கள் மனதில் நிலை நிறுத்துபவை என்று நான் உறுதியாகக் கூறுவேன்.

வாழ்க்கையின் கனவுகளெல்லாம் சிதைந்த நிலையில் எல்லா திக்கிலிருந்தும் வரும் நூற்றுக்கணக்கான நோயாளிகளை தொடர்ந்து கண்காணிக்க எந்த அளவு பொறுமை இருக்க வேண்டும்! கடந்த ஐம்பது வருடங்களில் தொழில் நுட்ப முன்னேற்றத்தை புகுத்தியதுடன் நோயாளிகளுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தந்து அவர்களுடைய மருத்துவமனை வாசத்தை உபயோகமானதாகவும் பாதுகாப்பானதாகவும் வசதியாகவும் இருக்கும் வகையில் இந்த மருத்துவமனை தன்னை வலுப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. உலக அளவில் பெயர் பெற்ற பெரியதொரு மருத்துவமனையாக வானளாவ உயர்ந்து நிற்கிறது.

ஐம்பது ஆண்டுகளாக தான் செய்து வரும் உன்னதமானதும் புனிதமானதுமான சேவையைக் கொண்டாடும் இன்னாளில் உலக அளவில் பெயரும் புகழும் அடைந்துள்ள இந்த நிறுவனத்தில் செயல்பாடுகளால் நன்மை பயக்கப் பெற்று நிற்கும் நாம் இதன் நிர்வாகத்திற்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் தன்னலமற்ற பணியாட்களுக்கும் மனதார நன்றி சொல்லி, வாழ்த்திட கடவுளின் அனைத்து வித ஆசீர்வாதங்களும் இவர்களுக்கு இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கவனம் சிதறாமல் தம்மை அர்ப்பணிக்கும்

மாந்தர்களால் உலகத்தையே மாற்றி அமைக்க முடியுமென்பதை ஒரு போதும் சந்தேகப் படாதீர்கள். உண்மையில் அவர்களால் மட்டும் தான் மாற்றங்களைக் கொண்டு வர முடிந்திருக்கிறது.

வாழ்த்துக்கள்!

கடவுள் மனிதர்களை குணப்படுத்தும் இந்தக் கோயிலையும் குணப்படுத்துபவர்களையும் ஆசீர்வதிக்கட்டும்.

# பதினைந்து வருட போராட்டத்திற்குப் பின் புற்று நோயிலிருந்து விடுதலை

**மாலினி**

1988 ஜனவரி 15ம் தேதி சென்னையின் அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் எனக்கு மார்பகப் புற்று நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்ட்து. நான் மிக ஆரோக்கியமான ஒரு பெண் என்பதுடன் எந்த விதத் தொற்றுக்கும் ஆளாகி பள்ளிக்கூடம் கல்லூரிகள் மற்றும் வேலை செய்யுமிடம் என்று எங்கும் எப்போதும் விடுப்பு எடுக்கும் நிலை எனக்கு ஏற்பட்டிருந்ததில்லை. அதனால் இந்த நோயின் அறிவிப்பு எனக்கும், என் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எங்களைச் சுக்கு நூறாக வெடித்துச் சிதற வைக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

என்னுடைய முதல் சந்த்திப்பில் என்னுடைய டாக்டர் ஒரு வளையத்தை வைத்திருந்தார். அதிருஷ்டவசமாக அது என்னுடைய சிறு பையனைப் போன்ற ஒட்ட வெட்டிய தலைமுடியின் அச்சுப்போல் இருந்தது. என்னுடைய மருத்துவர் மற்றும் அவர் இணை பணியாளர்களின் ஊக்கமுடனும் என் கணவர் குடும்பப் புக்ககத்தவர் ஆகியோரின் உணர்வு பூர்வமான ஆதரவுடனும் என்னால் வலிமை மிக்க கீமோதெரபியை ஆறு முறை ஏற்க முடிந்தது. ஆனால் என் தோல் மிகவும் மோசமாகக் கருகிப்போனதால் 20 முறை கதிர்வீச்சை (ரேடியேஷன்) 16 முறையாகக் குறைத்தார்கள். கீமோவையும் இரண்டு நாட்களுக்கு ஒத்தி வைத்தார்கள்.

எனக்கு சொந்த ஊரான பங்களூரில் என் சகோதரி மற்றும் என் தாயாரின் பராமரிப்பில் என் பத்து வயது மகள் விடப்பட்டிருந்தாள். முதல் மூன்று சுற்றுக்கள் மார்ச் முதலில் முடிந்த பின் நான் பங்களூருக்குத் திரும்பினேன். அங்கிருந்தே அடுத்த மூன்று சுற்றுக்களுக்காக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சென்னை வந்தேன்.

என்னுடைய எல்லா நலம் விரும்பிகளின் பிரார்த்தனைகள் என் கணவரின் பெற்றோர்கள், மற்ற நெருங்கிய குடும்பத்தினர்களின் அக்கறையான பராமரிப்பு, இவையுடன் மருத்துவமனை பணியாட்களிடம் சேவைகளும் சேர்ந்து நான் மே மாத நடுவில் எடுத்துக் கொண்ட கீமோவுக்குப் பிறகு அதிலிருந்து ஒரு மாத விடுப்புப் பெற தகுதி பெற்று விட்டேனென்று அறிவிக்கப்பட்டது. மேஸ்டெக்டமி மற்றும் முட்டைப்பை அகற்றுவதற்கான அறுவை சிகிச்சை) ஜூன் 23ம் தேதியன்று செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அறுவைக்கு முன் நடத்திய பரிசோதனைகளின் போது மன உளைச்சலினாலும் உடலில் இருந்த கட்டியினாலும் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக ஆகி விட்டிருந்ததென்று தெரிய வந்தது. விரைவில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக நான் இரண்டு நாட்கள் நகரத்தின் புகழ் பெற்ற சர்க்கரை வியாதிக்கான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். மீண்டும் ஜூன் 25 என்று

மாற்றி அமைக்கப்பட்ட தினத்தன்று புற்று நோய் மருத்துவ மனைக்குத் திரும்பினேன்.

இரண்டு நாட்களில் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டிற்குள் வந்ததுடன் மேலும் இரண்டு நாட்கள் அறுவை சிகிச்சைப் பிரிவில் என்னைச் சுற்றி மருத்துவர்களும் புற்று நோயாளிகளுக்கு ஆதரவு அளிக்கும் தன்னார்வத் தொண்டர்களும் தொடர்ந்து ஊக்கமும் உற்சாகமும் அளிக்க நான் சாதாரண பிரிவிற்கு மாற்றப்பட்டேன். அடுத்த ஒரு வாரத்திற்கு மருத்துவர்களும், உணவு திட்டங்கள் பரிந்துரைப்பவர்களும் உடற்பயிற்சி மருத்துவர்களும் நண்பர்களும் உறவினர்களும் மற்ற நலம் விரும்பிகளும் மாறி மாறி என் அறைக்கு விஜயம் செய்து கொண்டிருந்தார்கள்.

என்னுடைய உடல் செயல்பாடுகளைப் பற்றிய அறிக்கை நல்லதாக இருந்ததால் நான் ஜூலை 4ம் தேதி வீட்டிற்கு அனுப்பப்பட்டேன். ஒரு மாதத்திற்குப் பிறகு செய்யப்பட்ட புனர் பரிசோதனைக்குப் பின் எனக்கு சிகிச்சை ஏதும் செய்யப்படவில்லை. அட்லஸ் கிலினிக்கல் ட்ரையல்ஸ் (Atlas Clinical Trials) ல் தன்னார்வலராக சேர்ந்து புற்று நோய் தடுப்பு மருந்தான டமோனிஃபு (Tamonifeu) ஐ நான் அடுத்த நான்கு வருடங்கள் மற்றும் எட்டு மாதக் காலத்திற்கு எடுத்துக்கொண்டேன்.

ஆகஸ்ட் முதலில் நான் செய்துகொண்ட புனர் பரிசோதனைக்குப் பிறகு ஐ எம் ஆர் ரேடியேஷன் (IMR Radiation) , நான்கு வாரங்களுக்கு 20 கதிரியக்க அளவுகள் செய்து கொண்டேன். நான் திங்கள் முதல் வெள்ளி வரையில் சென்னையிலும், வார இறுதியில் பெங்களூரிலுமாக மேலும் கீழும் போய்க்கொண்டிருந்தேன். முதல் தடவை முழுவதும் என்னுடனேயே இருந்த என் கணவர் இந்த முறை பங்களூரில் என் மகளுடனும் தாயாருடனும் தங்கி விட்டார்.

ஸெப்டம்பர் முதலில் நான் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு என் வீட்டிற்கும் வேலைக்கும் திரும்பினேன். அறுவை சிகிச்சை செய்த இடத்தில் அவ்வப்போது தோன்றிய ஒவ்வாமைகள் போன்ற சிறிய அசௌகரியங்கள் மற்றும் ஒன்பது வருடங்களான பின்னரும் என் வலது கையில் தொடர்ந்திருக்கும் லிம்போ எடிமா (lymphedema) வலி, ஆகியவற்றை உடனடக்கி என்னுடைய சாதாரண வாழ்க்கை தொடர்கிறது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மூன்று வருடங்களுக்கும் அதன் பின் 6 மாதங்களுக்கு ஒரு முறை அடுத்த இரண்டு வருடங்களுக்கும் நான் தவறாமல் புனர் பரிசோதனகளுக்காகச் சென்னை வந்தேன். அதன் பின் 2003ம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு ஒரு தடவை வந்த பிறகு இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 23ம் தேதியன்று எனக்கு பூரண குணமாகி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

மருத்துவர்கள், அவருடன் இணைத்து பணியாற்றியவர்கள் மற்றும் சுவர்க்கத்தில் இருக்கும் கடவுளின் கருணையால் என்னுடைய உலகம் இன்று சீராக இருந்து வருகிறது. கடவுள் அவர்களை ஆசீர்வதிக்கட்டும்.

# குறைந்தபட்ச அபாயம் அதிகபட்ச ஆதாயம் - ஒரே வழி, புற்று நோய் மருத்துவமனை

கற்பகம் சுந்தரம்

“கடவுளே எங்கே இருந்தாய் நீ, உன்னை எனக்கு அதிகமாகத் தேவைப்பட்டபோது??”

“மகனே நான் உன்னுடனே தான் இருந்தேன், உன்னை என் இரு தோள்களிலும் தூக்கிக்கொண்டு”.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

இந்த நோயை ஏன் ஆங்கிலத்தில் “Cancer” - நண்டு என்று அழைக்கிறார்களோ என்று முன்பு வியத்திருக்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு அது என் சகோதரியையும் இப்போது என்னையும் தாக்கிய போது அதன் பெயர்ப் பொருத்தத்தை உணர்ந்தேன். அது ஒரு ராட்ஷச நண்டு போல் உடலில் புகுந்து செல்லும் பாதைக்கும் வேகத்திற்கும் ஒரு காரணமோ ஒழுங்கு முறையோ கிடையாது. ஆனால் பாதிக்கப் பட்டிருப்போமோ என்ற சந்தேகம் எழும்போதே முதன் முதலில் தோன்றுவது, நான் இதிலிருந்து தப்புவேனா”, என்பது தான். எவ்வளவு அகல நீள பரிமாணங்களுக்கு என்ன வேகத்தில் இந்த ராக்ஷசன் பரவியுள்ளது? அடுத்த முக்கியமான கவலை என்னுடைய சுற்றத்தார்கள் இரண்டாவதுமுறையாக குடும்பத்தினர் ஒருவரை இந்த நோய் தாக்குவது அவர்களை எப்படியெல்லாம் பாதிக்கும் என்பது அடுத்த கவலை, எனக்கு மிகவும் நெருக்கமானவர்களும், வயதானவர்களும் நான் சிகிச்சை எடுத்துக் கொள்ளும்போது படும் பாட்டை பார்க்க நேரிடும்; வெகு தூரத்திலுள்ள இளம் வயதினர்கள், அதில் இருவர் மருத்துவத் துறையிலுள்ளவர்கள், தினந்தோறும் நாங்கள் அனுப்பும் அறிக்கைகளுக்காகவும் முடிவுகளுக்காகவும் காத்திருப்பார்களே!

என் வலது கையில் மேல் பாகத்தில் ஒரு தசைப் பிடிப்பு; அது எந்த இடத்திலிருந்து தொடங்குகிறது என்று அலட்சியமாக ஆராய்ச்சி செய்தபோது எதேச்சையாக எனது வலது மார்பில் ஒரு கட்டி இருப்பது தெரிந்தது. அதுதான் ஆரம்பம். ஒரு பெரிய நெல்லிக்காய் அளவிலிருந்த அதை அழுத்தி உருட்டிய போது வலியில்லை. அந்தக் கட்டியை தொடும்போதே என் மனதில் ஒரு பெரிய இக்கட்டில் சிக்கியிருக்கிறேனோ என்ற சந்தேகமும் உடன் தோன்றியது. பத்து வருடங்களுக்கு முன்னால் என் சகோதரி இதே போன்ற ஒரு பிரச்சினைக்காகத்தானே ஹிஸ்டரெக்டமி செய்து கொண்டார்! என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தும் மற்றவர்கள் மூலம் கேள்விப்பட்டதிலிருந்தும் குறைந்த பட்ச அபாயத்துடன் அதிகபட்ச ஆதாயம் பெறுவதற்கு ஒரே வழி அடையார் புற்று நோய் மருத்துவமனைதான் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். நான் மருத்துவமனையின் தலைவி டாக்டர் வி. சாந்தா அவர்களின்

கவனிப்பில் ஒப்படைக்கப்பட்டேன். அவருடன் என் முதல் ஆலோசனை 27 நவம்பர் 2000 அன்று நடை பெற்றது. ஆரம்பக் கட்ட பரிசோதனைகளுக்குப் பின்பு, ஒரு பெரிய கட்டி (tumour) உள்ளது என்றும் அது சாதாரணமானதாகவோ, புற்று நோய் பீடித்ததாகவோ இருக்கலாமென்பதால், சில பல பரிசோதனைகள் செய்த பின் சிகிச்சை முறைகளை திட்டமிடலாம் என்ற அவருடைய அபிப்ராயத்தை ஒளிவு மறைவு ஏதுமில்லாமல் தெரிவித்தார். அவரிடம் நான் மிகவும் கண்டு வியந்த குணம் அவர் என்னுடன் பேசிய விதமும் என் மனதில் நம்பிக்கையை உள்ளேற்றி, பதியச் செய்த விதமும், அவரும் அவருடைய மருத்துவக் குழாமும் அந்த நிமிடத்திலிருந்தே எனக்கு அரணாக நின்று என்னை பீடித்த அரக்கனுடன் யுத்தம் செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்பது போன்ற உணர்வை உண்டாக்கியது. பரிசோதனைகளுக்குப் பிறகு என் மார்பிலிருந்த கட்டி 2 cm x 2 cm x 1.8 cm அளவும் கடிகாரத்தில் 11 மணி தோன்றும் விதத்தில் இருந்ததென்றும், வேறு கிளை நோட்கள் (nodes) இல்லையென்றும் மார்பகத்தின் மேல் பகுதியில் ஒரு பக்கக்த்திலும், ஓரளவு ஒதுக்கமாகவும் இருந்ததென்று தெரிந்தது.

நான் இ.சி.ஜி. மார்பின் X ரே, மேம்மோக்ராம், FNAC (அதுதான் கட்டி புற்று நோயால் தாக்கப்பட்டுள்ளதா இல்லையாவென்று நிர்ணயிக்கும் பரிசோதனையென்று கூறப்பட்டது). மார்பின் சி.டி.ஸ்கேன், எலும்புகளின் ஸ்கேன், க்ளுகோஸ், டாலரன்ஸ் பரிசோதனை (அப்போதுதான் புற்று நோயே சர்க்கரை வியாதியையும் தோற்றுவிக்கக்கூடுமென்று தெரிய வந்தது.) உள்பட பல ரத்தப் பரிசோதனைகள், கர்ப்பப்பை, கணயம், நீரகம், மண்ணீரல், ஆகியவை அடங்கிய இடுப்புப் பகுதியின் அல்ட்ரா சௌண்ட் பிறப்புறுப்புப் பாதையின் பேப்-ஸ்மியர் என கணக்கில்லாமல் முடிவேயில்லாமல் சோதனைகள் செய்து கொண்ட போதுதான் என் நோயின் தீவிரம் என்னை உண்மையாகத் தாக்கியது.

டாக்டர் சாந்தாவுடனான கலந்துரையாடலும், மருத்துவத்தில் பல்வேறு துறைகளில் சிறந்தது விளங்கிய மருத்துவர்களான டாக்டர் விஜயா, டாக்டர் செல்வி, டாக்டர் ஸாரோஜினி, டாக்டர் பாலசுப்பிரமணியம், டாக்டர் கிருஷ்ணகுமார், டாக்டர் ரமணன் மற்றும் சிலர் அடங்கிய அவருடைய மருத்துவக் குழுவுடன் ஏற்பட்ட பழக்கமும் எனக்கு நோயைப் பற்றிய பல விவரங்களை பரிச்சயப் படுத்தியது. புற்று நோய் உயிரணுக்கள் உடனடியாக எடுக்கக் கூடிய பாதை, லிம்ப் (Lymp) சுரப்பியின் முடிச்சுக்கள், மார்பின் சுவர், கர்ப்பப்பை, நீரகம், மற்றும் இரத்தம் என்பது தெரிய வந்தது. கணிதம் படித்தவளாதளால். என்னால் அவர்கள் சிகிச்சை தேவைப்படாத இடங்களை ஒதுக்க எடுக்கும் வழிமுறைகளையும் துல்லியமாக சிகிச்சை அளிக்க வேண்டிய இடத்தைக் குறி வைப்பதையும் தேவையான மருந்து மூலம் அளிக்க வேண்டிய சுற்றுக்களைத் திட்டமிடுவதையும், கதிரியக்கம் எந்த அளவிற்குக் கொடுக்கப்படவேண்டுமென்று கணக்கிடுவதையும், உடலின் பல்வேறு செயல்பாடுகளை அவ்வப்போது கண்காணிக்க ரத்த அளவுகளைச் சீராக வைப்பதையும் புரிந்து கொண்டு பாராட்ட முடிந்தது.

டாக்டர் விஜயாவும், டாக்டர் ரோஹிணியும் கிட்டத்தட்ட 200 'ராட்" ஸ் (Rads) கொண்ட கதிரியக்கச் சிகிச்சைக்கு என்னை முழுமையாகத் தயார் செய்தார்கள். 90 சதவிகிதம் துல்லியமான கதிரியக்கம் குறிவைத்து அளிப்பதற்கு உதவும் வகையில் மார்பகத்தில் ஒரு வார்ப்பு அமைத்தார்கள். எனக்கு கோபாஸ்ட் கதிர்கள் அளிக்கப்பட்டதாகக் கூறினார்கள்.

டாக்டர்கள் ரமணன், ராமானுஜம் மற்றும் ஸஞ்சய் பிப்லானி மருந்துகளை உடலில் செலுத்தும் கீமோ சுற்றுக்களைக் கவனித்தும் கொண்டார்கள்.

என்னுடைய மருந்துகள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சையின் இரண்டாவது சுற்றிற்குப் பிறது, ஜனவரி 9, 2001 அன்று டாக்டர் சாந்தாவும் அவருடைய மயக்க மருந்து அளிக்கும் அனேஸ்தெடிஸ் (Anesthetist) மற்றும் மருத்துவர்கள் கொண்ட குழாமுடன் இணைந்து என்னுடைய வலது மார்பகத்தின் ஒரு பகுதியிலும் அதனை ஒட்டி இருந்த சுரப்பி முனைகளிலும் (Nodes) களிலும் மேஸ்டெக்டமி செய்தார்கள். லிம்ப் சுரப்பியிலிருந்து (Lymp Gland) கசிந்த சுரப்பை ஏறக்குறைய வடியவிட்டு, கைகள் மீண்டும் நன்றாக உபயோகிப்பதற்கான பயிற்சிகளை அளித்தனர். இன்று நான் மீண்டும் முன்போல் சுறுசுறுப்பாகவும் சந்தோஷமாகவும் ஆகிவிட்டேனென்று சொல்லிக் கொள்வது எனக்கு பெருமையாக இருக்கிறது.

பல நாட்கள் மருத்துவமனையிலேயே தங்கிச் சிகிச்சை பெற்றதனால் மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகள் வேலை செய்வதைக் கவனிக்கவும் அங்கு பணி செய்து வந்த செவிலிகள் ஸிஸ்டர்ஸ் மற்றும் மருத்துவர்களுடன் பழகவும் எல்லாவற்றிற்கும் மேல், என்னைவிட மோசமாக உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கப் பட்டிருந்த நோயாளிகளுடன் கலந்துரையாடவுமான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய உணர்வுகளையும் தன்னிச்சையாக மனதில் உலா வரும் எண்ணங்களையும் உங்கள் அனைவரிடமும் மற்றும் இதை வாசிக்கக்கூடிய வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என் அருமை சினேகிதர்களே, உங்கள் அனைவருக்கும் நான் வெறும் ஒரு நோயாளியாக இல்லாமல், இந்த நோயைப் பற்றி இயற்கையாக மனதில் எழும் பயங்களும், கவலைகளையும், சந்தேகங்களையும் கொண்ட ஒரு சாதாரண மனுஷியாகவே தெரிந்தேன். உங்களில் ஒவ்வொருவரும் பூரணமான சேவை மனப்பான்மையுடன் நோயின் ஒவ்வொரு கட்டத்திலும் நான் நோயுடன் போராடுவதற்காக உங்கள் அன்பான வார்த்தைகளாலும் செய்கைகளாலும் எனக்குத் துணை நின்றதை நான் கண்ணால் கண்டும் மனதில் உணர்ந்தும் அனுபவித்தேன். நான் சொல்ல நினைப்பதனைத்தும் அதில் அடங்கி விடாதென்றாலும் நான் உங்களுக்கு என் நன்றியை மனதாரத் தெரிவிக்கிறேன்.

இந்த மருத்துவமனைக்கே ஒரு பெரிய தூணாக நின்று அதைத் தாங்கும் இதன் தலைவி டாக்டர் சாந்தாவிற்கு என்னுடைய ஆழ்ந்த நன்றியையும், மனமுவந்த

மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை மனிதத்தன்மை மிக்க ஒரு மருத்துவராகவும் தன்னுடைய ஒவ்வொரு நோயாளியிடமும் உளமார்ந்த அன்பும் அக்கறையும் செலுத்துவபராகவும், தன் வேலையை முழு அர்ப்பணிப்புடன் செய்பவராகவும், எதையும் அசிரத்தையுடன் நடப்பது நடக்கட்டுமென்று இருந்து விடாமல் திட்டமிட்டே தம் பணிகளைச் செய்பவராகவும் நான் காண்கிறேன். அவர் தம் நோயாளிகளின் மன அழுத்தங்களை நன்றாக உணர்ந்து, அவர் வகிக்கும் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கி வந்து நோயாளிகள் கேட்கும் அற்பமான கேள்விகளுக்கும் பொறுமையுடன் பதிலளிப்பதை நேரில் கண்டால் தான் நம்ப முடியும். நோயாளிகளின் மனதில் நம்பிக்கையை ஊற்றெடுக்க வைத்து நிலை நிற்க வைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். தாயே! கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும் என்பதைத் தவிர நான் வேறு என்ன சொல்வது? உங்களுக்கு நன்றி தெரிவிக்க போதுமான அளவு உக்தமான வார்த்தைகள் என்னிடம் இல்லை.

அனைத்து பிரிவிலும் எந்த அசைவும் நடைபெற அங்கு பணி செய்யும் மருத்துவர் உள்ளிட்ட அனைவருக்கும் ஒரே மார்க்கம் பொது நலத் தொடர்பு அதிகாரியான திரு ரமணியை அணுகுவதுதான். என்னைப் பொறுத்தவரையில் திரு ரமணி ஒரு அறிவுக் களஞ்சியமும் கணினியும் இணைந்த மனிதப் பிறவி. அவருடைய அமைதியான முகமும், ஒவ்வொரு நுணுக்கத்திலும் அவர் செலுத்தும் கவனமும் வேலை பளுவினால் அழுந்தி இருக்கும் தருணங்களிலும் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் சொல்வதும் அவரை ஒரு விசேஷ மரியாதைக்கு உரியவராகத் தனித்துக் காட்டும்.

என் சோதனைக் காலம் முழுவதிலும் தன்னுடைய அன்பாலும் பரிவான கவனிப்பாலும் என்னை ஆதரித்த கதிரியக்கம் அளிக்கும் மருத்துவரான டாக்டர் விஜயாவிற்கு என் நன்றி. அறுவை சிகிச்சை சம்பந்தப்பட்ட அனைத்து சமயங்களிலும் என்னிடம் அன்புடன் நிதானமான கவனிப்பையும் அளித்த டாக்டர் செல்விக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

நான் சமூகத்தின் எல்லா நிலைகளையும் சார்ந்த பல்லாயிரம் கணக்கான நோயாளிகள் பிரதி தினமும் இந்த மருத்துவமனைக்கு வருவதைக் கண்டேன் - படித்தவர்கள் - படிக்காதவர்கள், பணக்காரர்கள் - ஏழைகள் , அவ்வளவாகப் பணமில்லாத நடுத்தர வர்க்கத்தினர் - அவ்வளவாக ஏழைகளாக இல்லாதவர்கள், வியாதியைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் அல்லது கொஞ்சம் தெரிந்த ஆனால் கேள்வி ஞானம் அதிகமுள்ளவர்கள் என பலதரப்பட்டவர்களைப் பார்த்தேன். இரத்தப் புற்று நோயுள்ள ஒரு மாத குழந்தைகள், நுரையீரல், இரத்த, தொண்டை மற்றும் நாக்குப் புற்று நோய் உள்ள நடுத்தர வயதினர் என்று இந்த ராக்ஷசன் யாருக்கு வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், என்னேரமும், காரண காரியமில்லாமல் செய்யும் சேதங்களை தெரிந்து கொண்டதுடன் நேரிடையாகப் பார்த்தும் உள்ளேன்.

இங்கு வேலை செய்யும் அனைவரும் பாதிக்கப் பட்டவர்களை ஊக்குவித்து, அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையை எதிபார்க்க நம்பிக்கயூட்டுவதை நான் தரிசனம் செய்தேன் அங்கு. உண்மையிலேயே ஒரு மகத்தான சேவை!

நான் மிகுந்த அச்சத்துடனும், அவனம்பிக்கையுடனும் கவலையாக உள்ளே சென்றேன். முழு மனதுடன் அக்கறையுடன் திட்டமிட்டு, சிறப்பாகவும் அன்புடனும், அன்றும் இன்றும் ஒரே போல மனித குலத்தின் பிணி தீர்க்க இடைவிடாது இந்த மருத்துவர்கள், செவிலியர்கள் உதவியாளர்கள் பணி செய்து வருகிறார்கள். மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த போது அவர்களிடம் மிக்க மரியாதையும் மதிப்பும் கொண்ட மனம் மாறிய ஒருவளாக ஆகி இருந்தேன். அவர்களை கடவுள் ஆசிர்வதிக்கட்டும். அவர்களுடைய சேவையும் அந்த மருத்துவமனையும் ஆசீர்வதிக்கப் படட்டும்.

# நோயாளியாக நுழைந்தேன்; ஆரோக்கியமாக வெளிவந்தேன்

டாக்டர் ஸ்ரீமதி பி செல்வம்

நான் திருச்சியில் பணி புரியும் குழந்தைகள் மற்றும் பெண்கள் சார்ந்த நோய்களின் மருத்துவர். ஞாயிற்றுக்கிழமை 15 ஆகஸ்ட் 1999, என் அன்பு மகளுடன் கோயம்புத்தூரில் அவளை PSG தொழில் நுட்ப கல்லூரியில் சேர்ப்பதற்காகச் சென்றிருந்தேன். அவளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய வலது மார்பகத்தில் சிறிய வீக்கம் ஒன்றை கவனித்தேன். அந்த இடத்தில் வலியையும் உணர்ந்தேன். நான் ஏதோ ஒரு உடல் பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருக்கிறேனென்று தெரிந்தது. அது ஒரு புற்று நோய் கட்டியாக இருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டேன். என் மகளை விடுதியில் விட்டு விட்டு அறுவை சிகிச்சை மருத்துவரின் ஆலோசனைக்காகச் சென்றேன். FNAC பரிசோதனை அதை ஊறுதிப் படுத்தியது - அது டக்ட் செல் கார்சினோமா (Duct cell Carcinoma) .

என்னுடைய குடும்ப நண்பர் டாக்டர் கிருஷ்ணகுமார் அவர்களின் ஆலோசனையின் பேரில் அடையார் புற்று நோய் மருத்துவமனையின் தலைவியை 23 ஆகஸ்ட் 1999 அன்று சந்தித்தேன். அவரும் நோயின் தன்மையை உறுதி செய்தார். அவர் சொன்ன வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. உங்களுக்கு புற்று நோய் வந்துள்ளது. அதிக காலம் தாழ்த்தாமல் வந்துள்ளீர்கள். மருத்துவ விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. நாங்கள் நல்ல முடிவுகள் கொடுக்கக் கூடிய சிகிச்சை கொடுப்போம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேல் உங்கள் தன்னம்பிக்கையும் ஒத்துழைப்பும் ஆச்சர்யங்களை நிகழ்த்தி உங்களை இந்த நோயிலிருந்து விடுவித்து நீண்ட ஆயுளையும் கொடுக்கும். நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் நீங்கள் இந்த நோயை வெல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

எல்லாவற்றையும் கடவுள் மற்றும் மருத்துவர் அம்மா அவர்களின் கைகளில் ஒப்படைத்துவிட்டு, பரிசோதனைகள் கீமோதெரபி ரேடியோதெரபி அவைகளைத் தொடர்ந்து அறுவை சிகிச்சை முதலியவைகளை செய்து கொண்டேன். என் குடும்பத்தினர் அனைவரும் கண்ணீரில் மூழ்கி இருந்தபோது நான் மட்டும் நம்பிக்கை தரும் எண்ணங்கள், ஆசைகள், குணமடைந்து வரும் நாட்களுக்கான எதிர்கால் திட்டங்கள் ஆகியவற்றை மனதில் கொண்டு, சிகிச்சை அட்டவணையை சற்றும் மாற்றாமலும், மனக்கலக்கமில்லாமலும் நடமாடிக் கொண்டிருந்தேன். என்னுடன் பணி செய்தவர்களில் சிலர் ஏன் அறுவை சிகிச்சையை ஒத்திப் போட்டிருக்கிறார்களென்ற கேள்வியை எழுப்பிய போதிலும், நான் மருத்துவ மனையின் திட்டத்தை மிக்க கவனமாகக் கடைபிடித்தேன். மருத்துவர்களின் தனிப்பட்ட பிரத்தியேக சிகிச்சை முறையின் உதவியால் என்னால் கீமோதெரபியையும் ரேடியோதெரபியையும்

குறைந்த அளவு சிரமத்துடன் ஒருவித பிடிவாதத்துடன் எதிர்கொள்ள முடிந்தது.

1999, டிஸம்பர் 28 அன்று என்னுடைய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப் பட்டது; நானும் புதிய நூற்றாண்டை வரவேற்கும் உலகத்துடன் மகிழ்ச்சியுடன் ஒன்றினேன். அதற்கு பிறகு நான் ஒரு இரண்டு குழந்தைகளின் தாய் மற்றும் ஒரு குழந்தை மற்றும் ஒரு பெண் நல மருத்துவர் என்று என் வேலைகளை வகைப்படுத்தி முன் போலவே, இல்லை முன்னைவிட அதிக முனைப்புடன் செயல் படத் தொடங்கினேன்.

ஏழு வருடங்கள் கடந்து விட்டன. மருத்துவ அம்மையாரின் தொடர் சிகிச்சைகள் மற்றும் புனர் பரிசோதனைகளாலும் இன்று என் மருத்துவக் குறிப்பு இப்படித்தான் இருக்கிறது:-

புதிய செயல்பாடு ஏதுமில்லை
மீண்டும் வரவில்லை
பரவவில்லை

என்னுடைய குடும்பத்தினுடைய மற்றும் தொழில் முறையிலான எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துடன் முழுமையா நான் பூர்த்தி செய்து வருகிறேன். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல கூடிய சீக்கிரம் நான் என் மகளின் திருமணத்தைப் பார்ப்பேன்.

கடவுளுக்கும், என்னுடைய மருத்துவர் மற்றும் அவர் குழாமிற்கும் இத்தகைய வளமான வாழ்வை எனக்கு அளித்ததற்கு மிக்க மிக்க நன்றி.

# புற்று நோய்க்குப் பின்பும் வாழ்க்கை உண்டு - புற்று நோயுள்ளபோதே கூட வாழ்க்கையுண்டு

பெயர் கூறிப்பிட விரும்பாதவர்

உறுப்பினர்கள் அதிகம் கோண்ட குடும்பங்களிலிருந்து தான் எனது தாய் தந்தையர் வந்தவர்கள் எனினும் அந்தக் குடும்பங்களில் ஒரு சிலரே நீண்ட காலம் வாழ்ந்தார்கள் என்பதுதான் ஒரு ஆச்சர்யம். அதில் அனேகர் ஐம்பது வயதிற்கு முன்பே காசநோயாலோ அல்லது என்ன காரணமென்று தெரியாமலேயோ இறந்தவர்கள். அவர்கள் தம் இளமைக் காலங்களில் மின் இணைப்புக் கூட இல்லாத விஞ்ஞான வளர்ச்சி அளித்த மருந்துகள் சென்று எட்டாத கேரளாவில் வளர்ச்சியடையாத கிராமங்களில் வாழ்ந்தவர்கள், நடப்பதெல்லாம் விதியின் பயனே என்னும் திடமான நம்பிகையுடன் தம்மைப் பிடித்த நோய்களெல்லாம் கர்ம வினையென்று ஏற்று நடப்பது நடக்கட்டுமென்றிருந்தவர்கள்.

'நவீன' முறைக் கல்வி பெறுவதற்காக நான் பங்களுருவில் இருந்தபோது (1960 கள்) மருத்துவ உதவி தேவைப்பட்ட உறவினர்களின் ஒரு அணிவகுப்பே எங்கள் வீட்டின் வழியே தொடர்ந்து சென்றது. சிலர் சிகிச்சை பெற்று குணமடைந்தார்கள்.. சிலர் நோய்க்கு பலியானார்கள். நோயில்லாமல் ஒருவர் முதுமை அடையும் வரை வாழமுடியும் என்ற எண்ணமே எனக்கு இருந்ததில்லை; அதனால் என்னுடைய தாய் தந்தையர்கள் புற்று நோயால் ஒருவர் 48 வயதிலும் மற்றொருவர் 61 வயதிலும் இறந்தபோது, நானும் சுவர்க்கப் பிராப்தி அடையும் முன் என்னுடைய குழந்தைகள் வளர்ந்து வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைக்கு வருவதைப் பார்க்கவோ, உலகத்தையே மாற்றக்கூடியவை என நான் கருதும் புத்தகங்களை பிரசுரிக்கவோ போதிய அவகாசம் இருக்காதென்று நிச்சயித்து விட்டிருந்தேன். மூதாட்டியாக பற்பல வருடங்கள் வாழ்ந்துகோண்டிருக்கும் ஒருவளாக என்னை கற்பனை செய்து கொள்ள முடியவில்லை என்பதே எனக்கு பணம் மற்றும் வேறு விதமான உடைமைகள் மீது ஒரு அசிரத்தையையும் விரக்தியான அணுகுமுறையும் உண்டானதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

என் திருமணம் மருத்துவர்கள் மற்றும் பகுத்தறிவுவாதிகள் கொண்ட குடும்பத்தில் ஒருவருடன் நடந்தது. என் மாமனாரைத் தவிர மற்ற அனைவரும் ஆன்மீகத்தினாலும் தத்துவ விசாரணைகளினாலும் எந்தவித உபயோகமும் இல்லையென்ற நிலப்பாட்டைக் கொண்டவர்கள். என் முப்பதுகளில் நான் வேதாந்தம் படிக்க ஆரம்பித்த போது நான் தனித்துத் தெரிந்தேன். ஆனால் அந்த வருடங்கள் தான் என் வாழ்க்கையிலேயே ஆனந்தமானவை. வேதாந்தம் என்னை பெருமளவில் பலப்படுத்தியது. என் பல விதமான அச்சங்கள் நீங்கின. பிறவியிலேயே எனக்கு ஏற்படாத ஒருவித

சமச்சீர் மன நிலையுடன் என் வேலைகளைச் செய்யவும் உறவுகளை கையாளவும் என்னால் முடிந்தது. உலகில் எதுவுமே நிலையில்லை என்பதால் பலரும் அற்பமான விஷயங்களை எல்லாம் மிகைப் படுத்தி அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கவலைப் படுவதில் அர்த்தம் ஏதுமில்லை என்ற என்னுடைய இயல்பான கருத்திற்கு இந்த மனப்போக்கு வழி சேர்த்தது.

என்னுடைய குடும்ப நிகழ்வுகளைக் கொண்டு பார்க்கும் போது வருடாந்திர மருத்துவப் பரிசோதனை என்பது கட்டாயமான ஒன்றாக இருந்தாலும், என் குடும்பத்தினர் பலரையும் அறுவடை செய்திருந்த அந்த நோய் என்னைப் பீடிக்குமானால் நான் எந்த வித மருத்துவ உதவியையும் பெறப் போவதில்லையென்ற முடிவிற்கு நான் வந்திருந்தேன். மன அழுத்தத்திற்கு உள்ளாகி மரணத்தை ஒத்தி வைப்பதில் என்ன பயன்? விதி அளித்த நோயிற்கு தம்மை உட்படுத்திக் கொள்ளும் போது என் தாய், தந்தை இருவருமே அவர்களுடைய இயல்பான குணங்களை இழந்து எந்த விதமாக மாறி இருந்தார்களென்பதை கண்கூடாகப் பார்த்தவள் நான். எனக்கு அந்தப் பிரச்சினை தோன்றினால் நான் உதவி ஏதும் பெற மாட்டேனென்பதுடன் அதைப் பற்றி யாரிடமும் கூறுவதுமில்லை என்று தீர்மானித்தேன்.

‘அது விஜயம் செய்தது’

நான் எப்படி எதிர்பார்த்துக் காத்திருந்தேனோ, அசல், அதே போல்,

எனக்கு 40 வயதானதிலிருந்தே நான் அதற்காகக் காத்திருந்தேன். 2000 ம் ஆண்டு என்னுடைய 49 வது வயதில் அதன் இருப்பை உணர்ந்த போது என் மனதில் ஒரு வித நிம்மதியே தோன்றியது. 20 மாதங்களுக்கு அதை என்னுள்ளேயே புதைத்து வைத்திருந்தேன். உலகில் எவரேனும் இந்த நோயை எதிர்பார்த்து அதை உள்ளே வர அழைப்பையும் விடுத்து உணர்ச்சியே இல்லாமல் காத்திருந்தார்களென்றால் அது நான் ஒருவளாகத் தான் இருக்க முடியும். இப்போது நான் அனைவரிடமும் முதன் முதலாகப் பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒன்று இதுதான். உலகில் மற்ற பலவற்றையும் போல ஏதாவது ஒன்றையே நினைத்து அதற்காக மனதைத் திறந்து வைத்திருக்கும் போது அது உண்மையாக நிகழ்ந்து விடுகிறது. வம்சாவளியின் பங்கு ஒரு பக்கம் நிச்சயம் இருந்திருக்குமென்றாலும் அதற்கு ஈடாக உள்மனங்களின் செயல்பாடுகளும் மௌனமாகவும் நிச்சயமாகவும் விளைவுகளை உருவாக்கும் வலிமை கொண்டதே.

அந்த 2000 ம் வருடம் என் தொழிலில் நான் சந்தித்த மிக மோசமான வருடமாதலால் என்னுடைய இரண்டாவது திடமான நம்பிக்கையை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். புற்று நோயை உண்டாக்கக் கூடிய காரணங்களான புகை பிடிப்பது, மற்றவர்கள் பிடிக்கும் புகையை உட்கொள்வது, அதிகமாக புலால் உணவுகள் உண்பது , அதிகமாகக் குடிப்பது போன்றவைகள். புற்று நோய் ஆராய்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவை; ஆனால் அதே போல்

நான் குறிப்பிடும் உணர்ச்சிகள் தோற்றுவிக்கும் வலியும் அதை உள் வாங்கித் தாங்கும் வலிமை இல்லாமையும் முக்கிய காரணிகள் தாம். என் வாழ்க்கையின் பாதி நாட்களை நான் மகிழ்ச்சியுடன் வேலை செய்து கழித்த அதே இடம் ஏமாற்றுதல்கள் நிறைந்து நான் மிக கேவலமாக நடத்தப்பட்ட ஒரு நரகமாக மாறியிருந்தது. அந்த வருடமும் அதற்கு முந்தைய இருபது மாதங்களும் தவிர்க்க முடியாத நெருக்கடிகளும், நண்பர்களே எதிரிகளாக மாறி அளிக்கும் அதிர்ச்சிகளும் புற்று நோயை உண்டாக்கக் கூடிய கவலைக்கிடமான நிலையை உருவாக்கி வேதனைக்குள் ஆழ்த்தியதென்பது நான் பலமுறை உணர்ந்திருந்த ஒரு உண்மை.

நான் வேதாந்தத்தின் உண்மையான மாணவியாக இருந்திருந்தால் இந்த இடைவிடாது மாறிக்கொண்டே இருந்த சூழ் நிலையை எளிதாகக் கடந்திருப்பேன். ஆனால் அதற்கான புத்தி கூர்மையும், பொறுமையும் மனோதிடமும் இருக்கவில்லை. எனக்கு. இறுதியில் மாறிவிட்ட வாழ்க்கை சந்தர்ப்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாமல் என்னுடைய மனப்போக்கும், குணமும் நானே விளைவித்த, வரவழைத்துக் கொண்ட தவிப்பு என்னை ஆழமான சோதனைக் குழியில் தள்ளியிருந்தது.

நான் என் மனதை போதுமான அளவு பாதுகாப்பாக வைத்திருக்கவில்லை.

மனம் உடலை பாதித்து, வருத்தி, பெரும் நாசம் விளைவிக்கக் கூடியது.

2000 ஆண்டின் இறுதியில் 20 வருடங்கள் வகித்த ஒரு பதவியிலிருந்து என்னை நானே வெளியேற்றிக் கொண்ட போது கால் நூற்றாண்டு பேணிப் பாதுகாத்த ஒரு உறவை ஒதுக்கி, அந்தப் பாதையையே அடைத்து விட்டது போல இருந்தது. 2001 என்னுடைய அடுத்த மகிழ்ச்சிகரமான பணியிடத்தை எனகு அளித்த ஆண்டு. அது முடியுறும் தருவாயில் என்னுடைய இடது மார்பகம் கெட்டிபடுவதை உணர்ந்தேன். மேலும் புறக்கணிக்க முடியாத அறிகுறிகளும் மனதை உறுத்தின. என் முதுகுப் பக்கத்து தோள்பட்டை எலும்பில் துவங்கி என்னுடைய மார்புக்கூடு / மார்பகம் (என்னால் எந்த இடமென்று நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை) வரையில் இறங்கும் ஒரு வித துளைத்தலை உணர்ந்தேன். எனக்கு உண்மை என்னவாக இருக்குமென்று ஊகிக்க முடிந்த போதிலும் மனதில் பயம் அறவே தோன்றவில்லை என்பதை நான் குறிப்பிட வேண்டும். எவ்வளவு நாட்கள் நான் இந்த உண்மையை மற்றவர்களிடமிருந்து மறைத்து வைக்க முடியுமென்ற கவலைதான் என்னை உறுத்தியது.

எங்கள் குடும்பத்தில் நடந்த திருமணம் ஒன்று நான் வருடாந்திரப் பரிசோதனைக்குப் போவதையும் மேமோக்ராம் செய்து கொள்வதையும் ஒத்திவைக்க ஒரு சாக்கைக் கொடுத்தது. ஒரு வழியாக நான் ஜனவரி 2002 ல் மருத்துவமனைக்குப் போனேன். என்னைப் பரிசோதித்த மருத்துவ வல்லுனர் என்னை எவ்வளவு நாட்களாக மார்பின் இந்த பாகம் கடினமாக உள்ளது? என்று கேட்டபோது அவர் முகம் சலனமற்றிருந்தது.

எனக்கே அது பதனிட்ட தோலைப் போல் இருந்தது. சுமார் ஆறு மாதங்கள் என்று நான் பதிலளித்தேன்.

ஒரு நாள் காத்திருந்த பின் வந்த அந்த முடிவு அறிவித்தது "முலைகாம்பு தடித்துள்ளது. கட்டி ஏதுமில்லை; ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மேமோக்ராம் செய்து கொள்ளப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் அது ஒரு வேளை வேறு ஏதாவதாக இருக்கக் கூடுமோ? நான் பரிசோதனைப் படத்தை என்னுடைய கனிவான மற்றும் அனுதாபியான மருத்துவ சினேகிதி ஸ.்.பீனாஜிடம் காண்பித்த போது, அவர் அதைப்பார்த்துவிட்டு, ஒன்றுமில்லையென்றுதான் தோன்றுகிறது. எதற்கும் ஒரு புற்று நோய் மருத்துவரை நீ பார்த்தால் நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது என்றார். அதற்கடுத்த நாள் 18 ஜனவரி 2002 அன்று, நான் மருத்துவரைப் பார்ப்பதற்காக என் மகளுடன் காத்திருந்த போது, இதுதான் நான் சந்தோஷமாக இருக்கும் கடைசி நாள் என்றேன் சோகமாக.

சிறப்பு மருத்துவர் டாக்டர் உமா கிருஷ்ணசுவாமி என்னுடைய குடும்ப வரலாற்றைப் பற்றி கேட்டபோது, மரணப் படுக்கையில் இருந்த என்னுடைய தாயின் மிக இளமையாம முகம் திடீரென்று என்மனக் கண் முன் தோன்றியது. முப்பது வருடங்களுக்கு முன் என் தாயை இழந்த மருத்துவ மனையின் அறையில் சுவரின் மீது விழுந்த கட்டிலின் நிழல் கூட அப்போது என் மனக்கண்ணில் தோன்றியது. அவர் இப்போது இல்லாதது எவ்வளவு நல்லதாகிவிட்டது! கடவுளே அவ்வளவு நாட்களுக்குப் பின், இப்போது என்னுடைய முறையா?

"நீங்கள் அதிருஷ்டசாலியாக இருந்தால் பயாப்சி மெதுவாகப் பரவும் புற்று நோய் என்று காட்டும், எப்படியிருந்தாலும் ஒரு முழுமையான பரிசோதனை செய்வதற்காக முலைக்காம்பை வெட்டி எடுத்தோ அல்லது ஒரு மேஸ்டெக்டமியோ செய்தால் தான் பரவியுள்ள கட்டியை முற்றிலும் விலக்கிவிட்டோம் என்று உறுதிப் படுத்திக் கொள்ள முடியும், ஏனென்றால் அது தான் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்" டாக்டர் உமா அன்புடன் ஆனால் மிகத் தெளிவாகச் சொன்னார். "ரேடியாலஜிஸ்ட் (Radiologist) ஒரு வருடம் முன்பு அந்த பரவலை கவனிக்காமல் விட்டு விட்டு இப்போது எப்படி கண்டுபிடித்தார்? எனக்குப் புரியவில்லையே".

அப்போல்லோ சிறப்பு மருத்துவமனை டாக்டர் பாக்யம் அவர்களிடம் என்னை அனுப்பி வைத்தார். அங்கு அவர் வலி அதிகம் கொண்ட பயாப்ஸியை எனக்குச் செய்தார். பரிசோதனையின் முடிவு வர இரண்டு நாட்கள் ஆகுமென்றாலும் எனக்கென்னவோ அன்று மாலை என் வீட்டு வராந்தாவில் வழக்கம் போல் ஒரு கோப்பை குளிர்பானத்துடன் உட்கார்ந்திருந்த போதே இறுதித் தீர்ப்பு என்னவாக இருக்குமென்பது நிச்சயமாகத் தெரிந்திருந்தது. நான் தில்லி போகும்

முன்பே உறுதியாகிவிட்டது. வந்திருப்பது இரண்டாம் நிலை கிரேட் இன் டக்ட் கார்ஸினோமா (Grade II Induct Carcinoma). நான் வீடு திரும்ப விமானத்தைப் பிடிக்கும் முன் என் ஹார்மோன்களின் பரிசோதனையும் நோய் இருப்பதை உறுதிப் படுத்துவதாக எனக்குக் கூறப்பட்டது. அன்றைய இரவைக் கழிக்க நான் அத்தனை தூக்க மாத்திரைகள் எடுத்துக் கொண்டதில் அடுத்த நாள் பிப்ரவர் 3, ஞாயிற்றுக் கிழமை வீடு திரும்ப பதிவு செய்யப் பட்டிருந்த விமானத்தை எப்படிப் பிடித்தேனென்பதே ஒரு ஆச்சர்யம் தான்! அன்று நான் புற்று நோய் மருத்துவமனையில் வேலை செய்து வந்த ஒரு நல்ல அறிவாளியான இளம் டாக்டர் ஸ்ரீதேவியை சந்தித்தேன். அவர் என்னுடன் எல்லாவற்றையும் பற்றி விவாதித்த பிறகு புன்னகையுடன் கூறினார். " நான் பார்த்த சுமார் 300 நோயாளிகளில் நீங்கள் மட்டும் தான் அறுவை சிகிச்சை உடனேயே செய்யப்பட வேண்டுமென்ற அவசரத்தில் இல்லாதவர்"

இதற்கிடையே பணியிடத்தில் பிரச்சினைகள் தோன்றின. என்னுடைய பிரிவில் என்னோடு சேர்ந்து என் பிரிவை நடத்தியவர் ஆட்குறைப்பு திட்டத்திற்கு இரையானார். மிக விசித்திரமாக இந்த நிகழ்வு எனக்கு சாதகமாக அமைந்துவிட்டது. நான் வேலை செய்து வந்த பிரிவே கலைக்கப்பட்டு மறைந்து போய் விட்டிருந்ததால் நான் கூறிப்பிட்ட தேதிகளில் செய்ய வேண்டிய வேலைகளை செய்து முடித்தால் போதும்; எங்கிருந்து கொண்டு வேண்டுமானாலும் அவற்றைச் செய்யலாம் என்னும் நிலை. அதனால் வீட்டிலிருந்த படியே வேலை செய்யலாமென்றும் வாரத்தில் ஒன்றோ இரண்டோ முறைகள் அலுவலகத்திற்குச் சென்றால் போதுமென்றும் ஆயிற்று. என் முன் நடக்க இருந்த நீண்ட கால சிகிச்சைக்கு மிகவும் ஏற்றபடியாக இது அமைந்தது.

இந்தத் தருணத்தில்தான் என் கணவர் மகள்களுடன் நான் நோயைப் பற்றி வெளியில் கூறுவதில்லையென்ற முடிவை எடுத்தேன். அதை முழுக்க முழுக்க ரகசியமாக வைத்திருக்க நான் விரும்பினேன். முக்கியமாக என் தொழிலில் இருந்தவர்களுக்கு அது தெரிய வரக் கூடாது. அதனால் என்னுடைய மிக நெருங்கிய குடும்பத்தார்களைத் தவிர வேறு எவருக்குமே என்னுடைய நோயின் தீவிரம் பற்றி ஏதும் தெரிந்திருக்கவில்லை. என் வேதனைகளையும் சோதனைகளையும் மற்றவர்கள் கவனிப்பது பிடிக்காதென்ற என் சுபாவத்திற்கும் இது ஒத்துப் போயிற்று. என் தாயும் தந்தையும் என்னுடைய வாழ்க்கையிலிருந்து நழுவிச் சென்ற போது கூட நான் உலர்ந்த கண்களுடன் நின்றிருக்கிறேன். கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்பவளான நான் என்னுடைய வாழ்க்கையின் மீது இப்போது எல்லா விதமான அடக்குமுறைகளையும் 'முழு மூச்சுடன்' அமல்படுத்தினேன். நான் இயல்பாக நடந்து கொண்டால் அப்படியே ஆகிவிடுவேனென்பது என்னுடைய திட்டம். நான் ஒரு முறைகூட உடைந்து போய் அழுது மற்றவர்கள் அனுதாபத்தைப் பெற முயற்சிக்கவில்லை. நல்ல பணியாட்களின் உதவியோடு நான் வீட்டை நிர்வாகம் செய்தேன். என் வேலைகளை வீட்டிலிருந்தபடியே திட்டமிட்டு செய்ததுடன் என்னுடைய நண்பர்களை சந்திப்பதையும் புத்தகங்கள் வாசிப்பதையும் தொடர்ந்தேன், ஏன்

என்னுடைய கடைசி கீமோ நடந்தது. நான் மிகவும் பலவீனமாக இருந்த கட்டத்திலும் ஒரு சிறிய விருந்துடன் என் 29 வது திருமண நாளைக் கூடக் கொண்டாடினேன்.

ஆனால் அதெல்லாம் பின் வருபவை அல்லவா? அந்த கட்டத்தை அடைய இன்னமும் வெகு தூரம் போக வேண்டுமே!

2002 பிப்வரி நான்காம் தேதியன்று நான் டாக்டர் சாந்தாவை முதன்முதலாக சந்தித்தேன். யாராவது ஒரு டாக்டர் தன் வாழ் நாளிளேயே அழியாப் புகழை -status of a legend - அடைந்துள்ளாரென்றால் அது டாக்டர் சாந்தாவாகத்தான் இருக்க முடியும். என்னுடைய காலம் சென்ற கண்டிப்பான மாமியார் அங்கீகரித்த மிகச் சில மருத்துவர்களில் சாந்தாவும் ஒருவர். அவரைக் கண்ட உடனேயே என் மனதில் - ஒர் பிரும்மாண்டமான நம்பிக்கை ஆரோக்கிய உணர்ச்சி, நான் முழுவதும் குணமாகிவிடுவேன் என்று காரண காரியங்களுக்கு அப்பால் தோன்றிய உறுதி உண்டாயிற்று. இவை அனைத்திற்கும் மேல், நான் டாக்டர் சாந்தாவை சந்திப்பதென்பது என் விதியால் முன்பே நிர்ணயிக்கப்பட்ட ஒன்றேன்ற உணர்வும், அந்தக் கணம் முதல் நான் ஒரு பொழுதும் சுய பச்சாதாபப் படவில்லை, எதிர்காலத்தைப் பற்றி பயப்படவில்லை.

என் கணவரும் நானும், டாக்டர் சாந்தா அவர்களின் நெரிசலான, அதிக வெளிச்சமில்லாத அலுவலக அறையில் உட்கார்ந்திருந்தோம். சுற்றிலும் தமக்கு அந்த இடத்தில் என்ன வேலை என்பதை சற்றும் அறியாதது போல் அந்த இடத்திற்கு ஒவ்வாத ப்ளாஸ்டிக் பூக்கள் ம்ற்றும் வெள்ளிக் கோப்பை பரிசுகள் அவற்றின் மீது கவனம் ஏதும் செலுத்த நேரமில்லாமல் உயிர்களைக் காக்கும் வேலையில் தன்னுடைய பொழுதையெல்லாம் கழிக்கும் மருத்துவராக இருந்தார் அவர். அவருடைய குரல் சன்னமாக இருந்ததால், அவர் பேசுவதைக் கேட்க சற்றே சிரமப்பட வேண்டியிருந்தது. அறுவை சிகிச்சையும் அதை தொடர்ந்து வேறு பல வித சிகிச்சைகளும் அளிப்பது வழக்கமான திட்டமென்று அதை விவரித்தார். அனேகமாக கதிர்வீச்சு மற்றும் கீமோதெரபியாக அவை இருக்கலாம். அப்போலோ சிறப்பு மருத்துவமனையின் பரிசோதனை முடிவுகளை உறுதி செய்யவும், அவற்றை மீண்டும் ஒரு தடவை சரி பார்க்கவும் தாமும் சொந்தமாக சில பரிசோதனைகளைச் செய்ய விரும்பினார்.

FNAC (Fine Needle Aspiration Cystology) - சன்னமான ஊசியின் மூலம் ஒரு துகளை எடுத்து செய்யும் பரிசோதனை) மிகவும் வலியுள்ளதாக இருந்தது. டாக்டர் சுகுமாரன் “சற்றே பொருத்துக் கொள்ளூங்கள் - ஒரு மிகச் சிறிய துளைதான், என்று எரிச்சலூட்டும் உற்சாகத்துடன் கூறினார். ஒன்றல்ல, பற்ப துளைகள் , அவைகள் சிறியவையும் அல்ல, பின் என் உடலில் ஒளிந்திருக்கும் ராக்ஷசனைக் கண்டுபிடிக்க எக்ஸ்-ரே, எலும்பு ஸ்கேன் மற்றும் அல்ட்ரா சவுண்ட் முதலியவைகள் செய்வதற்கான அறைகளின் வெளியில் காத்திருப்பு - அதிருஷ்டவசமாக எந்து இடது மார்பகம் மட்டும் தான் பாதிக்கப்பட்டிருந்தது.

மூன்று நாட்களுக்குப்பிறகு, டாக்டர் சாந்தா பரிசோதனைகளின் முடிவுகளை, தன் முன் வைத்துக் கொண்டு என் கணவரிடமும் என்னிடமும் தன் பரிசோதனைகளின் முடிவுகள் அப்போலோ சிறப்பு மருத்துவ மனையின் முடிவுகளுடன் முழுமையாக ஒத்துப் போகவில்லை என்றும், நான் மேஸ்டெக்டமி செய்து கொள்ள வேண்டும் என்று அவர் கருதுவதாகவும் சொன்னார். அது மார்பகத்தை முழுவதுமாக அகற்றுவதா அல்லது ஒரு பகுதியை மட்டுமா என்பது, மேலும் சில சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட துகள்களின் சோதனைக்குப் பின் நிச்சயிக்கப்படும் என்றார். அறுவை இல்லாமல் மாற்று வழிகள் உண்டா என்று அவரைக் கேட்டேன். “இல்லை; அறுவையைப் போல முழு மனதுடன் பரிந்துரைக்கத் தக்கதாக வேறு ஒன்றுமில்லை,” என்றார். எனக்கு அறுவை சிகிச்சை வேண்டாமென்று கூறினேன். அந்தச் சிதைவுடன் நான் வாழ முடியாது என்ற எண்ணத்துடன் என்னுடைய கர்ம வினைப்படி என் வாழ் நாட்கள் அதன் முடிவிற்கு வர வேண்டுமென்றிருந்தால் அதன் போக்கில் நான் குறுக்கிட விரும்பவில்லை என்றும் என் கருத்துக்கக்ளை அவர் முன் வைத்தேன்.

என்னுடைய தோழி டாக்டர் லக்ஷ்மி என்னைக் காண வந்தபோது, தான் ஆலோசனை கேட்ட ஒவ்வொருவரும் அறுவை சிகிச்சையைத்தான் பரிந்துரைத்தார்கள் என்று சொல்லி இருந்தார். ஆதனால் டாக்டர் சாந்தா அவர்கள் முன் என் யோசனையை தயக்கத்துடன் தான் வைத்தேன்.

‘நான் செய்ய வேண்டிய வேலைகளை செய்து முடிக்காமல் போய் விடுவேனென்பதுதான் என் விதியாக இருக்குமென்றால், எந்த வித சிகிச்சையும் செய்து கொள்வதில் பயனில்லை” என்று டாக்டர் சாந்தாவிடம் சொன்னேன். மருந்து, காலம் மற்றும் கர்மாவைப் பற்றிய என் கருத்துகளையும் ஒருவர் பிறப்பின் குறிக்கோள் பூர்த்தியாகி விட்டால், உடலின் சிதைவு ஆரம்பிக்கும் என்ற என்னுடைய தத்துவத்தையும் விவரித்தேன். வேதங்களின் செய்தியை உண்மையாக உள் வாங்கிய ஒருவரால் உடலின் வீழ்ச்சியை கூட ரசித்து அனுபவிப்பது சாத்தியமென்று பத்து வருடங்களுக்கு முன் என் குரு நாதர் சொல்லியிருந்தார். அந்த இரண்டாம் பகுதியை தவிர்த்துவிட்டு முதலாவதை மட்டிலும் டாக்டர் சாந்தாவிற்கு நான் அளித்த என் பதிலுக்குள் பின்னியிருந்தேன்.

அந்த மகத்தான அறுவை சிகிச்சை நிபுணர், ஆச்சர்யமளிக்கும் விதத்தில் என் கருத்துக்களை ஆதரித்தார்.

“நாங்கள் நோயாளிகளின் ஒப்புதலும் மன நிலையும் நோய் குணமாவதற்கு அத்தியாவசியம் என்று நம்பிகிறோம். உங்களுடைய வேலைகளை பூர்த்தி செய்ய போதிய அவகாசம் கொடுக்க முடுயுமென்று நான் நம்புகிறேன். நான் பரிந்துரைக்கும் சிகிச்சை செய்து கொள்வதைப்பற்றி சற்றே யோசியுங்கள்.”

நான்கு நாட்களுக்குப்பிறகு பிப்ரவரி 8ம் தேதியன்று மீண்டும் அவரைச் சந்தித்தோம்.

உங்கள் முடிவு என்ன? டாக்டர் சாந்தா கேட்டார்.

“கதிர்வீச்சும் கீமோதெரபியும் மாத்திரம் செய்துகொண்டு குணமானவர்கள் உண்டா? என்று கேட்டார், மருத்துவர் வாக்கே வேதவாக்கு என்று நம்பிய காலத்தைச் சார்ந்த பெற்றோருக்குப் பிறந்த குழந்தையான என் கணவர்.

“ஆமாம் தாங்கள் குணப்பட்டுவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் சென்றவர்கள் உண்டு”, “ நான் அதை முதலில் பரிசோதித்துப் பார்க்க விரும்புகிறேன்” என்று துணிந்து சொன்னேன்.

“சரி, ஆனால் அது நீங்கள் முழு அறிவுடனும் எடுத்த தேர்வு என்று எழுதிக் கொடுக்கவேண்டும்.”

அதன்படி ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தேன். என்னுடைய முதல் கீமோதெரபி சுற்றுக்கு 9 பிப்ரவரி 2002 அன்று வரச் சொன்னார்கள்.

அந்த கீமோதெரபிக்கும் மற்ற ஐந்து கீமோதெரபி சிகிச்சைகளுக்கும் உறவினரென்பதை விட சினேகிதி என்ற னிலையில் இருந்த என் அண்ணி என்னுடன் வந்தார். அவர் தான் என்னுடைய இரண்டவது குழந்தை பிறந்த போது என்னுடன் பிரசவ அறைக்கு வந்தவரென்பது என்னுடைய நினைவிற்கு வந்தது. அவர்க்கு என் வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் விதி இருப்பதால் அவர் தான் என்னை இறுதியாக வழி அனுப்பவும் உடனிருப்பாரோ என்ற எண்ணமும் கூடவே எழுந்தது, எனக்கு அறிவுரை கூறிய டாக்டர் ரமணன், “உங்கள் தலை முடி எல்லாம் உதிரும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும், பிற்காலத்தில் இதை நினைவு கூறும் பொழுது உண்பது, உடுத்திருப்பது போன்ற இப்போது நீங்கள் செய்வதனைத்தின் மேலும் ஒரு வித வெறுப்புகள் தோன்றும்,” என்று கூறினார். ஊசிகள் பொருத்தப்பட்டு குணமளிக்கும் விஷத் திரவங்கள் உள்ளே செல்லத் தொடங்கியவுடன், ஒரு திரவ நெருப்பு என் உடல் பூராகவும் ஓடிக்கொண்டிருப்பது போல் தோன்றியது; பயங்கரமாக இருந்தாலும் அது ஒரு நிமிடம் தான்; அதன் பின் வலி தணிக்கும் மருந்துகள் பேலியேடிவ்ஸ் (Paliatives) உடனே உள்ளே புகுந்தன. அடுத்த மூன்று மணி நேரத்திற்கு ஒரு பெரிய கோப்பை விஸ்கி குடித்தது போன்ற உணர்வு எனக்கு. நான் பறந்து கொண்டிருந்தேன். வேறு சிலர் போல் நான் பயங்கரமான மற்றும் மனதை உலுக்கும் எதிவினைத் தாக்கங்களால் துன்பப் படவில்லை.

அதே போன்ற ஆறு சுற்றுக்கள் எடுத்துக் கொண்டேன். அப்போது என்னுடைய பாதி தலை முடியையும் அனேகமாக நெற்றிப் புருவங்கள் முழுவதையும் இழந்து விட்டேன். அதில் ஆச்சர்யமென்னவென்றால் ஒருவரும் அதை

கவனிக்கவில்லை. இதற்குக் காரணம், ஒன்று மக்களுக்கு கூர்ந்து கவனிக்கும் திறமை குறைந்துவிட்டது, அல்லது இந்த சிகிசை எடுத்துக் கொள்ளும் பலருக்கு ஏற்படும் அளவுச் சேதமோ உருக்குலைவோ எனக்கு ஏற்படவில்லை, அறைக்குள்ளேயே இருந்ததால் என்னுடைய தோல் சற்று வெளிரிவிட்டது, உற்சாகத்துடன் உணவு உட்கொள்ள முடியவில்லை, இரவோடு இரவாக தூண்டிவிடப்பட்ட மாதவிடாய் நிறுத்தத்தாலும் மருந்துகளாலும் அடிக்கடி என் உடல் பூராவும் எரிந்தது.

பார்வை மங்குதல் போன்ற பல சின்ன சின்ன உறுத்தல்கள் இருந்தன. ஆனால் என்னை எல்லாவற்றையும் விட அலற வைத்தது ஞாபக சக்திக் குறைவுதான். திங்கட்கிழமையா, வியாழக்கிழமையா என்று கூட நினைவிருக்காது. வியக்கத்தக்க கூர்மையான ஞாபக சக்தியை பல வருடங்களாகக் கொண்டிருந்த எனக்கு இது பெரிய அதிர்ச்சி. ஒரு அமெரிக்கப் பெண், அவளுடைய கீமோதெரபிக்குப் பின் ஓர் இரவுச் சாப்பாட்டு மேசையில் சமையற்கட்டின் ஸ்பாஞ்சை கோழிக்குப் பதிலாக அவனில் சமைத்து வைத்து அவருடைய குடும்பத்தை அதிர வைத்தார் என்று பின்னர் படிக்க நேர்ந்தது. அதனால் மறதியென்ற பக்க விளைவு பலருக்கும் ஏற்படும் ஒன்றுதான்.

என் சிகிச்சையின் மற்றொரு நிலை, பாதிக்கப்பட்ட மார்பகத்துக்கு கதிவீச்சு அளிப்பது தான். 20 நாட்களுக்கு, ஒவ்வொரு காலையிலும், ஒரு பெரிய இருட்டுக் கவிந்த அறையில் கதிவீச்சு எடுத்துக் கொள்ளக் காத்திருக்கும் புற நோயாளிகளின் வரிசையில் நானும் நின்றேன். நுழைவாயிலில் இருந்த குமாஸ்தாக்கள் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டதுடன் நடமாடும் ஊக்கியாகத் திகழ்ந்த டாக்டர் விஜயாவும் அசாதாரண சூழ்நிலையை இயல்பான ஒன்றாக ஆக்கினார். எனினும் அந்த இரும்புத் திரையையும் பச்சை மேலங்கிகளையும் என்னால் என் வாழ் நாளில் மறக்க முடியுமா? அனைவரும் வெளியேறி அந்த ஈயத் தகடுகளால் மூடப்பட்ட பெரிய கதவுகள் லேசான சத்தத்துடன் சாத்தப்படுவதற்கு முன்பு, படுக்கையின் மேல் ஒரு பொம்மையைப் போல அந்த பிரும்மாண்ட அமைப்புகளின் கீழே ஒழுங்காகக் கிடத்தப் பட்டேன். மற்றவர்களைப் போலவே நானும் அந்த குறிப்பிட்ட சில நிமிடங்களுக்கு அசையாமல் படுத்திருந்தேன். அப்போதும் நான் ஒரு சிறிய வண்டியை ஓட்டிக்கொண்டு வீடு திரும்புவேன். ஆனால் பின்னால் தோல் வயண்டு விழுந்தபோது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒரு வித உடலெரிச்சல் - உள்ளேயிருந்து நெருப்பு வைக்கப் பட்டாற் போல் - ஏற்பட்டது. டாக்டர் சாந்தா நான் குளிக்கலாமென்றும் ஆனால் அப்போது உடலை அழுத்தித் தேய்த்துக் கொள்ளக் கூடாதென்றும் விளக்கியிருந்தாள். எனக்கென்று அளவெடுத்து உருவாக்கப்பட்ட கவசம் ஒன்று நான் ஒவ்வொரு நாளும் கதிரியக்கத்திற்கு உட்படும் முன் எனக்கு அணிவிக்கப்பட்டது. மெல்ல மெல்லச் சருமம் கருமையாக மாறியது. அந்த இடம் கொப்பளித்து வலித்தது. ‘அதிகம் நடமாடாமல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் படுத்தே இருங்கள் என்று அதைச் சமாளிக்க, டாக்டர் விஜயா அறிவுரை கூறினார்.

உயர்ந்த பக்ஷ அளவு அவருக்குக் கொடுக்கப் படுகிறது டாக்டர். டாக்டர் விஜயா டாக்டர் சாந்தாவிடம் கூறியதை நானும் கேட்டேன்.

"அது பரவாயில்லை; அதனால் ஏற்படும் சிதைவுகளைப் பின்பு கையாளலாம்; ஆனால் இப்போது புற்று நோயை விரட்ட விரும்புகிறேன். டாக்டர் விஜயா ஒரு அற்புதமான களிம்பை எனக்கு பரிந்துரைத்தார். அதன் பெயர் இப்போது என் நினைவில் வர மறுக்கிறது; பப்பாளியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது. அது சந்தையில் மலிவான விலையில் கிடைக்கிறது . கொப்புளங்களையும் வலியையும் குறைக்க அது உதவியது.

என்னுடைய சக நோயாளிகளுடன் பேசுவது எனக்கு மகிழ்ச்சி தரும் ஒன்றாக இருந்தது. எங்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்றைப் பற்றி நாங்கள் பகிர்ந்து உரையாடினோம். அனைத்தையும் அனைவரையும் சமனப்படுத்தும் புற்று நோய் எங்களுக்கு பொதுவான ஒரு களமாக இருந்தது. நோயாளிகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்தார்கள்; அதில் சிலர் பரம ஏழைகள். எங்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று மன அழுத்தம் தான். நான் ஒரு ஸ்டெல்லா மேரியை உற்சாகப்படுத்த பெரும் முயற்சி செய்தேன். கிருஸ்துவ மதம், அதைப் பின் பற்றுபவர்களிடம் உருவேற்றும் "பாவம்" என்பதைப் பற்றிய ஒரு கனத்த சிந்தனை அவரிடமும் இருந்தது. தன் கடவுளின் மனம் நோகும்படியான ஒன்றை தான் செய்து விட்டதாக அவர் நம்பினார். நான் அவருக்கு புற்று நோய் கடவுள் அளிக்கும் தண்டனையல்ல வென்றும், மார்படைப்பு, நீரகம் மற்றும் மண்ணீரல் செயலிழப்புகளை விட புற்று நோய் ஒன்றும் குணப்படுத்த முடியாத பயங்கரம் இல்லையென்றும் எடுத்துக் கூறினேன். நான் வேண்டுமென்றே வழக்கமாக செய்யாத ஒன்றைச் செய்தேன்; புற நோயாளியாக சிகிச்சைக்குச் சென்ற போது அடர்ந்த வண்ண உடைகளும் உதட்டில் சாயமுமாகச் சென்றேன். நாளடைவில் அவர் சற்றே உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் இருக்குமாறு என்னால் செய்ய முடிந்தது. அவருக்கு மன நல ஆலோசனைகள் கூற முடிந்தால் நன்றாக இருக்குமென்று நினைத்தேன். ஆனால் அதற்கு விசேஷ பயிற்சி தேவை அல்லவா?

அதிர்ஷ்ட்ட வசமாக எனக்கு வேலை நிறையவே இருந்தது. என்னுடைய காரியதரிசியை நான் வாரத்தில் இரண்டு முறைகள் அலுவலகத்தில் சந்தித்து எழுத்து வேலைகளெல்லாம் தடையின்றி நடக்க வகை செய்தேன். ஆனாலும் சில போதுகளில் பலவீனமும் செயலற்ற உணர்வும் குறுக்கே நின்றன. சந்திப்புகளும் விவாதங்களும் சுருக்கமாம வைக்கப்பட்டதுடன் என்னுடைய வழக்கமான மணிக்கு நூறு கி.மீ வேகத்தில் வேலை செய்ய முடியாதது எனக்குக் குறையாக இருந்தது. என்னால் மற்றவர்களின் ஆக்க சக்தியை வளர்க்கக்கூடிய சக்தி இருப்பதை நான் இனம் கண்டு அதன்படி மற்றவர்களுக்கு உதவத் தொடங்கி இருந்தேன். ஒரு போதும் நான் சந்தித்திராத ஒருவகை மன அழுத்தத்தை இப்போது நான் சந்திக்க வேண்டியிருந்தது. முன்பு நான் வேதாந்தம் மற்றும் தத்துவப் படிப்பினால் ஒரு வித விரக்தி மனப்பான்மை எனக்கிருப்பதாக நினைத்திருந்தேன். ஆனால் இப்போது ஆத்மவிசாரத்திலும்

நான் தோல்வி அடைந்திருப்பதைக் கண்டேன். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவிலை. அந்த விரக்தி மருந்துகளால் உருவாக்கப் பட்ட சலிப்பா? ? என்னுடைய சுய அடையாளத்திற்கே ஒரு சவால் விடப்பட்டது போல் இருந்த இந்த மனப்போக்கு ஒரு வருடத்திற்கு நீடித்தது. இந்த சமயத்தில் தான் குஜராத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் எதிர்வினைகளால் இந்தியாவும் தலை கீழாகப் புரட்டிப் போடப்பட்டிருந்தது. குறுகிய காலத்தில் எல்லாமே மாறி விட்டிருந்தது. என் வாழ்க்கையையே மாற்றி அமைத்த நிகழ்ச்சிகளாக மூன்றையும் இணைத்து என்னால் பார்க்க முடிகிறது; குஜராத் கலவரம், உலக வணிக மையத்தில் விழுந்த குண்டுகள் மற்றும் என்னுடைய மாறிவிட்ட உடல் நிலை.

இங்கு மற்ற ஒன்றைக் கூற வேண்டும். டாக்டர் ரமணன் நான் இந்த காலகட்டத்தை பிற்காலத்தில் நினைவு கூறும்போது நடுக்கத்துடனும் பீதியுடனும் அவை மனதில் தோன்றுமென்று சொல்லியிருந்தார். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. அந்தக் காலக்கட்டம் என்னை நான் அறிந்து கொள்ள உதவியது. வாழ்க்கையின் எல்லா அங்கங்களும் மந்த கதியில் இயங்கத் தொடங்கி இருந்தன. ஆழ்மனதிற்குள் பயணம் செய்ய எனக்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. என்னுடைய உண்மையான நண்பர்கள் எவர். நான் வழக்கமாகப் போய்க்கொண்டிருந்த பல இடங்களில் நான் இல்லாத வெறுமையை உணர்ந்தவர்கள் எவர் என்றெல்லாம் இப்போது எனக்குத் தெளிவாயிற்று. அற்ப விஷயங்களுக்கெல்லாம் குறைப் பட்டுக் கொள்வதை விட்டு எனக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளை மதிக்கக் கற்றுக் கொண்டேன். அது ஒரு வித உள் நோக்கிய பயணம் என்பதால் முதன் முறையாக நான் என்னை அகம்பாவம் மற்றும் சுய முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அடர்ந்த மேகங்களூடே பார்க்காமல் சரியான கோணத்தில் பார்க்கக் கற்றேன். நானும் மற்றவர்களைப் போலத்தான்; ஆனால் அவர்களை விட சற்றே கூடுதல் அதிருஷ்டசாலி. ரொம்ப ரொம்ப அதிக அதிருஷ்டசாலி. அப்போது உடுத்திய சில துணிமணிகளை இன்னமும் வைத்திருக்கிறேன். நான் என்னுடைய நாளேடுகளையும் குறிப்புப் புத்தகங்களையும் இன்னும் வைத்திருக்கிறேன். என்னுடைய புற நோயாளிகள் பிரிவின் அடையாள அட்டையையோ ஒரு முத்திரை பதக்கம் போல் பாதுகாத்து வருகிறேன்.

செப்டம்பர் 2002 ல் ரூபா பிரசுர நிலையம், குமார் அவர்களின் “தி ஜாய் ஆ்ஃப் கேன்சர்” - புற்று நோய் அளிக்கும் சந்தோஷம் என்ற புத்தகத்தை வெளியிட்டார்கள்; வெளியீட்டு விழாவில் நான் டாக்டர் சாந்தா அவர்களின் பக்கத்தில் அமர்ந்திருந்தேன் ஆளுனர் ஒரு ஓய்வுபெற்ற DGP, தன் பேச்சில் “இந்த கொடூரமான வியாதி” என்று புயலாக கர்ஜித்தார். டாக்டர் சாந்தா இந்த மதிப்பீட்டிற்கான தன்எதிர்ப்பை மௌனமாக ஆனால் வலிமையான “இல்லை, அப்படி இல்லை” என்பதன் மூலம் தெரிவித்தார், என்னிடம் “உங்களைப் போன்றவர்கள் வாய் திறந்து பேச வேண்டும்” என்றார். நானும் அதைப்பற்றி பேசவும் எழுதவும் வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் வெகு நாட்களுக்கு மௌனம் காத்துவிட்டேன்.

முதலில் மூன்று, அதன் பின் ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று பரிசோதனைகளுக்குச் சென்று வந்தேன். மீண்டும் புது நோயாளிகளின் முகங்களில் தோன்றும் பய உணர்ச்சியைக் காணலானேன். பழைய நோயாளிகளின் முகங்களில் ஒரு அமைதி; குறிப்பிட்ட எதுவும் மனதில் இல்லாத ஒரு சூனியம் தந்த அமைதியைக் கண்டேன். வலியுடனான மேமோகிராம் அடி வயிற்று ஸ்கேன், மெல்ல மெல்ல அவர்கள் முகங்களில் புன் சிரிப்பு மலர்ந்து விரியப் பேசும் மருத்துவர்களிடமான சம்பாஷணைகள், டாக்டர் சரோஜினி, இரண்டு வருடங்களுக்கு முன்பு " நாங்கள் உங்களுடைய வியாதியைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். அது எப்படி மாயமாக மறைந்தது என்று" என்றார். நான் டாக்டர் சாந்தாவின் வெற்றிக் கதையின் ஒரு அத்தியாயம். அவரால் புத்துயிர் அளிக்க கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவராக என்னை கருதுகிறேன். முதலில் டேமோஆக்ஸிஃபேனுடனும் அதன் பின் லெட்ரோஜுடனும் என்னுடைய புற்று நோய்க்கு பின்பட்ட அலுவலக வாழ்க்கையை நான் தொடர்கிறேன். நோய் வாய்ப்படுவதற்கு முன்பை விட தற்பொழுது சற்று அதிகமாக களைப்படைகிறேன் என்பது மட்டும் தான் இன்று நான் வாழும் வாழ்க்கையில் வித்தியாசமாக இருக்கிறது. வருங்காலத்தில் அந்த தோழைமையுடன் பழகிய விரோதி மீண்டும் தலை காட்டுமாவென்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால் தற்பொழுது நான் புற்று நோயிலிருந்து மீண்டு வந்தவர்களில் ஒருத்தி.

அதிலிருந்து நான் என்ன தெரிந்து கொண்டேன்? நமது கண்களின் வண்ணத்தைப் போல, தோல், முடி இவைகளின் தோற்றத்தைப் போல, நாம் நமது மருத்துவ எதிர்காலத்தையும் பிறப்பிலேயே சுமந்து வந்துள்ளோம். அன்புள்ளவர்கள் எல்லா இடத்திலும் உள்ளார்கள். வாழ்க்கையின் போக்கே சிற்சில மணி நேரங்களில் முழுவதுமாக மாறிவிடலாம். நான் அலுவலகத்திலும் வீதிகளிலும் மற்றவர்களைப் பார்த்து, "இவர்களில் ஒருவருக்கும் புற்று நோய் இல்லை. இவர்கள் தங்கள் முடியும் ஆரோக்கியமும் எப்போதும் நன்றாகவே இருக்குமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று நினைப்பதுண்டு. இந்த கொடூரமான வியாதியால் பீடிக்கப்பட்டவர்களை பராமரிப்பதற்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளவர்கள் இவ்வுலகில் உள்ளார்கள் என்பதும் நான் கற்ற பாடங்களில் ஒன்று. "சாதி மதக் கொள்கைகள் நம் சமூகத்தை பீடித்திருக்கும் புற்று நோய்" என்பது பத்திரிக்கையாளர்களுக்கு உகந்த கருத்து. "தீவிரவாதம் சமூகத்தின் சிறுநீரக செயலிழப்பு" அல்லது "சமுகத்தின் மாரடைப்பு" என்று அவர்கள் ஏன் ஒரு போதும் சொல்வதில்லை.? காலம் காலமாக புற்று நோய் என்ற வார்த்தை நம் வாயிலில் வந்து நிற்கும் எமன் என்றாகிவிட்டது. "உனக்குத் தெரியுமா? அவளுக்கு புற்று நோய்" என்று ஒருவர் சொல்லத் தொடங்குவதே "அவள் இறந்து கொண்டிருக்கிறாளென்று உனக்குத் தெரியுமா? என்பது போல் தொனிக்கிறது.

புற்று நோய்க்குப் பின்பும் வாழ்க்கை உண்டு

புற்று நோய் உள்ளபோதே வாழ்க்கை உண்டு
பெயர் குறிப்பிட விரும்பாதவர்.

# நினைவுப் பாதையினூடே

கிரேஸ் வர்கீஸ், சென்னை

ஜூலை7, 2002; பலவித உணர்ச்சிகளின் கலவையான நாள்; ஒரு பக்கம் என்னுடைய மகன் தொழில் சார்ந்த படிப்பை தொடங்கியதால் மனதில் சந்தோஷம் பொங்கிய நாள்; மற்றொரு பக்கம், எனக்கு மார்பகப் புற்று நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சோகமான நாள். ஒரே கணத்தில் என்னைச் சுற்றியிருந்த உலகம் முழுவதும் நொறுங்கி உலகத்தின் ஆழ்ந்த இருண்ட இடத்திற்கு நான் தள்ளப் பட்டிருப்பது போல் உணர்ந்தேன். பயம் என் ஒவ்வொரு அங்கத்தையும் கவ்வியது. என் மகனுக்கான என் கனவுகளும், எதிர்கால வாழ்க்கையும் ஒரு டன் செங்கல் திடீரென கீழே விழுந்து நொறுங்குவது போல் உடைந்தது. எல்லோரும் கேட்கும் கேள்வியை நானும் எனக்குள் கேட்டேன், கடவுளே, எனக்கு ஏன் இந்த சோதனை? மடை திறந்தது போல் கண்ணீர் வடிந்தது. மருத்துவர்கள் நான் அழுவதைத் தடுக்கவில்லை. என்னுடன் இருந்த என் கணவரும் மனம் உடைந்து போயிருந்தார். ஆனால் தைரியமாக இருக்க முயற்சித்தார்; அவர் தன் கண்ணீருக்கு அணை கட்டுவதை என்னால் பார்க்க முடிந்தது.

வீடு சேர்ந்ததும் கடவுளிடம், “நான் என் கணவருக்காகவும், மகனுக்காகவும் வாழ விரும்புகிறேன்’ என்ற ஒரு மௌன விண்ணப்பத்தை வைத்தேன். “அவர்’ குரல் தன் மேல் நம்பிக்கை வைக்கும்படி கூறியது. அதன் பின் நான் அதைச் செய்ய முனைந்தேன்; விளக்க முடியாத ஒரு மனோ திடம் எனக்குக் கிடைத்தது. அந்தக் கணமே அந்த வியாதியை வென்று வெற்றி வாகை சூட கங்கணம் கட்டிக் கொண்டேன். நான் வேலைக்குச் செல்லும் பாதையில் இருந்த நான் பெரும்பாலும் பார்வையை வேறு பக்கம் திருப்பி பார்க்கத் தவிர்த்த அதே புற்று நோய் மருத்துவ சாலையை சென்றடைந்தேன். பலவிதமான பரிசோதனைகள் செய்யப்பட்டு எனக்கு டக்டல் கார்சினோமா (Ductal CarcinomA) இரண்டாம் கட்ட புற்று நோய் இருப்பது உறுதி செய்யப் பட்டது. கடவுள் புண்ணியத்தில் அது ஆரம்ப கட்டமென்றும், குணப்படுத்தக் கூடியதென்றும் சொன்னார்கள். இரண்டு சுற்று கீமோதெரபி (Chemotheraphy) செய்து கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டது. அந்த சிகிச்சை முடி உதிர்வது, வாய்ப்புண், குமட்டல் போன்ற பக்க விளைவுகளை உண்டாக்கக் கூடும் என்ற விவரங்களை உறுதி செய்து எழுதப்பட்டிருந்த ஒரு தாளில் நான் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்டேன். இவை அனைத்தின் இடையே என் குடும்பத்தின் ஆதரவு எனக்கு இருந்ததுடன், வானத்திலிருந்த கடவுளும் என் வேண்டுகோளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். நான் கையெழுத்திட்டு ஏற்று எதிர்பார்த்த பக்க விளைவுகள் எதுவுமே எனக்கு இருக்கவில்லை. என் முடியும் உதிரவில்லை. கடவுளின் சக்தியை அப்பொழுது தான் உணர்ந்தேன். ஆனால் அப்போதுதான் வந்தது அடுத்த பின்னடைவு - அக்டோபர் 3ம் தேதியன்று அறுவை சிக்ச்சை செய்து கொள்ள அனுப்பப் பட்டேன். அந்த நாளும் பல்வேறு உணர்ச்சிகளின் கலவையான நாள் தான் - என் கணவரின் பிறந்த நாளான் அது என் பெண்மைக்கு ஓர் அடி விழுந்த நாளாகவும் ஆயிற்று. என் உடலின்

ஒரு முக்கிய அங்கத்தை நான் இழந்து விட்டேனென்ற உண்மையின் தீவிரம் நான் அறுவை சிச்சை முடிந்து வெளியில் வந்த பிறகு தான் என்னைத் தாக்கியது. அந்த ஊனம் என்னை அச்சுறுத்தியது. அறுவை சிகிச்சை முடிந்த பிறகு மருத்துவர் என்னிடம் நான் இன்னும் இரண்டு சுற்று மருந்துகளின் மூலம் அளிக்கப்படும் சிகிச்சை பெற்றால் போதுமென்றும், கதிரியக்கச் சிகிச்சை (Radiation theraphy) தேவைப் படாதென்றும் என்னுடைய மருத்துவப் பரிசோதனயில் தெரிய வந்திருப்பதைக் கூறினார். அப்பாடா ! என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! அது நான், என் சிகிச்சையின் இறுதிக் கட்டத்தை அடந்து விட்டதை அல்லவா உணர்த்தியது.

ஒரு மாத ஓய்வுக்குப் பிறகு நான் என் பணியிடத்திற்குச் செல்லத் தொடங்கினேன். பத்து வருடங்களுக்குப் பிறகு நான் இன்று பூரண ஆரோக்கியத்துடனும் வலிமையுடனும் உள்ளேன். சொல்லப் போனால் என் உடலும் உள்ளமும் முன்பைவிட அதிக ஆரோக்கியமாக உள்ளன; என்னை உள்ளத்தளவில் மாற்றிய புற்று நோய்க்குத் தான் நான் நன்றி சொல்ல வேண்டும். கடவுளின் அற்புதமான வினை தீர்க்கும் தன்மையும், புற்று நோய் மன்றத்தில் சேவைக்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு தொண்டு செய்யும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர் குழாம் அளித்த சிறப்பான சிகிச்சையும், மனம் தளராமல் எனக்கு உடல் மற்றும் மன அமைதியும் பாதுகாப்பும் அளித்த என் குடும்பத்தினருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

இவை அனைத்தையும் கடந்து வந்த பின்னர் நான் ஆழமாக சிந்திக்கத் துவங்கினேன். எனக்குக் கிடைத்திருக்கும் இந்த புனர் வாழ்விற்கு ஈடு செய்யும் வகையில் நானும் ஏதாவது செய்ய வேண்டுமென்ற உந்துதல் எனக்கு இருந்தது. வாழ்க்கையில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் எப்போதும் ஓடிக்கொண்டிருந்தாலும் குறிப்பாக என்ன செய்வது, எப்படிச் செய்வது என்றெல்லாம் வகை தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் புற்று நோயிலிருந்து மீண்டு வந்த ஒருவரென்ற இப்புதிய தகுதியைக் கொண்டு மற்ற புற்று நோயாளிகளுக்கு உதவிக்கரம் நீட்டலாமென்ற எண்ணம் உதித்தது. அது இன்று என் வாழ்க்கை முறையாகவே ஆகி விட்டது. என்னுடைய மீட்சியின் அனுபவங்களை எடுத்துரைக்கும் போது ஒரு நோயாளியின் முகத்தில் தோன்றும் புன்னகையும், புதியதாக மனதில் எழும் நம்பிக்கயினால் தோன்றும் கண்களின் பிரகாசமும் என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கி விட்டிருக்கிறது. நான் புற்று நோயை வென்று , இப்போது மற்ற புற்று நோயாளிகளும் அதைக் கடந்து வர உதவி வருகிறேன்.

புற்று நோயிலிருந்து மீட்சி, புற்று நோயாளிகளின் வாழ்க்கைகளில் எவ்வித மாற்றம் வர உதவி உள்ளதென்பதை விளக்க சில நிகழ்ச்சிகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மார்பு புற்று நோய் இருப்பதாகக் கூறப்பட்டு சிகிச்சையை துவங்க மருத்துவருக்காக காத்திருந்த வரிசையில் ஒருத்தி, மெஹருன்னிஸா என்னும் இளம் தாய். அவள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு நான் அவளிடம் விசாரித்ததில் அவள் கவலை தெரிய வந்தது. இந்தக் கொடுமையான நோய் காரணமாக அவளுடைய கணவன் சாதாரணப் பெண்ணைப் பொல இல்லாத (உடலுறவுக்கு ஏற்றவளாக இல்லாத) அவளால் தனக்கு உபயோகமில்லை என்று கருதி அவளைக் கை விட்டு விடுவாரென்ற பயம் தான் அவளுக்கு. சிறிது நேரம் அவளிடம் பேசிய பிறகு அவளுடைய கணவன் மருத்துவ சாலைக்கு அவளுடன் வந்ததாகவும், ஆனால் அந்த வியாதிக்கு உள்ள அவப்பெயரால் அவளுடன் இருப்பதை மற்றவர்கள் பார்ப்பதை விரும்பவில்லை என்றும் தெரிந்து கொண்டேன். அவர் வெளியில் காத்துக் கொண்டிருந்தார். நான் அவளுடன் விவரமாகப் பேசி சிகிச்சை முடிந்தவுடன் அவள் சாதாரணமான குடும்ப வாழ்க்கை வாழ முடியும் என்ற தைரியத்தை அளித்தேன். ஆனால் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அப்பொழுதுதான் நானும் அந்த வியாதியிலிடுந்து மீட்கப்பட்டு இப்பொழுது ஒரு முழுமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேனென்று சொன்னேன். என் கூற்று அவள் முகத்தில் ஆச்சரியத்தைத் தோற்றுவித்த்து. என்னை அவளுடைய கணவனிடம் பேசி அவருக்கு நம்பிக்கை ஏற்படுத்தக் கேட்டுக்கொண்டள். அவளுடைய கணவனிடம் தனியாகப் பேசினேன். அவருடைய உறவினர்கள் புற்று நோய் ஒரு சாபக் கேடு. அவளுடன் தொடர்ந்து வாழ்ந்தால் அவரும் அதற்கு பலியாகிவிடுவார் என்று அவருக்குத் துர்போதனை செய்திருந்தார்கள். ஒரு மணி நேர பேச்சுக்குப் பின் அவர் மனதில் எழுந்த நம்பிக்கையின் கதிர்கள் அவர் முகத்தில் புன்னகையின் கீற்றூகளாகத் தோன்றுவதை என்னால் காண முடிந்த்து. பின் மெஹருன்னிஸாவும் அந்த அறைக்குள் அழைக்கப்பட்டு சமாதானத்தின் முதல் படியாக இருவரும் கை குலுக்கிக் கொண்டனர். ஆறு மாதங்களுக்கு பிறகு அவள் மறுபடியும் மருத்துவப் பரிசோதனைக்காக அங்கு வந்த போது அவளை நான் பார்க்க நேர்ந்த்து. இம்முறை மருத்துவரைப் பார்க்க காத்திருந்த போது அவள் கணவன் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். என் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது.

ஒரு நாள் புற்று நோய் மன்றத்தின் நோயாளிகளின் மனதிற்கு சிகிச்சை அளிக்கும் பிரிவிலிருந்து (psycho oncology department) எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. லக்ஷ்மி என்ற ஒரு பெண் மார்பகப் புற்று நோயுடன் மருத்துவமனைக்கு வந்திருப்பதாகவும், சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுப்பதாகவும் கூறினார்கள். நான் நிலையத்திற்கு விரைந்து சென்ற போது அங்கு தன் மகளுடன் லக்ஷ்மி உட்கார்ந்திருப்பதையும், அவர் தலையைக் குனிந்து கொண்டு அழுதவாறு இருப்பதையும் பார்த்தேன். லக்ஷ்மி ஒரு விதவை. அவருடைய மகள் அப்போதுதான் தன் கல்லூரிப் படிப்பை முடித்திருந்தாள். தற்காலிகப் பணியில் லக்ஷ்மி ஒரு பள்ளியில் வேலை செய்து வந்தார். அவருடைய சொற்ப சம்பளத்தில் தான் அவர்கள் இருவரும் ஜீவனம் நடத்தி வந்தனர். புற்று நோய் குணப்படுத்த முடியாத ஒன்று என்று லக்ஷ்மி கேள்விப் பட்டிருந்ததால் அதற்காக செலவழிக்க தன்னிடம் பண வசதி

இல்லை என்று கூறினார். தன்னிடமிருந்த உள்ளூர் செய்தித்தாள்களில் வந்திருந்த சில கட்டுரைகளையும், அச்சடிக்கப்பட்ட சில கைப்பிரதிகளையும் அவர் எனக்குக் காண்பித்தார். அவை புற்று நோய் குணப்படுத்த முடியாத ஒன்றென்று கூறின. நிலைமை இப்படி இருக்கும்போது மருத்துவமனைகளும் மருத்துவர்களும் ஏதோ சிகிச்சை அளிப்பதாகக் கூறிக்கொண்டு பணம் சம்பாதிக்க முயல்கின்றனர் என்ற எண்ணம் அவருக்கு. அதனால் அவர் வீட்டிற்குத் திரும்பிச் சென்று சாவை எதிர்பார்த்துக் காத்திருக்கப்போவதாக முடிவு செய்திருந்தார். அவருடைய சொற்ப சேமிப்பு மகளின் எதிகாலத்திற்கு உதவ வேண்டுமே அன்றி "உபயோகமில்லாத சிகிச்சைகளில்" வீணாக்கப் படக்கூடாதென்று அவர் சொன்னார். நான் அவர் கூறீயதையெல்லாம் பொறுமையாக்க் கேட்டுக் கொண்டிருந்தேன். பின் அவரிடம் நான், "புற்று நோய் நிச்சயமாக குணப்படுத்தப்பட்டு நீங்கள் மீண்டும் பழையபடி தினசரி வாழ்க்கையை நடத்த முடியும் என்று நான் உறுதியளித்தால் உங்கள் மனம் மாறுமா? என்று கேட்டேன். அவர் என்னைக் கேலியாக பார்த்துச் சிரித்து நான் மருத்துவமனைக்காக விளம்பரம் செய்கிறேனாவென்று கேட்டார். நானும் மார்பகப் புற்று நோயிலிருந்து மீண்டு வந்து வாழ்பவளென்று அவரிடம் கூறினேன். ஆனால் அவர் அதை நம்பாமல் மேலும் அதிகமாக கேலியாகச் சிரித்தார். அவர் " நீங்கள் பொய் சொல்கிறீர்கள்; நீங்கள் பார்க்க நன்றாக, உடல் நலத்துடன் தோன்றுகிறீர்கள்; என்னால் நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லை" என்றார். அந்தத் தருணத்தில் நான் என்னுடன் எப்போதும் எடுத்துச்செல்லும் மருத்துவமனை அளித்திருந்த நோயாளியின் அடையாள அட்டையை உருவினேன். அதை ஒரு முறை பார்த்ததுதான் தாமதம் அவருடைய உடல் மொழி எதிர்வினையிலிருந்து சாதகமான நிலைக்கு மாறியது. அவர் எழுந்து என் கால்களில் விழுந்து " இன்று நான் தெய்வத்தை என் கண்முன் பார்க்கிறேன்." என்றார் சிகிச்சைக்கு சம்மதித்து, உடனேயே மருத்துவரைச் சந்திக்கவும் சென்றார். சிகிச்சை தொடங்கிய மூன்று மாதங்களுக்குப் பிறகு அவரை நான் பார்க்க நேர்ந்த்து. அப்போது அவர் சந்தோஷமாகவும் ஆரோக்கியத்துடனும் இருந்தார். அந்த முறை தனியாக வந்திருந்தார். மகள் ஒரு வேலையில் அமர்ந்துவிட்டாளாம். லக்ஷ்மியும் தன் பள்ளிக்கூட வேலைக்குத் திரும்பி போக உத்தேசித்திருப்பதாக கூறினார்.

மன்றத்திற்கு நான் ஒரு முறை போனபோது அங்கு இரண்டு குழந்தைகளுக்கு தாயான இளம் பெண் கிருத்திகா அறுவை சிகிச்சைக்குக் காத்திருப்பதைக் கண்டேன். தன் கணவர் மற்றும் உறவினர்களால் சூழப்பட்டிருந்தும் அவர் தன் படுக்கையில் சோகமாக உட்கார்ந்திருந்தார். அனைவர் முகங்களிலும் கவலை காணப்பட்டதால் அந்த அறையே ஒரு இருண்ட தோற்றத்தைக் கொண்டிருந்தது.

மார்பக புற்று நோயிலிருந்து மீண்டு வந்த ஒருவரென்று என்னை நான் அறிமுகப் படுத்திக்கொண்டு நோயாளியுடன் பேச விரும்புவதாகத் தெரிவித்தேன். அவரிடம் விடை தெரியாத பல கேள்விகள் இருந்ததால், அவர் ஒவ்வொன்றாக அவற்றைக் கேட்கத் தொடங்கினார்.

- என் நோய் என் மகள்களுக்கும் தொத்திக்கொள்ளுமா ?
- ஒரு புற்று நோயாளியின் மகள்களை மணக்க எவர் முன் வருவார்?
- என் குழந்தைகளை சீராக வளர்க்க நான் உயிருடன் இருப்பேனா?
- என் கணவர் முன்பு போலவே என்னை ஏற்று என்னிடம் அன்பு செலுத்துவாரா?

நான் அவரிடம் சில நிமிடங்கள் பேசிய பிறகு அவருக்கு கொஞ்சம் தைரியம் வந்திருப்பதாகத் தோன்றியது. அவர் அறுவை சிகிச்சைக்குத் தயாரானார். அவரை ஒரு மாதம் கழித்து நான் பார்த்த போது அவர் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியுடனுமிருந்தார். அவர் தன்னுடைய கீமோதெரபியின் நான்காவது சுற்றை பெற்று முடித்து குணம் அடையும் பாதையில் இருந்தார். அவருடைய கணவர் தன் கைகளை அவரைச் சுற்றி அணைத்தவாறு நின்றிருந்தார். அவருடைய சந்தேகங்களெல்லாம் அழிக்கப்பட்டு விட்டன என்று எனக்குத் தோன்றியது.

# புற்று நோயுடன் நான் செய்து கொண்ட சமரசம்

கேப்டன் கீர்த்தன் குமார்

என்னுடைய நோயுடன் நான் சமரசம் செய்து கொண்டதும், இன்று நான் இங்கு இப்படி ஆரோக்கியமாக இருப்பதும் முற்றிலும் புற்று நோய்த்துறைத் தலைமை மருத்துவர் டி.ஜி.ஸாகர் மற்றும் டாக்டர் ரமணன், டாக்டர் பகீரதன், டாக்டர் ஸ்ரீதரன் ஆகியோர் கோண்ட குழுவின் சாதனையால் மட்டுமேயென்பதுடன் மனதிற்கும் இதமளிக்கும் மருத்துவமனையிலுள்ள அனைவருக்கும் என் பாராட்டுக்களையும் நன்றியையும் எடுத்துரைக்க கிடைத்த சந்தர்ப்பமாக இதைக் கருதுகிறேன்.

என்னுடைய குடும்பத்தில் ஒவ்வொருவரும் காட்டிய பரிவும் அன்பும் துணை இருந்திருக்காவிடில் இன்று நான் இதை எழுதிக் கொண்டிருக்க முடியாது.

டாக்டர் சாந்தா! நேற்று மாலை உங்கள் சஞ்சிகைக்கு எழுதச் சொல்லி வந்த உங்கள் கடிதம் எனக்கு ஆச்சர்யத்துடன் கூடிய சந்தோஷத்தைத் தந்தது. அதனால் நான் உடனே எழுத தொடங்கிவிட்டேன். உங்களுக்கு என் நன்றி. நீங்கள் இந்த சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தது மிகவும் பெருமையாக இருக்கிறது.

அன்பார்ந்தவர்களே, குழந்தைகளே, நான் இந்த நோயின் சிகிச்சை பற்றின விவரங்களைக் கூறுவதற்கு முன்பு, நான் வளர்ந்த விதத்தைப்பற்றியும் நான் எத்தகைய மனிதனென்பது பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். நான் முழுக்க முழுக்க சென்னையிலேயே வளர்ந்தவன் என்பதுடன் குழந்தைப் பிராயத்திலிருந்தே பூரண ஆரோக்கியத்துடன் இருந்திருக்கிறேன். என்னுடைய நேரத்தை பெரும்பாலும் வீட்டிற்கு வெளியில் கழிக்க விரும்பும் ஒருவனென்று என்னை கூறலாம். குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்கு பறப்பதில் ஆர்வம் அதிகம் என்பதுடன் வேகமாக செல்லும் எல்லாமே - கார்கள் பைக்குகள் ஆகாயவிமானங்கள் எதுவானாலும் சரி அவைகள் தாம் என் மனதைக் கவர்ந்தவை. மனதிற்கு அதிக உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும் விளையாட்டுக்கள் தான் (சிலர் அவற்றை அபாயகரமானவை என்பார்கள். இதற்கு என்ன சொல்வது?) என்னைக் கவர்ந்தன.

என்னுடைய `14ம் வயதிலிருந்தே பலவித நிலப்பரப்புகளினூடே நடப்பதையும் மலைகள் மீது ஏறுவதையும் நான் செய்து வந்திருக்கிறேன்..மத்திய இந்தியாவின் சஹயாத்ரி மலைப்பகுதியில் 198 கி.மீ நடைபயணம் நடத்தியதும் அப்போதுதான். 18 வயதில் இமயத்தின் கர்வால் பகுதியிலுள்ள 6504 மீ (சுமார் 21,000 அடிகள்) உயரத்திலிருந்த ஒரு மலை உச்சியை அடைந்த சாதனை புரிந்தவர்களில் நான் தான் மிகச் சிறியவன். என்னுடைய நீச்சல் குழுவின்

பிரதினிதியாகச் சென்று 25 மீ கட்டுப்பாடற்ற வகை (freestyle) நீச்சலில் புதிய சாதனை படைத்தேன்.

நான் நடத்திய வாழ்க்கை இதையெல்லாம் சாதிக்கத் தகுந்த ஆரோக்கியத்துடன் என்னை வைத்திருந்தது.

1996ல் பறக்க விரும்பும் என் ஆர்வத்திற்கு என் பெற்றோர்கள் முழு ஆதரவையும் அளித்தார்கள். என்னை தனியார் விமான ஓட்டி லைஸன்ஸ் பெற இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்கள். பின் 1998ல் வர்த்தக விமானங்கள் ஓட்டுவதற்கான லைஸென்ஸைப் பெறும் தேர்ச்சி பெற அமெரிக்காவிற்கும் அனுப்பினார்கள். அதற்குப் பிறகு இரண்டு நீண்ட வருடங்கள் வேலை கிடைக்காமல் காத்திருந்தேன். 2000 தொடங்கிய புதிய நூற்றாண்டு எனக்கு என்னுடைய முதல் விமான ஓட்டி வேலையைக் கொடுத்தது.

கண்டுபிடிப்பு மற்றும் நிர்ணயம்

2002 கோடைக்காலம்; வழக்கம் போல் கிளப்பின் நீச்சல் குளத்தில் நீண்ட நேர நீச்சல் அப்போதுதான் எனக்கு ஒரு விதமான இருமல் தாக்கியது. சில வீட்டு சிகிச்சைகளுக்குப் பிறகு குடும்ப வைத்தியரின் மேற்பார்வையுடன் சில நோயெதிர்ப்பு ஆண்டிபயாடிக் மருந்துகள் எடுத்துக் கொண்டேன். ஒரு வாரம் கழிந்த பின்னரும் இருமல் குறையாததால் மருந்துகளின் வீரியம் அதிகமாக்கப் பட்டதென்று நினைவு. நான் மருந்துகளை தொடர்ந்து எடுத்துக் கொண்ட பிறகும் ஒரு வித நிவாரணமும் கிடைக்கவில்லை. இருமலின் தாக்கம் சற்றும் குறையவில்லை.

நான் அடுத்த முறை குடும்ப மருத்துவரிடம் சென்ற போது அவர் என்னை மார்பின் எக்ஸ் ரே ஒன்று எடுத்துக் கொள்ளச் சொன்னார். அங்கு ஒரு சதைப் பிண்டம் இருப்பது கண்டுபிடுக்கப் பட்டது. அதற்கு பிறகு பயாப்ஸியும் சி டி ஸ்கேன்களும் (Biopsy and CT Scan) எடுக்கப்பட்டன. அப்போதெல்லாம் தோன்றிய அறிகுறிகள் எனக்கு வந்திருப்பது காச நோயாகத்தான் இருக்கலாமென்று நம்ப வைத்தது.

பரிசோதனை முடிவுகள் வெளி வந்தபோது என் குடும்பத்தினர் அனைவரும் எனக்கு என்ன நோயென்று கண்டுபிடிக்கப்பட்டிருந்ததைக் கூறியதுடன் அதற்கான சிகிச்சை முறைகளைப்பற்றியும் சொன்னார்கள். அவர்களுக்கு இது மிகவும் கடினமான நேரமாக இருந்ததென்பதை நான் குறிப்பிட வேண்டும். இந்த தகவலை நான் ஒருவித திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டேன். என்னுடைய நோய் பற்றிய தகவல் எனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் நான் ஹார்ஜ்கின்ஸ் நோய் (Hodgkin’s disease) பற்றி கேள்விப் பட்டிருந்ததுடன் இளம் வயதினரான சிறந்த ஆங்கிலேய மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் இந்த நோயால்

தாக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு தன் வெற்றிப் பாதைக்குத் திரும்பி வந்திருப்பதைப் பற்றியும் அறிந்திருந்தேன்.

அப்போதே எனக்கு என் நோய் தாற்காலிகமான ஒன்றுதான் என்ற உணர்வு இருந்தது (அப்படி நான் நம்பினேன்); அதனால் அதை அதிகமாகப் பாராட்டவில்லை. ஆம்; அதைப்பற்றி நான் அப்போது அதிகம் கவலைப்படவில்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன். இந்தத் தருணத்தில் நான் டாக்டர் சாந்தாவை சந்தித்தேன். அவர் என் சிகிச்சை காலம் எவ்வளவு நாட்கள் நீடிக்க்க் கூடுமென்று எனக்கு எடுத்துச் சொன்னார். இந்த செய்தியைக் கேட்டவுடன் என் மனது ஓரளவு சமாதானமடைந்தது. இங்கு நான் முக்கியமாக குறிப்பிட முற்படுவது என்னவென்றால் ஆரம்பகாலத்தில் நோயை அடையாளம் கண்டு கொண்டது தான் என் வாழ்க்கையை அதிக சிரமமானதாக ஆகிவிடாமல் காத்தது.

பின் எனக்கு டாக்டர் ரமணனின் அறிமுகம் கிடைத்தது. என்னுடைய நோயைப் பற்றியும் அவரும் அவர் குழுவும் எனக்கு அளிக்கப் போகும் சிகிச்சை முறைகளைப் பற்றியும் அவர் கூறக் கேட்ட பிறகு நான் வாழ்வேனென்ற உறுதி மனதில் தோன்றியது. கூடவே எனக்கு வாழ்க்கையில் எதிர்பார்ப்புக்கள் அதிகமாகின.

இத்தனை அமர்க்களங்களிடையே நான் உண்மையிலேயே தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. நான் மீண்டும் பறக்க முடியுமா என்பதைத்தான்! பறக்க முடியாமல் போகக் கூடிய அபாயம் என்னை அச்சுறுத்தியது. இந்த பயத்தைப் போக்க ப்ளூ டார்ட்டின் பணிக்குழு எனக்கு அளித்த ஆதரவை நான் குறிப்பிட வேண்டும். அதிலும் முக்கியமாக தலைமை அதிகாரி திரு. நிதின் குப்தா, மனித வளத்துறைத் தலைவர் திரு பிரேம் தாமஸ், தலைமை செயல் திட்ட அதிகாரி கேப்டன் ஜே பி ஸிங் ஆகியோர் என்னை மீண்டும் “சரியான நிலை” க்கு திருப்பிக்கொண்டு வரச் செய்த முயற்சிகளைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சிகிச்சை:

கீமோதெரபியின் முதல் சுற்றுக்காக நான் அந்த வருடம் ஜூலை மாதம் புற்று நோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். சிகிச்சை, கீமோதெரபி சுற்றுக்களும் அதைத் தொடர்ந்து மீடியாஸ்டனம் (Mediastenum) மீது கதிரியக்கம் அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. நான் மீண்டும் விமானத்தில் பறக்க வேண்டுகென்பதை, ஏறக்குறைய அது சாத்தியமென்ற நிலையில் , குறிக்கோளாக மனதில் கொண்டு, சிகிச்சையை தீர்மானிக்கும் போது மருத்துவர்கள் கவனமாகச் செயல் திட்டம் வகுத்தார்கள்.

இன்று நினைத்துப் பார்க்கும்போது முதல் இரண்டு சுற்றுக்களை சுலபமாக கடக்க முடிந்ததென்று தோன்றுகிறது. நான் இந்த கால கட்டத்தில் வழக்கமான இயல்பு வாழ்க்கை வாழ முடிந்ததென்பதை இங்கு குறிப்பிட வேண்டும். நான் செய்யாமல் இருந்தது மது பானத்தைத் தவிர்த்தும் நீச்சல் அடிக்காமல்

இருந்ததுதான். என்னை நோய் தாக்கியிருந்த போதிலும் என் மூளைக்கு நான் இன்னமும் கீர்த்தன் தானென்றும் வாழ்க்கையை அனுபவிப்பதில் மிக்க விருப்பம் கொண்டவனென்றும் செய்திகள் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருந்ததுடன் எதுவுமே அசம்பாவிதம் நடக்காத மாதிரி வாழ்ந்தேன்.

நண்பர்களே! நோய் வந்து விட்டதால் மனமுடைந்து வாழ்க்கையிலிருந்து விலகி அதன்மேல் தூசு படச் செய்ய வேண்டுமென்பது ஒன்றும் கட்டாயமல்ல. நல்லதே நடக்கும் என்று நம்பிக்கையுடன் எக்காலத்திலும் இருக்க வேண்டும். இது தான் என்னைக் காப்பாற்றியது. அதனால் அந்த உண்மையை பற்றி உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். நான் எப்பொழுதும் வேலையைப் பற்றி சிந்திப்பதோடு அவ்வப்போது அலுவலகத்தில் உள்ளவர்களுடன் விமானத்துறையில் என்ன புதிய நிகழ்வுகள் நேர்ந்திருக்கிறதென்பதைப் பற்றியும் விசாரித்துக் கொண்டிருந்தேன். என் சிகிச்சைக் காலம் முடிந்த பிறகு என் வாழ்க்கை எப்படி இருக்குமென்ற கற்பனையையும் நான் வீட்டோடு இருக்க வேண்டிய காலங்களில் என்ன செய்யலாமென்பது பற்றியும் ஆழ்ந்து யோசித்து கொண்டிருப்பேன். பொதுவாக அந்தக் காலக் கட்டத்தை எனக்கு அளிக்கப்பட்ட ஒரு நீண்ட விடுப்பென்றே கருதினேன்.

நண்பர்கள் என்னை உற்சாகப் படுத்த வருவார்கள். பொதுவாகவே வாழ்க்கை என்னும் தத்துவத்தைப் பற்றி சிந்திக்கும் காலமாக அது அமைந்தது. எனக்கு இப்போதும் என்னை உடலளவிலும் மனத்தளவிலும் கீமோதெரபி பாதிக்கத் தொடங்கியதென்பது நினைவிலிருக்கிறது. என்னுடைய தாயார் ஒரு ப்ரானிக் குணமாக்கும் முறையைப் போதிக்கும் வகுப்பிற்குச் செல்ல ஆரம்பித்திருந்ததால் மருந்துகள் என் உடலில் செலுத்தப் படும் முன் அவற்றைச் சுத்திகரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

நான்காவது சுற்றிற்குப் பின் என்னுடைய எடை அதிகரிக்கத்தொடங்கியது (மொத்தம் சுமார் 12 கிலோக்கள்). என்னுடைய தலைமுடி உதிரத் தொடங்கியது. ஒரு புதிய “ நான்” தோன்றுவதைப் பார்க்க முடிந்தது. ஆனால் அவை எல்லாம் என் மனதைப் பாதிக்க நான் அனுமதிக்கவில்லை. என்னுடைய முன்னேற்றம் சிறப்பாக இருந்தது.

டிஸம்பர் 2002 யில் என்னுடைய கடைசிச் சுற்று கீமோதெரபி, அதுதான் இறுதிச் சுற்றென்று அறிவிக்கப் பட்டதைக் கேட்க மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

2003ம் வருடத்தில் மீடியாஸ்டனல் (Mediastenal) கட்டியின் மீது கதிர்கள் பாய்ச்சப்பட்டு, 20 அமர்வுகளுக்குப் பிறகு சிகிச்சை முற்றுப் பெற்றது. ஒரு மாதத்திற்குப் பிறகு என்னுடைய நோய் பின் வாங்கத் தொடங்கியிருப்பதற்கான அறிவிப்புடன் எனக்கு அதற்கான ஒரு புதிய அத்தாட்சிப் பத்திரமும் அளிக்கப் பட்டது.

சிகிச்சைக்குப் பின்

நான் பூரணமாக குணமடைந்து விட்டேனென்ற செய்தியுடன் நான் பிப்ரவரி 2003 மீண்டும் வேலைக்குச் சேர்ந்தேன். ப்ளூ டார்ட் உடனேயே என்னுடைய பறப்பதற்கான அனுமதிப் பத்திரத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான பரிசோதனைகளில் இறங்கியது. எல்லாவற்றையும் விட முக்கியமாக நான் விமானத்துறையின் மருத்துவக் குழுவினரிடமிருந்து குணமானதற்கான அத்தாட்சியைப் பெற வேண்டியிருந்தது. இங்கு நான் என்னுடைய சிகிச்சை முடிந்தவுடன் எனக்கு பறப்பதற்கான சம்மதம் அளிக்கப்பட்டுவிடுமென்று உறுதியளித்திருந்த டி.ஜி.சி ஏ யின் (DGCA) அலுவலகத்திற்கு நன்றியைத் தெரிவித்தே ஆக வேண்டும். அந்த அதிகாரிகள் அளித்த நம்பிக்கைதான் உண்மையில் என் உற்சாகம் சற்றும் குன்றாமல் இருக்க வைத்தது. அதிக வேலை கொடுத்து சிரமப்படுத்தாமல், வேலைக்குச் சேர்ந்த முதல் சில நாட்களின்போது என் வாழ்க்கை முறையை எளிதாக்கிக் கொடுத்தார்கள் என்னுடைய அலுவலக அதிகாரிகள். நான் முழு வேலைச் சுமையையும் படிப்படியாக ஏற்க வழி செய்தார்கள்.

நான் நோயிலிருந்து மீண்டு வந்து இப்போது ஏழு வருடங்கள் ஆகின்றன. நான் சாதாரணமான வாழ்க்கையை இயல்பாக வாழ்ந்து வருகிறேன். கடந்த மூன்று வருடங்களாக என்னுடைய தற்போதைய நிறுவனத்தில் ஒரு கமேண்டராக வேலை செய்து வருகிறேன். என் வாழ்க்கையில் எந்த விதக் குறுக்கீடுகளும் நேரவேயில்லை என்பது போல நான் வாழ்கிறேன். நான் ஆரோக்கியமாகவே இருக்கிறேன்.

ஆம் நான் புற்று நோய் மருத்துவ மனையின் பரிந்துரைப்படி என் மருத்துவப் பரிசோதனை நாட்களை தவற விடாமல் சென்று வருகிறேன். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கைப்பிடித்து வருகிறேனென்றாலும் வாழ்க்கை சாரமற்றுப் போக விடுவதில்லை.

இப்போது என்னிடம் ஆகாயப் போக்குவரத்து விமானியின் அனுமதிப் பத்திரம் இருப்பதால், 6 மாதங்களுக்கு ஒரு முறை நான் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டி இருக்கிறது. அதனால் நான் என் ஆரோக்கியத்தைப் பற்றின அத்தாட்சியைப் பெறுவதற்காக டாக்டர் ஸாகரை அவ்வப்போது தொந்திரவு படுத்த வேண்டியிருக்கிறது.

இறுதியாக என்றாலும் முக்கியமாக திருமதி கிரிஜாவையும் திருமதி ரங்கா குமாரையும் மருத்துவமனைக்கு கீமோதெரபிகளுக்காக நான் போக நேர்ந்த போதெல்லாம் என் மனதிற்கு பெரும் ஆறுதலளித்தமைக்கு நன்றி கூறவேண்டும்.

அறிவுரை

இந்த முதல் அறிவுரை நோயாளிகளுக்கானது; உங்களால் தான் மற்றவர்கள் இந்த சோதனையைத் தாங்குவதை எளிதாக்க முடியும். நான் என்ன சொல்ல

வருகிறேனென்றால் எல்லாமே முடிந்து விட்ட்தாகக் கருதாதீர்கள். எது எப்படியானாலும் போராடுங்கள். உங்கள் மன நிலைதான் உங்களைச் சுற்றி இருப்பவர்களின் மன நிலையைச் செதுக்கி உருவாக்கும். அப்போதுதான் அவர்கள் தங்கள் தரப்பிலிருந்து உங்களுக்கு வேண்டிய ஆதரவை அளிக்க முடியும்.

இரண்டாவதாக நான் கூற விரும்புவது குடும்பத்தினருக்கு ஒரு விதத்தில், நோயாளிதான் தனியாக தன் போராட்டத்தை நடத்த வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் அதைச் செய்ய பெரிய அளவில் நம்பிக்கை உருவாக்கக்கூடிய வலிமை தேவைப்படுகிறது. சுருக்கமாக கூற வேண்டுமானால் எதிர்வினை சக்திகள் அனைத்தையும் அப்புறப் படுத்துங்கள். அவர்கள் மனிதர்களால் இருந்தால் கூட.

# உலகளவில் புகழ் பெற்ற ஒரே ஒரு மருத்துவமனை

ஸ்ரீனிவாஸன் பாலாஜி, மேற்கு மாம்பலம்
தற்போது இருப்பிடம்: வேன்கூவர் கானடா

என்னுடைய சி.ஏ. வகுப்பிலிருந்து ணான் (டிஸம்பர் 1993ல் எனக்கு 21 வயது) வீடு திரும்பிக்கொண்டிருந்த போது என்னுடைய வலது இருப்பின் எலும்பில் ஒரு சிறிய வலியை உணர்ந்தேன். என் குடும்ப மருத்துவரின் ஆலோசனையின்பேரில் வலி நிவாரணி மாத்திரைகள் எடுத்துக் கொண்டேன். ஆனால் இரண்டு நாட்களுக்கு பின் வலி அதிகமாகி என் தந்தைக்கு இது கவலையை அளித்தால், அவர் என்னை எலும்பு சிகிச்சை நிபுணரிடம் அழைத்துச் சென்றார். அந்த மருத்துவரும் எக்ஸ் ரே (X-Ray) எடுத்துப் பார்த்துவிட்டு வேறு சில வலி நிவாரணிகளைப் பரிந்துரைத்தார். அதற்கு பிம் இரண்டு மாதங்களுக்கு வலி இல்லை.

மீண்டும் அதே இடத்தில் வலி தோன்றியதும் அது என் தந்தையையும் மருத்துவரையும் சற்றே சிந்திக்க வைத்தது. அந்த இடத்தில் சிறிதளவு வீக்கமும் இருந்த்தால், எம் ஆர் ஐ பரிசோதனக்குப் பிறகு எலும்பு காச நோய் (Bone TB) இருப்பதை உறுதி செய்தார்கள். இரண்டு நாட்கள் அதற்கான மாத்திரைகள் சாப்பிட்ட்தில் என் உடலில் ஒவ்வாமைக்கான அறிகுறிகள் தோண்ற ஆரம்பித்தன. இரண்டாவது மருத்துவ அபிப்ராயம் கேட்பது நல்லதென்று தோன்றவே வேறு ஒரு எலும்பு சிகிச்சைனிபுணரிடம் போவதென்று என் தந்தை முடிவு செய்தார். அந்த மருத்துவர் வந்திருப்பது காச நோய்தான என்று உறுதிப் படுத்திக் கொள்ளக் கேட்ட சில அடிப்படைக் கேள்விகள் எங்களை சிந்திக்க வைத்தன. அவர் குறிப்பிட்டுக் கேட்ட அறிகூறிகள் எதுவுமே எனக்கு இருக்கவில்லை.

மனக்குழப்பம், பயம் ஆகியவை தொடர்ந்து மனதை உலுக்கியதில், மேலும் ஒரு எலும்பு மருத்துவ நிபுணரிடம் சென்றபோது அவர் இது கவலப்படும்படியானதில்லை என்று கூறி விட்டார். (ஈது அவசரமாக, எடுக்கப்பட்ட தவறான முடிவு).

இறுதியில் விதி கடவுள் அருளால் எங்களை மைலாப்பூரின் எலும்பு நிபுணர் டாக்டர் ஸ்ரீராமிடம் கொண்டு சென்றது. அவர் எலும்பின் ஸ்கேன் மற்றும் சி டி ஸ்கேன் ஆகியவைகள் செய்த பிறகு அந்த வீக்கத்தை இனம் கண்டறிய அதன் பையாப்ஸி செய்ய வேண்டுமென்று கூறினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தப் பரிசோதனையின் முடிவுகள் வந்தபோது எனக்கு புற்று நோய் இருப்பது உறுதி செய்யப்பட்ட்து.

என் குடும்பமே அதிர்ச்சியில் சுக்கு நூறாக நொறுங்கியதென்பதை தவிர அன்று நாங்கள் இருந்த நிலையை விவரிக்க வேறூ வார்த்தைகள் கிடையாது. நான்

வாழ்க்கையை இயல்பான மூறையில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன். எனக்கு குடி, புகை பிடிப்பது, வெற்றிலை சுவைப்பது போன்ற எந்த வித கெட்ட பழக்கங்களும் கிடையாது. இந்த உண்மை நிலையை ஏற்று அதிர்ச்சியிலிருந்து மீண்டு வந்து, எங்கு எப்படி சிகிச்சை பெறுவதென்ற அடுத்த கட்ட கேள்விகள் பற்றி நினைப்பதே கடினமாக இருந்தது.

டாக்டர் ஸ்ரீராம் அவருடைய மாணாக்கரான டாக்டர் மயில்வாகனனிடம் எங்களை அனுப்பினார். இவர்தான் இந்தியாவில் முதன்முறையாக எலும்பு மாற்றூச் சிகிச்சை செய்தவரும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமாவார். நகரத்திலேயே மிகுந்த கட்டணம் வசூலிக்கும் மருத்துவமனைக்கு அவர் எங்களைப் போகச் சொன்னார். அன்றைய நிலையில் எங்களால் அவ்வளவு சிலவு செய்யப் போதிய பண வசதி இருக்கவில்லை.

செகிச்சை தரத்தில் குறைவில்லாத ஒரு மாற்று மருத்துவமனையை பரிந்துரைக்கக் கேட்டபோது உலகளவில் பெயர் பெற்ற, இந்தியாவிலேயே புற்று நோய்க்கு ஒரு பிரத்யேக மூறையில் சிகிச்சை பெறமுடியுமென பலராலும் நாடப்பட்டு வரும் ஒரே ஒரு மருத்துவமனை என்று ஒன்றை சிபாரிசு செய்தார். அது தான் “தி அடையார் கேன்சர் ஹாஸ்பிடல் WIA (The Adyar Cancer Hospital WIA) இங்கே அனுபவம் மிகுந்த மருத்துவர்கள் அளிக்கும் மிகத்தரமான சிகிச்சையை கூறைந்த சிலவில் பெற முடியும்.

என்னுடைய சிகிசை மே 2004 ல் தொடங்கி ஒரு வருடம் நீடித்தது. என்னுடைய சிகிச்சையின் போது, எல்லா மருத்துவர்களும் உதவியாளர்களும் மற்றூம் தன்னார்வலர்களும் மிக்க அன்புடன் பழகினார்கள். அவர்களிடம் அசிரத்தியே காணப்படவில்லை. எல்ளா நோயாலிகளிடமும் தோழமையுடன் பழகும் டாக்டர் ரமணன் என்பவரைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். காலை 6 மணி முதல் சாயந்திரம் 7 மணி வரையில் மலர்ந்த முகத்துடன் அவர் இருந்தார். சில சமயம், அவர் தன் வீட்டிற்குச் சென்ற பிறகும் நாங்கள் அவரைத் தொந்திரவு செய்துள்ளோம்.

ஒவ்வொரு வாரமும் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு அளிக்கப் படும் சிகிச்சையைப் பற்றியும் மேலும் செய்யப்பட வேண்டியவை பற்றியும் கூட்டம் நடத்துவார்கள். இந்த மருத்துவமனையைப் பற்றியோ அல்லது அதில் வேலை செய்பவர்கள் பற்றியோ அல்லது அங்கு நிலவிய சுகாதாரத்தைப் பற்றியோ ஒரு அவச் சொல்லையும் நாங்கள் ஒரு போதும் கேட்டதில்லை. தேசத்தின் மற்ற பகுதிகளிலிருந்தும் நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற வருகிறார்கள். இடைவிடா சேவை செய்யும் இந்த மருத்துவமனையின் தலைவிக்கு மிகுந்த நன்றி. கடவுளின் அருளாலும் உங்களுடைய மருத்துவர்களின் மனமார்ந்த கவனிப்பாலும் நான் இப்போது வியாதியிலிருந்து நன்றாக மீண்டுவிட்டேன். நான் M.Com, ICWA மற்றூம் CA (ஒரு பகுதி பாக்கி) இவைகளை முடித்துவிட்டேன். விப்ரோ, சென்னையில் வேலை செய்கிறேன்.

கடந்த அனுபவங்களிலிருந்து நான் தெரிந்து கொண்டது “பதற்றப் படாதே” தைரியமாக இரு, மருத்துவர்கள் சொல்வதைச் செய், ஆகியவை தான். மருத்துவர்களிடம் நம்பிக்கை வையுங்கள். ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப் பட்டால், புற்று நோயைக் குணப்படுத்த முடியும்.

எல்லா நோயாளிகளும் சீக்கிரமே குணமடைந்து ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடனான ஆசை எனக்கு. அதற்காக கடவுளை பிரார்த்திக்கிறேன்.

# ஒவ்வொரு நோயாலிக்கும் கிட்ட வேண்டும்

ஆர் சுலோசனா

13 ஜூன் அன்று நடைபெறவிருக்கும் வருடாந்திர ரீயூனியன் டேக்கு (பிரிந்தவர்கள் வருடத்திற்கு ஒருமுறை ஒன்று கூடும் நாள்) என்னுடைய வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் பதிவு செய்கிறேன். 52 வயதான என் தாயார் 2006 ம் வருடம் நுரையீரல் புற்று நோயால் அவதிப்பட்டார். கடவுளின் அருளால் நாங்கள் அவரை அடையார் புற்று நோய் மருத்துவமனையின் டாக்டர் மணி மற்றும் காலஞ்சென்ற டாக்டர் சாஸ்திரி அவர்களிடம் அழைத்துச் சென்றோம்.

எங்கள் மனதிற்கு ஆறுதலளிக்கும் வகையிலான ஆலோசனைகளுக்குப் பிறகு ஒரு மாதத்திற்குள் என் அம்மாவுக்கு கீமோதெரபி தொடங்கப்பட்ட்து. சிகிச்சையின்போது அவருக்கு உடலளவில் வேதனை இருந்தாலும, மருத்துவசாலையில் மருத்துவர்களும் மற்றவர்களும் அளித்த இடைவிடா அனுசரணையும் ஆதரவும் அவருக்கு மிகவும் உதவின. பொறுமையுடன், மிகுந்த கவனம் செலுத்திச் சிகிச்சை அளித்த காலஞ்சென்ற டாக்டர் சாஸ்திரி அவர்களுக்கு எங்களுடைய வணக்கங்கள்.

மிகுந்த ஆசாரமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராதலால் என் தாயார் தன் வாழ் நாளில் அனேகமாக ஒரு மருத்துவரையும் பார்த்தது கிடையாது. அதனால் முதன் முதலாக புற்று நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் சிகிச்சை செய்து கொள்ள மீண்டும் மீண்டும் மறுத்து வந்தார். ஆனால் அவருடைய தன்னம்பிக்கையும் பகவான் ஷீர்தி ஸாயிபாபா, ஸ்ரீ சத்ய ஸாயிபாபா மற்றும் பரமாச்சார்ய ஸ்வாமிகள் ஆகியோரிடம் இடைவிடாமல் செய்த பிரார்த்தனைகளும் அவர் விரைவிலேயே குணமடைய உதவின. சிகிச்சையின் ஆரம்ப நாட்களில் தலை முடி இழப்பும் உடல் எடைக்குறைவும் இருந்தன். ஆனால் புற்று நோய் மருத்துவமனையின் மருத்துவர் அளித்த மிகுந்த அக்கறையும் பரிவும் இவை இரண்டையும் அவர் திரும்பப் பெறச் செய்தன. மருத்துவர்கள் அளித்த ஊக்கம் அவரை விரைவில் குணமடைய உதவின. இன்று 61 வயதான அவர் ஒரு வித பிரச்சினையும் இல்லாமல் பூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறார்.

நான் இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வேலை செய்யும் ஒவ்வொரு மருத்துவருக்கும், சிறப்பு மருத்துவத் திறனாளிகளுக்கும் ஆலோசகர்கள், வார்டு பையன்கள், செவிலிகள், ஆயாக்கள் என்று அனைவருக்கும் என் தாய் குணமாக உதவியமைக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

இப்போது ஆரோக்கியத்துடன் இருக்கும் என் தாய் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கிறார். புற்று நோய் மருத்துவமனையின் மருத்துவர்களைப் போன்றவர்கள் ஒவ்வொரு நோயாளிக்கும் கிடைக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனைகள்.

# என் கதை

பி ஸ்ரீமதி

மாநகரத்தின் மருத்துவ சாலைகள் ஒன்றில் வழக்கமான வருடாந்திர மருத்துவப் பரிசோதனை செய்து கொண்ட போது, நான் லம்பெக்டமி (Lumpectomy - மார்பகத்தில் உள்ள கட்டியை மட்டும் அறுவை செய்து அப்புறப்படுத்தும் முறை) செய்து கோள்ள வேண்டுமென்று கூறப்பட்டது. இது எனக்கு புற்று நோய் இருப்பதை உறுதிப் படுத்தியது. இது வருத்தம் அளிக்கக்கூடிய செய்திதானென்றாலும் நோயின் ஆரம்ப கட்டத்திலேயே அது கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது என் அதிர்ஷ்டம். மேலும் வாழ்க்கையை அணுகுவதில் நான் எப்போதுமே நம்பிக்கையுடன் இருப்பவளாதலால், புதிதாக வந்திருந்த இந்த சவாலை ஓரளவு சமனிலையுடன் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

அறுவை சிகிச்சைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய மருத்துவத்திற்காக நான் அடையார் புற்று நோய் மருத்துவமனக்குச் சென்றேன். மார்பகப் புற்று நோய் சிகிச்சையில் நோய் எந்தக்கட்டத்தில் இருந்த போதிலும் முழுவதுமாக மார்பகம் அகற்றப்படாமல், உறுப்பைக் கூடிய அளவில் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்து மருத்துவ உலகில் வலுப் பெற்று வருவதை நான் அறிந்து கொண்டேன். அந்த மனையின் மருத்துவருக்கு, நோய் ஆரம்ப நிலையில் இருந்த போதிலும் அதை அகற்றுவதா வேண்டாமா என்ற இக்கட்டு நிலை இருந்தது. எனக்கு ஏற்கெனவே வேறு ஒரு மருத்துவமனையில் லம்பெக்டமி செய்யப்பட்டிருந்ததால் கதிரியக்கச் சிகிச்சை மட்டும் அளிப்பதென்றும் மார்பகத்தை முழுவதுமாக அகற்றும் அறுவையை, புற்று நோய் மீண்டும் தலையைத் தூக்கினால் செய்ய முடியுமென்பதால், அப்போதைக்கு அதை ஒத்தி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

எனது புற்று நோய் இனம் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது நான்கு வருடங்கள் ஆகின்றன. சிகிச்சை காலத்தில் என்னுடைய பணி முன்னேற்றத்திலும், ஆரோக்கியத்திலும் சில பின்னடைவுகள் இருந்த போதிலும் இன்று நான் உடல் நலமுடன் ஒரு நிறுவனத்தில் உயர் அதிகாரியாக இருக்கிறேன். நோயுடனான என் பரிமாற்றம் எனக்குச் சில அனுபவங்களை அளித்தது. அவற்றின் அடிப்படையில் நான் பின் வரும் சில கருத்துக்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

I. வருமுன் காப்பது சிகிச்சையை விட சாலச் சிறந்தது. அதற்கு உங்களுக்குத் தேவை

அ. நார்ச்சத்து மற்றும் ஆண்டி ஆக்ஸிடென்ட்கள் கொண்ட சமச்சீர் உணவு.

ஆ. சுறுசுறுப்பான வாழ்க்கை முறை

இ. தவறாத தினசரி உடற்பயிற்சி - எந்த வகையானதும் நல்லது தான்; ஆனால் என் அபிப்பிராயப்படி, பிராணாயாமம் மற்றும் தியானத்துடன் சேர்ந்த யோகாசனங்கள் நம் உடலுக்கும் மனதிற்கும் திடத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்து நம் வாழ்க்கையில் அற்புதங்களை நிகழச்செய்யும்.

ஈ. மனதை அழுத்தமில்லாமலும் பதற்றமில்லாமலும் வைத்திருப்பது; இன்று கிண்டர்கார்டன் பருவத்திலிருந்தே மன அழுத்தத்துடன் வாழ்வது ஒரு வாழ்க்கை முறையாகவே ஆகிவிட்டது; ஆனால் தியானமும் மற்றும் மனதை சம நிலையில் வைத்திருப்பதும் வாழ்க்கையின் சவால்களை சமாளிக்க உதவும்

உ. சரியன இடைவெளிகளில் மருத்துவப் பரிசோதனைகள்:

1. பெண்களுக்கு சாதாரண பேப்ஸ்மியர் பரிசோதனை கர்ப்பபையின் வாயில் வரக்கூடிய புற்று நோயை (Cervical Cancer) அடையாளம் கண்டு கொள்ள உதவும்.
2. அடிக்கடி காணப்படும் மற்றொரு புற்று நோய் வகை மார்பகப் புற்று நோய். வயது வந்த ஒவ்வொரு பெண்ணும் சுய பரிசோதனைகள் மூலம் மார்பகத்தில் கட்டிகள் உள்ளனவா என்று கண்காணிக்க வேண்டும். மருத்துவர்கள் பரிந்துரையின்படி மேம்மொகிராபி (Mammography) செய்து கோள்ள வேண்டும். எனக்கு உதவியது போல இது புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து நிவர்த்தி செய்ய உதவும்.

ஊ. புகையிலையை எந்த விதத்திலும் உபயோகப் படுத்துவதைத் தவிர்க்கவும்.

எ. குடியையும் சத்தில்லாத (ஜங்க்) உணவுகளையும் தவிர்த்துவிடுங்கள்

II. புற்று நோய் உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டால்

அ. அறுவை சிக்கிச்சை தேவைப்பட்டால் அது எவ்வளவு சிறிய அறுவையாக இருந்த போதிலும் ஒரு புற்று நோய்க்கான விசேஷ மருத்துவம் அளிக்கக் கூடிய மருத்துவமனையின் உதவியை நாடுங்கள். எந்த மருத்துவமனையில் பணி செய்யும் ஒரு பொது அறுவை சிகிசை நிபுணராலும், அவர் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் புற்று நோய் சிறப்பு மருத்துவமனையின் மருத்துவரைப்

போன்ற நோயைக் கையாள முடியாதென்பது என் உறுதியான நம்பிக்கை. இன்று மருத்துவச் சிகிச்சை முறைகளில் பல வித முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதால் புற்று நோயை ஒரு நம்பிக்கையான அணுகுமுறையுடன் சந்தித்தால் இந்த நோயை மேலும் அதிக வெற்றியுடன் கையாள முடியும்.

ஆ. வாழ்க்கையில், கடவுளுக்கும் உங்கள் மனசாட்சிக்கும் தவிர வேறு எதற்கும், எவருக்கும் பயப்படாதீர்கள்.

இ. காலதாமதமில்லாமலும் அதற்கான உரிய சிகிச்சை பெறுவதிலும் கவனமாக இருங்கள்.

ஈ. மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு தொடர்ந்து பரிசோதனைகள் செய்து கொள்வது மிக அவசியம். இந்த விதி முக்கியமாக புற்று நோய்க்கு கையாளப் படவேண்டும்.

# வாழ்க்கை ஒரு புதிர்

ஹரீந்தர் கௌர் ஸ்ரா

இது எனக்கு ஒரு மறு பிறப்பு. கடந்த 50 வருடங்களில் நான் வாழ்ந்த வாழ்க்கையை விட இனி வரும் வருடங்களை எனக்கு விசேஷமான பரிசாக்க் கிடைத்திருப்பதாகக் கருதி, அதை முழுமையாக நான் வாழ விரும்புகிறேன். வாழ்க்கை எவ்வளவு விலை உயர்ந்த்தென்பதை இப்போது நான் உணர்ந்து விட்டபடியால் அதை நான் எனக்காக மட்டும் வாழ்ந்து வீணாக்க மாட்டேன். என்னுடைய அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவற்றை நான் எடுத்துக் கூற விரும்புவதே என்னைப்போல் இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் உங்களில் சிலர் மனங்கனளில் நம்பிக்கை, மன வலிமை , தைரியம் ஆகியவற்றை புகுத்தி அதில் கிடைக்கக்கூடிய ஆனந்தத்தையும் திருப்தியையும் நீங்களும் உணர வைக்கத்தான். கடவுள் என்னிடம் கருணை காட்டியிருக்கிறார். அந்த கிருபை உங்களையும் சென்றடைய வேண்டுமென்பது என் ஆசை. எனகு மிகவும் பிடித்த பள்ளிக்கூடப் பிரார்த்தனை இது.

உங்களிடம் யாராவது கனிவுடன் நடந்து கொண்டிருக்கிறார்களா?

அப்படியானால் அக்கனிவை மற்றவர்களுக்கு நீங்கள் காட்டுங்கள்.
அது உங்களுக்கு மட்டுமே இலவசம் என்று நினைக்காதீர்கள்.
அதை மற்றவர்களுக்கு நீங்கள் அளியுங்கள்
யுகங்களையும் கடந்து சென்று அந்தக் கருணை மற்றவர்களின் கண்ணீரைத் துடைக்கட்டும்.

வாழ்க்கை ஒரு புதிர். அதன் ஒவ்வொரு கணத்தையும் ஆர்வமுடன் காத்திருந்து, உங்கள் முன் விரியும் மலர்ச்சிகளை அனுபவித்து, வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து மகிழுங்கள்.

காலம் நம் முன் கடை விரிக்கும் பரிசுகளைக் கண்டுமனமுவக்கும் கணங்களும், நம்மை சோகத்தின் ஆழத்தில் தள்ளும் கணங்களும் கொண்டது தான் வாழ்க்கை. கடவுள் நம்மெல்லோரையும் நேசிப்பவர், நம் ஒவ்வொருவருடைய நன்மைகளையும் கருத்தில் கொண்டு நம்மை பாலிப்பவர் என்பதால் நமக்கு நடப்பதெல்லாம் அவர் நம் நன்மைக்கே செய்கிறாரென்ற பூரண நம்பிக்கை எனக்கு உண்டு. நான் மனம் சோர்ந்து விடுவதேயில்லை என்று பெருமிதம் கொள்ள முடியாது. ஆனால் என்மனதில் “எனக்கு ஏன் இந்த

சோதனை" என்ற எண்ணம் எழும் போதெல்லாம் அவரிடம் நான் வைத்துள்ள நம்பிக்கை என்னை ஆக்கிரமித்துக் கொண்டு என்னை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வரச் செய்து விடுகிறது.

பிப்ரவரி மாத்த்தின் ஒரு நாள், நமக்கு சில சமயங்களில் ஒன்றுமே செய்யாமல் சோம்பி இருக்க மனம் விரும்புகிறதல்லவா? அது போன்ற ஒரு நாள் அது. சும்மா இருத்தலும் அலுத்து விட்ட போது, ஏதாவது உபயோகமாக செய்யலாமென்ற எண்ணம் மனதில் எழுந்து வருடா வருடம் நான் செய்து கொள்ளும் மருத்துவப் பரிசோதனை - டிஸம்பரிலேயே செய்து கொண்டிருக்க வேண்டியது. - செய்யாமல் இருப்பது நினைவிற்கு வந்த்து. சரி அதைச் செய்துகொள்ளலாமே என்று மருத்துவரிடம் போனபோது தான் என் மருத்துவர் மேம்மோக்ராபியில் எனக்கு கோளாறு ஏதோ இருக்குமென்று சந்தேகப்பட்டு என்னை மேலும் சில மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ளச் சொன்னார்.

அட! அவர் சந்தேகப்பட்ட்து சரியாகிவிட்ட்தே! பிப்ரவரி 18, 2008 ல் எனக்கு இருமுகமான மார்பகப் புற்று நோய் இருப்பது தெளிவாயிற்று. எனக்கு இந்த நோய் வந்திருப்பதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. இவையெல்லாம் மற்றவர்களுக்குத்தானே வரும்! இந்த முறை இது எப்படி என்னைக் குறி வைத்தது? இதில் தவறு ஏதேனும் இருக்குமோ? நானும் "மற்றவர்கள்" எனக் குறிப்பிடப்படுபவர்களில் "ஓர் அங்கம்" தானென்றும் நான், எனது என்றெல்லாம் தனிப்படுத்தி பார்த்த சலுகைகளால் கோர முடியாதென்றும் அப்போதுதான் புரிந்து கொண்டேன். நமக்கு ஏதாவது ஆதாயம் இருக்கும் பொழுது மட்டும் நாமும் மற்றவர்களைச் சார்ந்தவர்களெனக் கருதுகிறோம்; மற்ற நல்ல நேரங்களில் நம்மைத் தனிப்படுத்து நாம் தனித்துவம் கொண்டவர்களென்று கருதுவதிலேயே மகிழ்ச்சி அடைவதுடன் மற்றவர்களை சில காத தூரத்திலிருந்தது கவனிப்பதிலேயே திருப்தி அடைந்து விடுகிறோம். நம்மை எல்லாம் ஒரே போலத்தான் கடவுள் படைத்திருக்கிறாரென்பதையும் மறந்து விடுகிறோம். இறுதியில் அவர் முன் தலை தாழ்ந்து வணங்கி "வெற்றி உமக்கே இறைவா, நீங்கள் எனக்கு விதித்திருப்பதை ஒரு புன்னகையுடன் ஏற்கிறேன்" என்று பணிந்து போவதே வழி என்பதை நாம் உணர்கிறோம்.

உண்மையில் விவேகத்தில் உதிக்கும் அந்தப் புன்னகை மூன்றும் என் முகத்தில் உடனேயே தோன்றிவிடவில்லை. சில கண்ணீர்த்துளிகளும்
சுய பச்சாதாபக் கணங்களையும் கடந்த பின் தான் இந்த ஞானோதயம் உண்டாயிற்று. அப்போதிலிருந்து வாழ்க்கையை நம்பிக்கையுடன் பார்க்கவும் தோன்றியது. சில தான்தோன்றி உயிர் அணுக்கள் என்னுடைய

வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போட அனுமதிக்க முடியாது. கடவுளால் கொடுக்கப்பட்ட செல்வமாகிய இவ்வாழ்வை கை நழுவிப் போக நான் விடமாட்டேன்.

எனக்கு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட போது என் மன நிலை எப்படி இருந்ததென்று என் சினேகிதி ஒருத்தி என்னைக் கேட்டாள். நான் அவரிடம், நான் ஒரு ஆசிரியை. என்னுடைய உத்தியோக வாழ்க்கையில் 40 குழந்தைகள் கொண்ட ஒரு வகுப்பில் வகுப்பைச் சீராக நடத்தவிடாமல் செய்யும் சில விஷமக்காரக் குழந்தைகளும் இருப்பதைக் கண்டிருக்கிறேன். வகுப்பில் மற்ற மாணாக்கர்களுக்கு ஒரு தலைவலியாக அவர்கள் ஆகாதவரை அவர்களை சமாளிக்கலாம். பொறுத்துப் போகலாம். ஆனால் என்றைக்கு அவர்களால் வகுப்பே நடக்காதென்ற நிலை வருகிறாதோ, அவர்களைத் திருத்தாவிட்டால் அங்கிருந்து வெளியேறப்படுவார்களென்று எச்சரிக்கை விடத் தானே வேண்டும். அதே போல் தான் புற்று நோய் உயிர் அணுக்களும். இதுவரை அவை மற்ற உயிரணுக்களுடன் எனக்கு தொந்திரவு அளிக்காமல் சேர்ந்து உடன்பாடுடன் இருந்தன. ஆனால் இப்போது அவை என் உயிருக்கு உலை வைக்கப் பார்க்கின்றன. அதனால் அவைகளை நான் புற முதுகு காட்டிப் போய் விடுங்கள் என்று கூறத் துணிந்துவிட்டேன். அவைகளுக்கு இதைத் தவிர வேறு தேர்வுகள் இப்போது கிடையாது.

நான் முழு சிகிச்சையும் மேற்கொண்டேன். லம்பெக்டமி ஆறு சுற்றுக்கள். கீமோதெரபி மற்றும் 31 முறைகள் கதிரியக்கச் சிகிச்சைகள் என அவை அனைத்தும் அக்டோபர் 7 2011 அன்று பூர்த்தி அடைந்தன. காலம் முழுவதிலும் நான் வீட்டிலிருந்தபடியே என் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தேன். முக்கியமான வெளி உலகச் சந்திப்புகளை மட்டும் தவிர்க்காமல் சென்று விடுவேன். இதனால் அதிக மாற்றங்கள் ஏதுமில்லாமல் என்னுடைய வாழ்க்கையை முன்பு போலவே கழிக்க முடிந்தது. தடைகள் அனைத்தையும் கடந்து நோயை வெல்ல முடிந்ததென்றால், அது என் குடும்பம், நண்பர் குழாம் மற்றும் மருத்துவர்கள் என் மேல் சொரிந்த அளவில்லா அன்பினால் தான். அத்துடன் இணைந்து நான் இறைவன் மேல் வைத்திருந்த முழு நம்பிகையும் துணை இருந்தது. அன்பு மருந்து மற்றும் பிரார்த்தனை இவை மூன்றும் இணையும் போது மந்திர ஜாலங்கள் நிகழும்.

எனக்கு புற்று நோய் இருப்பது உறுதியான உடனேயே எங்கள் குடும்ப மருத்துவர் ஒரு தனிப்பட்ட புற்று நோய் மருத்துவரிடம் போவதைவிட புற்று நோய் மருத்துவமனைக்குப் போவதே சிறந்ததென்று எனக்கு ஆலோசனை கூறி இருந்தார். நாங்களும் அதையே செய்தோம். எங்களுக்கு தனிப்பட்ட புற்று

நோய் மருத்துவரையோ அதற்கான மருத்துவமனை பற்றியோ எதுவும் தெரியாததால், அவர் குறிப்பிட்ட ஒரு மருத்துவரிடமே சென்றோம். எனக்கு எப்போதுமே மருத்துவர்கள் விஷயத்தில் விருப்பு வெறுப்புகள் அதிகம் உண்டு. எனக்கு ஒரு மருத்துவரைப் பிடிக்கவும் அவரிடம் நம்பிக்கையும் தோன்றினால் தான் அவருடைய உதவியைத் தொடர்வேன். புது தில்லியின் எஸ் எம் ஹெச் க்யூரி புற்று நோய் மையத்திற்கு போய் அங்கிருந்த மருத்துவரைச் சந்தித்த போது எனக்கு அது மனதிற்கு பிடித்த மாதிரி அமைந்தது. நான் சந்தித்த குறிப்பிட்ட ஒரு மருத்துவர் மட்டுமல்லாமல் அவருடைய குழாமில் இருந்த அனைவருமே பொறுமை, கனிவு மற்றும் நோயாளிகளின் மன நிலையை நன்கு புரிந்து கொண்டவர்களாக இருந்து என் மனதில் அவர்கள் மேல் மிக்க மதிப்பை ஏற்படுத்தினார்கள். அதனால் நான் அங்கேயே சிகிச்சை எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்தேன்.

"கட்டிக்குழு" (Tumour Board) வின் முதல் கூட்டம் (என்ன வித்தியாசமான பெயர்!) நடக்க இருந்தபோது அதில் பங்கெடுக்க எனக்கு சம்மதமாவென்று என்னைக் கேட்டார்கள். என்னுடைய பதில், "கட்டாயமாக வருகிறேன்" என்னுடைய உடலைப் பற்றிய விஷயம் இது. அதில் என்ன கேடு விளைந்திருக்கிறது . அதை நீங்கள் எப்படி சரி செய்யப் போகிறீர்களென்பது எனக்குத்தெரிய வேண்டும்." என்று பதிலளித்தேன். மருத்துவர்கள் சிகிச்சையை உடன் தொடங்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் எங்கள் குடும்பத்தில் நாங்கள் அனைவரும் உற்சாகத்துடன் பங்கெடுக்க காத்திருந்த ஒரு திருமணம் நடக்க இருந்த்து; அதில் என்னையும் சேர்த்து ஒருவருக்குமே உற்சாகம் குன்றக் கூடாதென்பதில் நான் உறுதியாக இருந்தேன். அந்த திருமணம் முடியும் வரையில் எவருக்குமே என் நோயைப் பற்றிக் கூறுவதில்ல எனத் தீர்மானித்திருந்தேன். இந்த விவரம் என் கணவருக்கும், குழந்தைக்கும் மட்டுமே தெரிந்திருந்தது. திருமணம் முடிந்த உடன் சிகிச்சையை துவங்குவதென்று தீர்மானிக்கப் பட்டு அதைச் செயல் படுத்தவும் செய்தோம். அந்த பத்து நாட்கள் திருமணத்தில் உற்சாகமுடன் கலந்து கொள்வதற்கும், நான் போக வேண்டிய பயணத்திற்கு என்னை தயார் செய்து கொள்ளவும் உதவின.

நான் என் நோயைப் பற்றி என் நெருங்கிய சினேகிதியிடம் கூறினேன். அவர் தீவிர ரேக்கி மாஸ்டர்; அவர் நான் என் நோயைப் பற்றி கண்ட கண்டவரிடமெல்ளாம் கூற வேண்டாமென்றும் மிகவும் நெருங்கியவர்களுக்கு மட்டும் அது தெரிந்தால் போதுமென்றும் ஆலோசனை கூறினாள். நான் இதை மறைப்பதற்கு நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா என்ன; என்று கேட்டதற்கு அவர் பதில் கூறினார். நீ ஒவ்வொருவரிடம் இதைப் பற்றிக் கூறும்

போதும், அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளிப்பதும் அவர்கள் தம்முடைய சொந்தமானதோ அல்லது கேட்டு பார்த்துத் தெரிந்து கொண்ட விவரங்களையும் அனுபவங்களையும் பற்றிக் கூறுவதுமாக, திரும்ப திரும்ப நல்லதோ, கெட்ட்தோ ஒரேவிதமான விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டி வரும். அவை அனைத்துமே உன் அடிமனதில் தேங்கி நிற்கும். அவர் கூறியபடி நடப்பதென்று நான் முடிவு செய்தேன். அவர் உணர்ச்சிகளிலிருந்து விடுதலை பெறும் முறையையும் உடற்பயிற்சி, தியானம் பிரார்த்தனை இவைகளுடன் சேர்த்துச் செய்ய சொன்னாள்.

நான் கணினியின் இணைய தளத்திற்கு சென்று மார்பகப் புற்று நோய் பற்றியும் அதன் சிகிச்சை முறைகள் , அவற்றிற்குப் பின் வரும் பக்க விளைவுகளைப் பற்றியும் படித்து வத்திருந்ததால் அவற்றைப் பற்றின அறிவுடன் வருவதைச் சந்திக்கத் தயாராகவே இருந்தேன். இந்த விதப் பரிச்சயத்திற்கு பின் அந்த நோய் அவ்வளவாக பயமுறுத்தும் ஒன்றாகத் தோன்றவில்லை. நான் அதை எதிகொள்ள ஆயத்தமானேன். என் குடும்பமும் நண்பர் குழாமும் எனக்கு தைரியம் அளித்து என்னை மேலும் வலிமையுள்ளவளாக ஆக்கினார்கள். என்னுடைய நோயை என் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து வைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்க முனைந்த போது என்னுடைய மன அழுத்தம் குறைந்து என் நோய் விரைவில் குணமாகவும் வகை செய்தது. எந்த அளவிற்கு எனக்கு உடலில் வலு இருந்ததோ எப்போதெல்லாம் என்னால் முடியுமென்று தோன்றியதோ அப்போதெல்லாம் நான் என்னுடைய யோகாப்பியாசங்கள், தியானம் மற்றும் பிரார்த்தனைகளை தொடர்ந்து செய்து வந்தேன். கீமோதெரபி துவங்கிய 15 நாட்களில் என் தலைமுடி உதிரத் தொடங்கி விடுமென்று தெரிந்திருந்ததால் தலைக்கு செயற்கை முடி டோபா ஒன்றைத் தயார் செய்து வைத்திருந்தேன். வீட்டை விட்டு வெளியில் போக நேர்ந்த போதெல்லாம் அதை அணிந்தேன். மொட்டைத்தலை அந்த கோடைக்காலத்தில் மிகவும் சௌகரியமாக இருந்ததால் தலை முடி இல்லாத தோற்றம் என்னை மனதளவில் பாதிக்கவில்லை.

என் கணவர் குர்தீப், அவர் சகோதரிகள் மஞ்சித் தீதி, நிம்மி தீதி அவர் சகோதர் தல்ஜீத் மற்றும் எங்கள் குழந்தைகள் விஜய், பாவ்னீத், ஜஸ்மீத் எனக்கு வேண்டிய ஆதரவை அளித்ததுடன் என்னுடைய தினசரி தேவைகளன ஆரோக்கியமான உணவு மற்றும் மருந்துகள் ஆகியவற்றை அளிப்பதில் என்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக் கொடுத்து கவனமாகச் செய்தார்கள். சிகிச்சைக் காலம் முழுவதும் அவர்களில் யாராவது ஒருவர் என்னுடன் இருக்கும் வகையில் திட்டமிட்டு தங்கள் வாழ்க்கைகளை அமைத்துக் கொண்டார்கள். குடும்பத்தின் மையத்தில் அரவணைப்பும் அன்பும்

முழு வீச்சில் செலுத்தப்பட்ட ஒரு செல்லக் குழந்தையைப் போல் உணர்ந்தேன். நான் தனியாகவே விடப்படவில்லை. படிப்பு, எழுத்து, மற்றும் தொலை நோக்கி பார்ப்பதிலும் என் நேரத்தைச் செலவிட்டேன்.

கடவுளை நேரில் பார்த்தால் தான் மனதில் நம்பிக்கை தோன்றுமென்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன் நான்; ஆனால் நம்பினால் தான் பார்க்க முடியும் என்று எனக்கு இப்பொழுது தெரிகிறது. சிகிச்சையின் போது தொடர்ந்து எல்லாம் வல்ல இறைவனின் அருகாமையை நான் உணர்ந்தேன். மருத்துவர்கள் என்னுடைய மார்பகக் கட்டியை அப்புறப்படுத்துவதில் மும்முறமாக இருந்த போது நான் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னுடைய கீமோதெராபி சுற்றுக்கள் மற்றும் கதிரியக்கச் சிகிச்சைகளின் போதெல்லாம் என்னுடனேயே இருந்து எனக்கு வேண்டிய மனோபலத்தைத் தந்தார். வாழ்க்கை தடைகளால் தாக்கப்படும் ஒன்றாக இருந்தாலும் நாம் அவற்றைக் கடக்க உறுதியுடன் முயற்சிகள் செய்யும் போது வெற்றி அடைவோமென்ற திட நம்பிக்கையை மேலும் உறுதிப் படுத்தினார்.

குணமாகிவிட வேண்டுமென்ற என் தீர்மானத்திலிருந்து ஒரு பொழுதும் வழுவாமல் நிற்க உதவிய என் குடும்பம், நண்பர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு என் நன்றி. எஸ் எம் ஹெச் க்யூரி மையத்தின் செவிலியர் குழாம் எனக்கு அளித்த பலத்தையும் அறுவை மையத்திற்குள் சக்கர நாற்காலியில் அழைத்துச் சென்ற போது மனதிற்கு தைரியம் அளித்த அறுவை செகிச்சை மருத்துவரின் புன்னகையையும் சிகிச்சை காலத்தை எளிதாக கடக்க உதவ எப்போதும் தயாராக இருந்த மருத்துவர்களையும் நான் எப்படி மறக்க முடியும்?

அன்பர்களே! வாழ்க்கை ஒரு சீட்டு விளையாட்டு போன்றதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவை உங்களுக்கு எப்படி அமைகின்றதென்பது முன்பே தீர்மானிக்கப் பட்ட ஒன்று. ஆனால் கிடைத்த சீட்டுக்களை வைத்துக் கொண்டு நீங்கள் எப்படி விளையாடுகிறீர்கள் என்பது உங்கள் தனிப்பட்ட சுதந்திர முயற்சியைப் பொருத்து இருக்கும். நோயிலிருந்து விடுபட நான்கு முக்கிய நம்பிக்கைகள் உங்களுக்கு இருக்க வேண்டும். உங்களால் முடியுமென்ற உங்களிடம் உங்களுக்கு நம்பிக்கை, உங்கள் மருத்துவரிடம் விசுவாசம், அவர் அளிக்கும் சிகிசையில் நம்பிக்கை, மற்றும் உங்களுடைய இறை நம்பிக்க. அதிர்ஷ்ட வசமாக இவை அனைத்துமே எனக்கு இருந்தன. அதனால் நான் வெற்றி பெறும் உறுதியுடன் சீட்டுக்களை வைத்து ஆடினேன். துள்ளி நடனமாடும் கால்கள் மற்றும் இசை பாடும் உள்ளம் அளிக்கும் உற்சாகத்துடன் விளையாடி வெற்றியை நான் அடையவும் செய்தேன்.

சீயர்ஸ்! இது ஒன்றும் வாழ்க்கையின் முடிவல்ல மற்றொரு வாழ்க்கைப் பாடம் கற்பதற்கான அனுபவமும் அதற்குப் பின் வரப் போகும் அழகான புனர் வாழ்வின் ஆரம்பமும் , மருத்துவர்கள் எனக்குமேலும் சில வருடங்கள் வாழ உயிர் கொடுத்திருப்பதுடன், அந்த வருடங்களில் என் வாழ்க்கை சிறப்பாக அமையவும் வகை செய்திருக்கிறார்கள். அதனால் தான், என்னை இப்படிக் கூறச்செய்கிறது.

“ஆழ்ந்த மௌனத்தின் இக்கணங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் ஒருபகுதியே”

ஓவ்வொருவருடைய கதையும் மலர்ச்சியுடன் இணைந்த சிறிய சோகத்தைக் கொண்டிருக்கிறது. காரணமில்லாமல் உங்கள் கண்கள் பனிக்கின்றன; ஒவ்வொரு கணமும் ஒரு புதிய ஆரம்பம். அழுவதில் ஏன் விலை மதிப்பற்ற காலத்தை வீணடிக்கிறாய்?”

# புற்று நோயால் பாதிக்கப்பட்ட அனுபவங்கள்

கீதா ஸ்ரீனிவாசன், சென்னை

குழந்தைகள் பூங்கா - கிண்டி; நான் சென்னை வாசியாக இருந்தாலும், இரண்டு சிறுவர்களை இந்த நகரத்தில் வளர்த்தாலும் என் கணவரும் நானும் இந்த இடத்திற்கு பல முறை வந்திருக்கிறோம்; ஆனால் நான் அதை ஒட்டியிருந்த புற்று நோய் மன்றத்தின் சுற்றுச் சுவரை கண்டவுடன் என் முகத்தை திருப்பிக் கொள்வேன்' "புற்று நோய்" என்ற வார்த்தையே என்னை நடுங்கச் செய்யும்' ஏனென்றல் என் தகப்பனார் ஆறு வருடங்களுக்கு முன்னால் வயிற்றுப் புற்று நோயால் இறந்திருத்தார்.

குறிப்பிட்ட காரணம் என்று இல்லாமல், எனக்கு அடிக்கடி வாய்ப் புண்கள் வந்தன. அதற்காக பல மருத்துவர்களையும் அந்தந்த துறை " நிபுணர்" களையும் பார்த்து வந்தேன். ஆனால் ஒருவரால் கூட அதன் காரணத்தை கண்டுபிடிக்க இயலாததால் ஏமாற்றமும் துக்கமும் அடைந்தேன். முடிவாக என் கணவர் புற்று நோய் மருத்துவமனைக்குச் செல்லலாம் என்றார்; அரை மனதுடன் அதை ஏற்றுக்கொண்டேன்.

ஆரம்பப் பரிசோதனைகள் மற்றும் பயாப்சி (Biopsy) முடிந்ததும், அது புற்று நோய்தானென்ற மனதை சுக்கு நூறாக்கும் செய்தி - என் கணவருக்கும் அதன் பின் எனக்கும் சொல்லப்பட்டது. அந்த வருத்தமான செய்தியை என் சகோதர சகோதரிகளுக்கும் அம்மாவுக்கும் சொன்னேன்; நாங்கள் எல்லோரும் அழுதோம். ஒரு கட்டத்தில் அவர்கள் தங்களைத் தேற்றிக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். என் கணவர் மருத்துவர்களைச் சந்தித்து சிகிச்சையைப் பற்றியும் சிலவைப் பற்றியும் பேசினார். நான் "என்னைச் சாக விடுங்கள்" என்று மனமுடைந்து கூறினேன். தொடர்ந்து வந்த அழுகைக்கும், ஆறுதல் வார்த்தைகளுக்கும் பின் நான் கடைசியாக சிகிச்சைக்கு ஒப்புக் கொண்டேன். நான் படித்த சிறிது தத்துவமும், கர்ம வினைப் பயனைப் பற்றிய கருத்தும் எனக்கு சற்றே ஆறுதலளித்தன.

நான் பள்ளியாசிரியைப் பணியில் இருந்தேன். ஆனால் இப்போது அரை மனதுடன் வேலையை ராஜினாம செய்தேன். அக்கம்பக்கத்தில் இருந்தவர்களிடமும் என் நோயைப் பற்றி நான் கூறியவுடன் அவர்களும் எனக்காக பிரார்த்தனைகள் செய்ய ஆரம்பித்தார்கள். என் குடும்பம் - என்

கணவர், குழந்தைகள் , சகோதரி, சகோதரன், அம்மா இவர்கள் அனைவரும் எனக்கு பக்க பலமாக நின்றார்கள்.

சிகிச்சையின் முதல் கட்டம் என் பற்களை அகற்றுவதுதான். மிகுந்த சோகத்துடன் நான் அதை ஏற்றுக் கொண்டதும் அவை ஒரே தவணையில் அகற்றப்பட்டன. பிரதி தினமும் கதிரியக்கம் (Radiation) மற்றும் மருந்துகள் உட்செலுத்தப்படும் சிகிச்சையும் (Chemotheraphy) பெற புற்று நோய் மனைக்கு என் கணவர் என்னை அழைத்துச் சென்றார். வெயிலோ, மழையோ , தவறாமல் என் சகோதரி என்னை மருத்துவமனையில் வந்து பார்த்தாள். அவர்கள் உடன் இருந்ததே எனக்கு பெருமளவில் மனோதிடத்தைக் கொடுத்ததுடன் அவர்கள் தங்கள் சாதகமான மனப் போக்கை என்னுள்ளும் பரவச் செய்தனர். முந்தைய நாட்களைவிட நான் ஆரோக்கியமாக காணப்படுவதாக தினமும் என் கணவர் கூறி எனக்கு நம்பிக்கை அளித்தார்.

ஒரு தாய் ஒரு குழந்தையை ஒரு முறைதான் பிரசவிப்பார். ஆனால் என் தாயோ இரண்டாம் முறையாக எனக்கு வாழ்வளித்துக் கொண்டிருந்தார். சுமார் நான்கு மாதங்களுக்கு மிகுந்த அக்கறையுடனும் அன்புடனும் அவர் எனக்கு ரைல் குழாய் மூலம் உணவு அளித்தார். வெளி நாடுகளில் வசித்த என் நண்பர்கள், உறவினர்களிடமிருந்து என்னுடைய உடல் நிலையில் முன்னேற்றத்தைப் பற்றி விசாரித்து தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. கல்லூரியில் என் உயிர்த் தோழியாக இருந்தவள் ஒருமுறை என்னைக் காண வந்தபோது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை (எல்லா துன்பங்களுக்கும் மருந்தாக விஷ்ணுவின் ஆயிரம் நாமங்கள் கருதப்பட்டது.) 1,000 முறைகள் படிக்கலாமென்று கூறினாள். நான் என் குரல்வளையை உபயோகித்து அப்போது பல நாட்கள் ஆகியிருந்தனவெனிலும், முயற்சி செய்து பார்க்க வேண்டுமென்ற ஆசை அப்போது வந்தது. அனைவரும் கண்டு அதிசயிக்கும் வகையில் 20 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளும் அந்த சுலோகத்தை நான் உச்சரித்தேன்! பல பகவத் சம்பந்தமான பாடல்களைப் படிப்பதில் என் கவனத்தை நான் செலுத்தியதால் தான் என்னுடைய குரல் நாளங்களுக்கு போதிய அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு பேசுவதற்கான பயிற்சி அளிக்கும் மையத்திற்கு (Speech theraphy) போவதை நான் தவிர்க்க முடிந்ததென்று நான் நம்புகிறேன்.

ம்யூகோஸிடிஸ் தொண்டையில் இருந்ததன் காரணமாக என்னால் பேச முடியவில்லை என்பதுடன் கதிரியக்கச் சிகிச்சைக்குப் போகும் போதெல்லாம் என் முகத்தில் சுணக்கத்துடன் தான் நான் போனேன். அந்தக் கூடத்தில் காத்திருந்த பெருங்கூட்டத்தை சுட்டிக்காண்பித்து என் மருத்துவர் என்னை

மலர்ந்த முகத்துடன் இருக்க வேண்டுமென்று கூறுவார். வலி மிக்க அத்தருணங்களில் மகிழ்ச்சியாக எப்படி இருக்க முடியுமென்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனாலும் அங்கிருந்தவர்களில் பலரும் வேடிக்கை கதைகள் பேசி சிரிப்பதையும், புன்னனகை மாறா முகத்துடன் இருப்பதையும் நான் கண்டேன். என்னால் பேச முடியாத அந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு என் கணவர் தொடர்ந்து தன் சந்தேகங்களையும் எனக்கு அளிக்கப் பட வேண்டிய கவனிப்பு, மற்றும் சிகிச்சை முறைகள் பற்றியும் மருத்துவரிடம் கேட்பார். அந்த மருத்துவர்களும் தங்கள் முக்கிய வேலைகளுக்காக ஓடிக்கொண்டே இருக்க வேண்டிய அவசர வேளைகளிலும் நின்று நிதானமாக எல்லா நோயாளிகளின் கேள்விக்கும் செவி சாய்த்து புன்னகை படர்ந்த முகத்துடன் உரிய பதில்களைத் தருவார்கள். பெரிய மற்றும் / சிறிய நிலை மருத்துவர்கள் , செவிலியர்கள் என புற்று நோய் மன்றத்தில் வேலை செய்த அனைவருமே அற்புதமான மனிதர்கள்; நோயாளிகளிடம் எக்காலத்திலும் பொறுமையுடன் இருப்பவர்கள்.

என் மருத்துவர் என் மூக்கிலிருந்த குழாயை அகற்றிய போது என்னால் விழுங்க முடியுமாவென்ற தயக்கம் எனக்கு இருந்தது. தன் முன்னாலேயே தண்ணீரைக் குடிக்கச் சொல்லி மருத்துவர் எனக்கு உற்சாகத்தை அளித்தார். “விழுங்க முடியவில்லையேயென்று கவலைப்படாமல் முயற்சி செய்யுங்கள் என்றார். நீங்கள் அந்தத் தண்ணீரை என்மேல் தெளித்தாலோ உமிழ்ந்தாலோ பரவாயில்லை. இல்லாவிட்டால் குழாயை மீண்டும் பொருத்த வேண்டி வரும். குழாய் அகற்றப்பட்டவுடன் நான் மெதுவாக நிதானமாக வாயால் உணவு உண்ண ஆரம்பித்தேன். மருத்துவரும், என் குடும்பத்தினரும் எனக்கு அளித்த ஊக்கத்தால் எனக்கு வாயால் உண்பதில் அபிவிருத்தி ஏற்பட்டது. அத்துடன் பல நாட்களுக்கு உப்பு சப்பில்லாத உணவைத்தான் நான் உண்ண வேண்டியிருக்குமென்ற உண்மையையும் என் மனது ஏற்றுக் கொண்டிருந்தது.

தொடர்ந்து புன்னகை விரிந்த முகங்களுடன் இருப்பதையும் கண்டேன். ஒரு வழியாக கதிரியக்கச் சிகிச்சையும் மருந்துகள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சையும் ஒரு முடிவிற்கு வந்து நான் புற்று நோயுடனான யுத்தத்தில் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டேன்.

நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் நமக்கு ஏதாவது ஒரு பாடத்தை கற்றுத் தருகிறது. நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து மன வலிமை பெறும் வித்தையை நான் கற்றேன். என்னுடைய வேதனைகள் நிறைந்த சோதனைக் காலங்களில் நான் பல அபூர்வமான மனிதர்களைச் சந்தித்தேன். என்னைச் சுற்றி இருந்தவர்களை புதியதொரு ஒளியில் புதிய பார்வையுடன் என்னால்

காண முடிந்தது. என்னுள் ஒளிந்திருந்த தைரியசாலியையும் என்னால் இனம் கண்டு கொள்ள முடிந்தது. பிரார்த்தனைகள் வெற்றியை அளிக்கும், இறைவா! அனைத்திற்கும் உனக்கு நன்றி.

# புற்று நோயை மனதால் விரட்ட முயற்சிப்பது முட்டாள்தனம் - விருப்பமில்லாவிட்டாலு சிகித்சை மிக அவசியம்.

எழுதியவரின் பெயர் கொடுக்கப் படவில்லை

மார்பகத்தின் கார்சினோமா (Carcinoma of the brease) பொது மக்களின் அகராதியின்படி "புற்று நோய்" . நான் சிறிதும் எதிர்பார்க்காத போது அது என்னை தாக்கியது. 60 வயதைப் பூர்த்தி செய்து 61 வது வருடத்தில் நுழைந்திருந்த நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, விஸ்ராந்தியான வாழ்க்கைக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். என் ஓய்வு நேரங்களில் படங்கள் வரைவது மற்றும் தையல் வேலைகளைச் செய்வதென்று தீர்மானித்திருந்தேன். அப்போதுதான் முதல் முறையாக ஒரு கட்டியைப் பற்றிய சந்தேகம் என் மனதில் தோன்றிய அந்தக் கணத்தில், என் திட்டங்களெல்லாம் கவிழ்ந்து மூழ்கிப் போயின.

என் மார்பகத்தில் நான் ஒரு கட்டியைச் கண்டுபிடித்ததே தற்செயலாகத்தான். தோள் பட்டையிலும், முன் கையிலும் விடாது துன்புறுத்திய ஒரு வலியை மட்டும் நான் உணரவில்லையென்றால் என் கவனம் அந்தக் கட்டியின் மேல் சென்றிருக்குமா என்பதே சந்தேகம் தான். அந்த வலி எங்கிருந்து ஆரம்பமாகிறதென்று ஆராய்வதற்காக என் கையால் என் மார்பகம் முழுவதும் துழாவிக் கொண்டிருந்த போது தான் இந்தக் கட்டி கையில் தட்டு பட்டது. அதைத் தொடர்ந்து மனதில் முதலில் தோன்றிய உணர்ச்சி ஒரு வித அதிர்ச்சிதான். கேள்விகள் மனதில் பறக்கத் துவங்கின. இந்த வயதிலா? மாதவிடாய் நின்று பல வருடங்களுக்குப் பிறகு இப்போதா? நான் எதை சரியாக செய்யாமல் இருந்து விட்டேன்? உணவு பழக்கங்கள்? உடற்பயிற்சி போதாமை? கவலைகள்? எதற்கும் பதில் இல்லை. எனக்கு அப்போது நான் மனதில் உணர்ந்தது ஒன்றே ஒன்றுதான் - நாம் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோமென்ற ஒன்றுதான். யு ஏ இ ல் பல் சீரமைப்பு மருத்துவராக இருக்கும் என் மகளுடன் தொலைபேசியில் பேசியவுடன் சந்தேகம் உறுதியாகி விட்டது. அது ஒரு சாதாரணக் கட்டியாக இருந்தாலும் அதை அகற்றி விட வேண்டுமென்று அவள் கூறினாள்.

செயலில் இறங்குவதற்கே மிக்க தயக்கமாக இருந்தது. சிகிச்சைக்குப் பணம் தேவை; உடல் வலியையும் சகிக்க வேண்டும். இந்த போராட்டத்தில் என்னுடைய அன்புக்குரியவர்கள் எல்லாம் சிக்கிக் கொள்வார்கள். எனக்கு

வயதும் ஆகிவிட்டது. ஒரு நாள் முழுவதும் அழையா விருந்தாளியாக வந்திருக்கும் இப்பிரச்சினையைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் இருந்தேன். அதன் பிறகு விவேகம் வென்றது. நோய் இல்லையென்பது போல் பாசாங்கு செய்வது முட்டாள்தனமென்றும், சிகிச்சை மனதிற்கு அறவே பிடிக்காத ஒன்றாக இருந்தாலும், இந்தக் கட்டத்தில் தவிர்க்ககூடாத ஒன்றே என்பதையும் உணர்ந்தேன். நோய் ஒன்றும் எங்கள் குடும்பத்திற்கு புதியதல்லவே! என் சகோதரிக்கு கர்ப்பப் பையில் புற்று நோய் வந்து பத்து வருடங்களுக்கு முன் அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் கர்பப்பை அகற்றும் அறுவையை டாக்டர் வி சாந்தாவிடம் செய்து கொண்டிருந்தாள். இப்போது எனக்கு வந்திருக்கும் என்னுடைய பிரச்சினையையும் சோதிக்க, அந்த மருத்துவரை தவிர்த்து வேறு ஒருவரிடம் போவதில்லை என்று தீர்மானித்தேன்.

என் சகோதரியால் கூட இந்த செய்தியை ஜீரணிக்க முடியலாம். ஆனால் என் வயதான அம்மா? விவரம் தெரிந்த என் மகளும் மருமகனும் ஏற்கெனவே கவலையில் ஆழ்ந்து விட்டிருப்பார்கள். சிங்கப்பூரில் புதியதாக வேலைக்குச் சேர்ந்திருந்த என் மகன் விடுப்பு எடுத்து வரக் கூட முடியாத நிலையில் மனம் கலங்கி விடுவான். என் சகோதரிக்காக கவலைப்பட்ட பின் அக்குடும்பத்தை மீண்டும் ஒரு முறை கவலைக்குள்ளாக்குகிறேனே என்று எனக்கு வருத்தமாக இருந்தது. ஆனாலும் உடனடியாக செயல்படுவது மிக அவசியமென்பதையும் நான் உணர்ந்தேன்.

அதிர்ஷ்ட வசமாக மூன்று நாட்களுக்குள்ளாகவே மருத்துவமனையின் தலைவி டாக்டர் சாந்தாவை சந்திக்க அனுமதி கிடைத்தது. அவரிடம் நான் கொண்டிருந்த நம்பிக்கை கொஞ்சமும் பொய்த்துப் போகவில்லை. அன்பும் ஆதரவுமே உருவானவர். நோயாளியின் மன உளைச்சல்களை முழுவதும் புரிந்து கொண்ட ஒரு பெண்மணி அவர். அதே நேரத்தில் நடக்க வேண்டியவை பற்றிய எந்த குழப்பமும் இல்லாதவராகவும் இருந்தார். வார்த்தைகள் திட்ட வட்டமாக வந்தன. “ஆம் உங்கள் கட்டி சற்றுப் பெரியதாகத்தான் இருக்கிறது. அது புற்று நோய்க் கட்டியாகவும் இருக்கலாம். பரிசோதனைகளும் முடிவில் தான் அதன் தன்மை தெரியும். எதுவாக இருந்தாலும் கவலைப் படத் தேவையில்லை”. என்றார் அவர். மேலும் தொடர்ந்தார். “அப்படியே அது புற்று நோய்க் கட்டிதானென்றாலும் அது ஆரம்ப நிலையில், இரண்டாம் கட்டத்தில் இருக்கக்கூடும்; ஆதலால் அது நிச்சயமாக குணப்படுத்தக் கூடியது தான்; மார்பகத்தின் ஒரு பகுதியை மட்டும் அகற்றும் அறுவைதான் தேவைப்படலாம்”. அவர் சாக்கு போக்கு சமாதானங்கள் கூறாமல் உள்ளதை உள்ளபடியே நேர்மையுடன் பேசியது என் சந்தேகங்களை தீர்த்து எனக்கு மன ஆறுதலை அளிப்பதற்கு பெரிதும் உதவியது. எனக்கு பிரச்சினை இருப்பது

உண்மை. ஆனால் அதனுடன் போராடி வெற்றி காண்பது தான் புத்திசாலித்தனம் என்பதை உணர வைத்தார். அதற்கு நான் என்றென்றும் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மனதில் ஒருவித தெளிவுடன் நான் சிகிச்சைக்குத் தயாராகினேன்.

பரிசோதனைகள் அடுத்த நாள் தொடங்கின. ஒரு நாளைக்கு ஒன்றாகவும், கால அவகாசம் அதிகம் எடுக்காதவை என்றால் சில நாட்கள் இரண்டுமாக பரிசோதனைகள் நடந்தன. அவை ஒன்றும் எளிதாக இல்லை; மேலும் உடல் அயர்வை உண்டாக்குவதுமாக அவை இருந்தன. கவலைப் படுவதில்லை என்ற தீர்மானத்துடன் இருந்த போதிலும் ஒவ்வொரு முறை பரிசோதனைகள் நடக்கும் போதும் மருத்துவர்களின் முகங்களைக் கூர்ந்து பார்ப்பதும், மனதிற்குள்ளேயே, ஏதாவது சரியாக இல்லையா? அதைப் பற்றிக் கூறுவீர்களா? என்ற கேள்விகளுடன் காத்திருந்தோம். மீண்டும் அந்த மருத்துவர்கள் அனைவருக்கும் என் நன்றி. அவர்கள் எங்கள் பார்வையையும் அதன் பின்னால் இருந்த கவலையையும் நன்கு புரிந்து கொண்டார்கள். அதனால் மார்பு எக்ஸ் ரே, இசிஜி, சிடி ஸ்கேங்கள், கணயம் மற்றும் இடுப்புப் பகுதிகளின் அல்ட்ரா சௌண்ட் பரிசோதனைகள் ஆகியவை செய்து முடிந்தவுடனேயே “கவலை வேண்டாம்; பிரச்சினை ஏதுமில்லை” என்று கூறிவிட்டார்கள். எனினும் மேம்மோக்ராம் மற்றும் எப்.என்.ஏ.சி (FNAC) பரிசோதனைகள் செய்த மருத்துவர்கள் மட்டிலும் என்னுடைய கேள்விகளையும் சந்தேகங்களையும் டாக்டர் சாந்தாவின் முன் வைக்கும்படி கூறினார்கள். ஏற்கெனவே முடிவு என்னவாக இருக்குமென்பது பற்றிய உள்ளுணர்வு என் மனதில் இருந்ததால் இது என்னை அதிகம் பாதிக்கவில்லை.

அடுத்த முறை டாக்டரை சந்தித்தபோது அவர் மார்பகப் புற்று நோய் இருப்பதை உறுதி செய்தார். அதில் மகிழ்ச்சி தரும் விஷயம் என்னவென்றால் சுரப்பி முனைகளில் புற்றோ (NODES), அல்லது மெடாஸ்டாஸிஸ் (Metastasis) ஏதும் இல்லை என்பதுதான்; அது நோய் பரவவில்லை என்பதைக் குறிப்பிடுவதாக அவர்கள் சொன்னார்கள். அதுதான் மிக்க கவலை தரும் காரணி. கடவுளே! பாதி யுத்தம் வென்று விட்டேனே என்று எனக்குத் தோன்றியது.

எனினும் அறுவை சிகிச்சை பற்றிய பயமும், கதிரியக்கம் மற்றும் கீமோதெரபியினால் உண்டாகக் கூடிய அவஸ்தைகளை அனுபவித்துதானே தீர வேண்டுமென்ற கலக்கமும் மனதை நிறைத்திருந்தந்து. கடைசி பரிசோதனை செய்யப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாகவே எனக்கு முதற் சுற்று கீமோதெரபியும் ரேடியேஷனும் அளிக்கத் துவங்கினார்கள். என் சகோதரியினால் அலுவலதத்திலிருந்து விடுப்பு எடுக்கக் கூடிய நாட்களில் அவள் என்னுடன்

மருத்துவ மனைக்கு வந்தார். மற்ற நாட்கள் என் தாயார் பிடிவாதமாக எனக்குத் துணை வந்தார்.

கதிரியக்கம் அளிக்கும் மையத்தில் அங்கு பணி செய்த செவிலிகளும் மருத்துவர்களும் எனக்கு செய்யப் போகும் செய்முறைகளைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறினார்கள். அவர்கள் நீர் ஆகாரம் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் பச்சை காய்கறிகள், கீரை மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ள உணவை சாப்பிட வேண்டுமென்றும் சொன்னார்கள். மேலும் கதிர்களால் சிகிச்சை அளிக்கப்பட்ட இடத்தில் நிரம்ப பவுடரை அப்பி வைக்கவும் அது அந்த இடம் விரைவில் குணமாக உதவுமென்றும் கூறினார்கள்.

கீமோ அளித்த மருத்துவரும் அதனால் ஏற்படும் குமட்டல், படபடப்பு, ரத்தச் சோகை ஆகிய பக்க விளைவுகளைப் பற்றி கூறியதுடன் நான் அந்த சமயங்களில் என்ன செய்ய வேண்டுமென்றும் எடுத்துக் கூறினார்கள் சிகிச்சையில் எனக்கு இருந்த நம்பிக்கையும் மருத்துவர்கள் சிகிச்சை அளித விதமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்த மருத்துவர்களுக்கு தாம் என்ன செய்கிறோமென்பது பற்றியும் ஒவ்வொரு நோயாளியின் தேவைகள் என்னவென்பது பற்றியும் திட்ட வட்டமாகத் தெரிகிறதென்பதே மனதிற்கு அளவில்லா தைரியத்தை அளித்தது.

நான் உற்சாகமாக, ஏன், கலகல்வென்று இருந்தேன். நான் என் பயங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு என்னை ஒரு சாதாரண பெண்ணாக பார்க்கத் தொடங்கினேன். மருத்துவரின் “ நீங்கள் இமயமலைச் சிகரத்தின் மீது கூட வேண்டுமானால் ஏறலாம். இந்தச் சிகிச்சை உங்களுக்கு தடையாக இருக்காது.” என்ற வார்த்தைகளை தாரக மந்திரமாக எடுத்துக் கொண்டு என்னுடைய வழக்கமான வேலைகளை சமையல் செய்வது சுத்தம் செய்வது போன்ற அனைத்து வீட்டு வேலைகளிலும் ஈடுபட்டேன்.

அடுத்த மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு எனக்கு ஜனவரி 9, 2001 அன்று அறுவை சிகிச்சை செய்வதாக தீர்மானிக்கப் பட்டது. நான் வழக்கமாக உயர்ந்த ரத்த அழுத்தம் உள்ளவளாக இருந்ததுடன், அடிக்கடி மார்பு வலியும் வந்து கொண்டிருந்ததால் ஒரு ட்ரெட்மில், இ சி ஜி (Treadmill, ECG) பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டி வந்தன. அறுவை சிகிச்சையின்போது அளிக்கப் படும் மயக்க மருந்தைத் தாங்கும் சக்தி எனக்கு இருக்கிறதாவென்று அறிய இது தேவைப் பட்டது,. மருத்துவர் இதனால் நேரக் கூடிய அபாயங்களை நன்கு அறிந்தவராயிற்றே! அந்தப் பரிசோதனையை என்னால் முழுமையாகச் செய்து

கொள்ள முடியவில்லை. பொது மயக்க மருந்தை என்னால் தாங்க முடியாதென்று அந்த மருத்துவமனையின் இருதய நோய் மருத்துவர் அபிப்ராயம் சொன்ன பிறகு என் பயம் ஒருவித மனப் பிராந்தியாகவே மாறிவிட்டது. ஆனால் மயக்க மருந்து அளீப்பவரும் மருத்துவரும் அதனால் எனக்கு ஒரு தீங்கும் நேராதென்பதில் உறுதியாக இருந்தார்கள். என் மருத்துவர் தன்னுடைய வழக்கமான வழியைப் பின்பற்றி இப்போதும் எவற்றையும் நடப்பது நடக்கட்டுமென்று விட்டு விடவில்லை. ராமச்சந்திரா மெடிகல் கல்லூரியில் பணி முடிந்து வந்த இருதய நோய்த்துறையில் நிபுணரான டாக்டர் மூர்த்தியைச் சந்திக்கச் சொன்னார். அவர் என் இருதயத்தின் ரத்த ஓட்டம் சற்றே பாதிக்கப் பட்டிருந்தாலும் மயக்க மருந்தை அளிப்பது பிரச்சினையைத் தராது என்று அத்தாட்சி வழங்கினார். நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். முன் யோசனையுடன் செயல் படும் என் மருத்துவரைப் பற்றின மதிப்பு என் மனதில் மேலும் உயர்ந்த்துடன் இவர் கையில் என் உயிரை ஒப்படைப்பதில் எனக்கு சற்றும் தயக்கம் இருக்கவில்லை. என் தைரியத்தின் அளவு உச்சத்தில் இருந்த்தென்பதற்கு சாட்சியாக நான் என் அறுவையின் போது ஒருவருமே - அவர்கள் அதைக்கேட்கத் தயாராக இல்லை எனினும் - (என் மகளும் சென்னைக்கு வந்து விட்டிருந்ததுடன் தன் சந்தேகங்களை மருத்துவரிடம் கேட்டுத் தீர்த்துக் கொண்டிருந்தாள்) வரவேண்டாமென்று கூறினேன்.

அனைவருக்குமே நான் மனத்தளவில் அறுவைக்குத் தயாரானது பற்றியும் என்னுடைய பயங்களை நான் வெற்றி கண்டு விட்டது பற்றியும் மகிழ்ச்சியாகவே இருந்தது. என் மகனும் என்னுடன் இருக்க பறந்து வந்தான். மருமகள் தினசை மின்னஞ்சல் மூலம் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தாள்.

அறுவைக்குப் பின் அறையில் என் நினைவு திரும்பிய போது என்மனதில் எழுந்த எண்ணங்கள் எனக்கு இன்னமும் நன்றாக நினைவிலிருக்கிறது. முதலில் நிம்மதி, ஒரு பெரிய இடையூற்றைத் தாண்டி வந்து விட்ட கட்டம் அளித்த நிம்மதி. அடுத்தபடியாக இதை சாத்தியமாக்கி எனக்கு மறு ஜன்ம்ம் அளித்த மருத்துவர்களுக்கும், கடவுளுக்கும் என்னுள் தோன்றிய மனமார்ந்த நன்றி. இந்தப் பெரிய ஆறுதல் மனதில் இருந்ததால் எனக்கு வந்த அசௌகரியங்களையும் வலி வேதனைகளையும் பொறுத்துக் கொள்வது கடினமாக இருக்கவில்லை.

என் சிந்தனையில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டிருந்த்தால் எப்படி இந்த இடரைத் தாண்டி வந்தவர்கள் எனக்குள் மனோதிட்த்தை உண்டாக்கி இருந்தார்களோ அதே போல் நானும் என்னைச்சுற்றி அறுவை சிகிச்சைக்கு

நாள் கூறிப்பிட்டிருந்தவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்குத் தயாராக வேண்டியவர்களுக்கும் என்னை வலிமையாக்கிய மனோதிடத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கினேன். என்னுடைய முந்தைய பயங்களும் அதற்கு பின்னாலான அனுபவங்களும் பலருக்கும் மன உறுதியை அளித்ததைக் காண எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த சோதனையின் போது எனக்குத் துணை நின்ற அனைவருக்கும் என் நன்றி. என் மருத்துவர் அவருடன் பணி புரிந்தவர்கள், எனக்காகப் பிரார்த்தனை செய்த நண்பர் குழாம் மற்றும் என் மாணாக்கர்கள். புற்று நோய் என்பது தனித்து நின்று போராடக் கூடிய நோயல்ல என்பது இப்போது எனக்குப் புரிகிறது. உள்ளத்தளவிலும் உடலளவிலும் நெருங்கியவர்கள், மற்றும் உங்களைப் போல் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆதரவு மிக அவசியம். இந்த நோயுடனான போராட்டம் உடல் மனது இரண்டையுமே தளரச் செய்துவிடும் ஒன்றாக இருந்தாலும் அதைத் தோற்கடிக்கும் மன உறுதியும், சரியான பலனளிக்கும் சிகிச்சை மூறைகளும் இருந்தால் அது மலை போன்ற இடராக எதிரே நிற்காது. மலை ஏறும் போது நாம் செய்வது போலவே முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் - பின் புறம் திரும்பிப் பார்க்காமலேயே இந்த நோயினால் அவதியுறும் என் சினேகிதிகளுக்கு நான் ஒன்று தான் கூற விரும்புகிறேன். மனதைத் தளர விடாதீர்கள். நிமிர்ந்த தலையுடன் மேலே செல்லுங்கள். அது மிகப் பெரிய மலை மீது ஏறுவதற்கு ஒப்பான ஒரு முயற்சியென்றாலும் நாம் நிச்சயம் மலை உச்சியை அடைந்தே தீருவோம்.

## புற்று நோய் ஒன்றும் பயங்கரமானதில்லை ஆனால் சிகிச்சையை தாமதப்படுத்துவது தான் அபாயம்

### (தன் உண்மைப் பெயரை வெளிப்படுத்தக் கூச்சப்படும் ஒரு நோயாளியால் எழுதப் பட்டது)

அந்தக் கணங்கள் மிக வேதனையானவை; உற்றாரும் சுற்றமும் மருத்துவ மனையின் தாழ்வாரங்களில் குழுமி நிற்க, கையில் பயாப்ஸி அறிக்கைகளை ஏந்தியபடி என் மருத்துவரைச் சந்திக்க நான் காத்த்ரிஉந்த அந்தக் கணங்களை என்னால் மறக்கவே முடியாது. என் மனம் குழப்பத்திலும், பிரமிப்பிலும் சோகத்திலும் ஆழ்ந்திருந்தது. அதனிடையே மருத்துவர் என் மருத்துவ அறிக்கையைப் பார்த்துவிட்டு என்ன சொல்லப் போகிறார் என்ற கேள்வியும் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. என் கணவர் என் இரண்டு மகன்கள், நான் - எங்களுக்கு என்ன நேரப் போகிறது? இது ஏன் எனக்கு ஏற்பட வேண்டும்?

“கார்சினோமா இன் சிடு - Carcinoma in Situ - புற்று நோய்க்கு முற்பட்ட கட்டம் தான். கவலைப்பட தேவையே இல்லை! நான் இது 100% குணமாகுமென்ற உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன்.” என் மருத்துவரின் வார்த்தைகள் ஒரு தெய்வத்தின் அசரீரி போல் ஒலித்தன “ நீங்கள் அறுவை சிகிச்சை (இடது மார்பக மேஸ்டெக்டமி) , செய்து கொள்ள வேண்டும்” என்பது தான் அவருடைய தொழில் முறை பரிந்துரைப்பு.

அத்தருணத்தில் என் மனம் சற்று அமைதி அடைந்திருந்தாலும் ஏதோ ஒன்று மனதை உறுத்திக் கொண்டிருந்த்து. ஒரு பெண்ணாக், தாயாக மற்றும் சமூகத்தில் ஒருவராக என் உடம்பில் உள்ள ஒரு முக்கியமான உறுப்பை இழப்பதென்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு பெரிய அடி விழுந்தது போல் உணர்ந்து அழுதேன் - நோயை ஏற்றுக் கொள்ள மற்றவர்களைப்போல் நானும் மறுத்தேன். எனக்கு நெருக்கமானவர்களிடமிருந்து ஆதரவும் உதவியும் பல விதங்களில் கிடைத்த போதும் நான் வருத்தம், மன் அழுத்தம், கையறுநிலை, கவலை மற்றும் குழப்பம் சூழ்ந்த கணக்களுடே சென்று கொண்டிருந்தேன்.

மீண்டும் ஒரு மூறை என் மருத்துவருடனான சந்திப்பு நிகழ்கால நிலைமையை சரியான கோணத்தில் பார்க்க உதவியது. அவருடைய அனுதாபமும், எனக்கு இருக்கக்கூடிய வெவ்வேறு வழிமுறைகளை பற்றின வெளிப்படையான அலசல்களும் என் மனதை மேலும் தெளிவாக்கி நிலைமையை பணிவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டிய அறிவைக் கொடுத்தது.

பிரச்சினை ஏதுமில்லாமல் ஐந்து வருடங்கள் உருண்டோடின. நான் தவறாமல், கூறிப்பிட்ட தினங்களில் பரிசோதனைகளுக்குச் சென்றேன். இப்படிப்போன போதெல்லாம் என் மருத்துவர் போராடும் குறிக்கோளின் மீது தான் வைத்திருந்த உறுதியான மனத்திடமும், தன்னலமற்ற அர்ப்பணிப்பும், நோயாளிகளிடம் அவர் காட்டிய பரிவும், தலைமைத் திறங்களும், எளிமையும் எல்லாவற்றையும் விட தொழில் சார்ந்த சிறப்பறிவுத் தன்மை மற்றும் ஆற்றலும் அவர் மேல் எனக்கிருந்த மதிப்பை அதிகரித்து அவரைக் கண்டு வியக்கச் செய்தன. இம்மாதிரியான ஒரு தனிச் சிறப்புக் கொண்ட பெண்மணியுடன் எனக்கு பழக்கம் ஏற்பட வேண்டுமென்றுதான் கடவுள் எனக்கு இந்த நோயை அளித்தாரோ என்று கூட நான் பலமுறை நினைத்ததுண்டு.

1996, நான் வழக்கமான பரிசோதனைகளுக்குப் போனபோது மருத்துவர் என்னுடைய வலது மார்பிலிருந்த கட்டி அடர்த்தியாகி விட்டதால் நான் சில

பரிசோதனைகள் செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார். பரிசோதனைகளின் தீர்ப்பு - எனக்கிருந்த கட்டி தீங்கற்றது. இருந்தாலும் அது எந்த நேரத்திலும் புற்று நோயாக அபாயம் இருந்ததால் மார்பகம் அகற்றும் அறுவையை நான் மேற்கொள்வது நல்லதென்று அறிவுரை கூறினார். என்னுடைய இரண்டாவது மார்பகத்தையும் நான் இழக்க வேண்டுமா? நான் தயங்கினேன். மறு பரிசோதனைக்குப் போவதை ஒரு வருடம் தவற விட்ட தவறைச் செய்தேன். வெளி நாட்டிலிருந்த என் மகனைச் சென்று காணப் போகும் திட்டங்களில் மூழ்கினேன். ஒரு வருட காலத்திற்குப் பின் நான் மருத்துவ மனை சென்ற போது நடந்த பரிசோதனை அந்தக் கட்டி புற்று நோய்க்கட்டியாக (lobular Carcinoma) மாறி இருந்ததை அறிவித்தது. மறுபடியும் மருத்துவரிடம் என்னை முழுவதுமாக ஒப்படைத்தேன். இப்போதும் முறையாக கதிரியக்கச் சிகிச்சை, கீமோதெரபி மற்றும் மார்பகத்தை அகற்றும் அறுவை சிகிச்சை எனத் தொடர்ந்தது.

இம்முறையும் நான் சோகத்தில் ஆழ்ன்டு அமிழ்ந்து போனேன். இரண்டு மார்பகங்களையும் இழப்பதை எப்படியோ ஏற்றுக் கொண்டாகிவிட்டது; இப்போது கீமோதெரபி செய்துகொள்வதன் மூலம் என்னுடைய நீண்ட கூந்தலையும் இழக்க வேண்டுமா? அதற்கு நான் முற்றிலும் தயாராக இல்லை.

நான் உடைந்து சிதைந்து போய் இருந்த அக்கணங்களில் மருத்துவரின் சமாதான வார்த்தைகள் எனக்கு மிக்க பலத்தை அளித்தன. அவர் ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு நிலைமையை தெளிவாக்க, விவரங்களை பொறுமையுடன் எடுத்துக் கூறியதும் தற்காலப் பிரச்சினையைத் தாண்டி நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கும்படி செய்ய அவர் எடுத்துக் காட்டிய அனுதாபமும், இவை அனத்திற்கும் நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

என்னுடைய மருத்துவர் கூறுகிறார். “ நோயுற்ற ஒருவர் இந்த மருத்துவமனையின் வாயிலை உடலும் உள்ளமும் பலமிழந்து நெருங்கும்போது அவர்களிடம் நீங்கள் ஒரே ஒரு விதத்தில் தான் அணுக முடியும். அது அவருடைய ஒரு பாகமாக அவருள் ஐக்கியமாகி விடுவதுதான்.” அவர் உண்மையிலேயே என்னிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பாகமாகத்தான் ஆகியிருக்கிறார். அவரை என்னுள் என்னால் உணர முடிகிறது. இப்போது ஆறு வருடங்களாக நான் அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருகிறேன். பேரக் குழந்தைகளுடன் விளையாடியும், ஒரு தன்னார்வத் தொண்டு நிலையத்திற்கு என்னுடைய சேவையை அளிப்பதுமாக நாட்களைக் கழிக்கிறேன். நான் புற்று நோயின் பிடியிலிருந்து தப்பியவள் மட்டுமல்ல, அந்த நோயையும் மீறி ஒரு வித பயனுள்ள வாழ்க்கை வாழ்பவளும் கூட.

இன்று புற்று நோய் இருப்பதைக் கண்டுபிடிப்பது ஒருவருக்கு சாவு மணி அடிப்பதாக ஆகி விடாது.  நம் வாழ்க்கையில் மிகக் கொடூரமான ஒன்று நிகழ்ந்து விட்டதாகக் கருத வேண்டியதில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன்.  பயத்தினால் மருத்துவரிடம் போவதை ஒத்திப் போடுவதுதான் எல்லாவற்றையும் விட கொடுமையானது.  அந்தத் தாமதம் புற்று நோய் பரவுவதற்கான அபாயத்தை விளைவிக்கிறது.

# வீட்டிற்கு வெளியே ஒரு வீடு

கீதா தாஸ்

பன்னிரண்டு வருடங்களுக்கு முன் எனக்கு மார்பகப் புற்று நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இத்தகவல் அளித்த ஆரம்ப கணங்களின் அதிர்ச்சி என்னுள் தேயத் தொடங்கியபின் நம்பிக்கையுடனான ஒரு வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்க என்மனதை திடப்படுத்திக் கொண்டேன். ஒவ்வொரு நாளும் மனதளவிலும், உடலளவிலுமான புதிய சவால்கள் தோன்றிக் கொண்டே இருந்த போதிலும் என்னுடைய குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து அபரிமிதமான ஆதரவு எனக்குத் தொடர்ந்து கிடைத்து வந்தது. எனக்கு முதலில் இருந்த பயங்களையும் தயக்கங்களையும் கடக்க மருத்துவமனையில் இருந்த மருத்துவர்கள் அவர்களின் உதவியாளர்களுடன் பல நோயாலிகளும் பெருமளவில் உதவினார்கள்.

சென்னையின் அடையார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை, கீமோதெரபி மற்றும் கதிரியக்கச் சிகிச்சைகள் பெற முடிந்ததை நான் என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன். அப்போதிலிருந்து நான் என்னுடைய நோய்க்கான சிகிச்சை பெற சரியான ஒரு பாதையை தேர்ந்தெடுக்க உதவியதற்கு கடவுளுக்கு நன்றி சொல்லி வருகிறேன். ஏனென்றால் அங்கிருந்த மருத்துவர்கள், செவிலியர், பணியாட்கள், நிர்வாகப் பிரிவில் பணியாற்றியவர்கள் என அனைவருமே அனைத்து நோயாளிகளிடமும் பொறுப்புணர்வுடன் காட்டிய பரிவையும், அக்கறையையும் என்னை பெரிதும் உவக்கச் செய்து விட்டிருந்தன. எனக்கு புத்தரின் வாக்கியங்கள் தான் நினைவிற்கு வந்தன.

“தாராள மனது, அன்பான வாக்கு, இவற்றுடன் இணைந்த சேவைக்கும் பரிவிற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை முறை மனித இனத்தையே புதியதாக உருவாக்கும்.”

இந்த மன்றத்தைப் பொருத்த வரையில் இவ்வாக்கியங்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெற்று விடுகின்றன! ஏதொ ஒரு விதத்தில் இந்த குணங்கள் தாம் என்னுடைய நோய் குணமாகி நான் விரைவிளேயே இயல்பு நிலக்குத் திரும்ப உதவினவென்று நான் நம்புகிறேன்.

இன்று மீண்டும் நோயாளியாக இந்த அபூர்வமான மருத்துவமனையினுள் நுழையும் போது என் உணர்வுகள் சற்றும் மாறாமல் அதேபோல் இருக்கின்றன. அதற்குப்பின் வாழ்க்கையில் அதிகமான மாற்றங்கள் ஏதுமில்லை. மருத்துவமனை தன் உதார குணத்துடனான சேவைகளை தொடர்ந்து செய்து வருகிறது. புற்று நோய் மீண்டும் என்னைத் தாக்கியிருப்பதைப் பற்றிய என்னுள் இருக்கும் பயங்களை போக்க இன்றும் இந்த அதிசய மன்றத்தில் முன்பு பழகின அதே அன்பான முகங்கள் முனைகின்றன. மீண்டும் இந்த மருத்துவ மனைக்கு வந்த போது இரண்டாம் முறையாக சொந்த வீடு திரும்பிய உணர்வுதான் எனக்கு இருந்தது. ஒரு நோயாளியின் மிக முக்கியத் தேவையான அன்பு இங்கு பெருமளவில் கிடைப்பதால் நான் மீண்டும் குணமாகி விடுவேனென்பது எனக்குத் தெரியும். அந்த அன்பு எனக்கு மட்டும் கிடைக்கும் ஒன்று அல்ல. மதம், மொழி, செல்வம் என ஒன்றையும் சார்ந்திராத ஒருவித எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு இங்கு தாராளமாக அளிக்கப்படுகிறது. சற்றே கவனம் செலுத்தினால் அதைக் காண முடியும். உங்களையும் உங்கள் வலி, வேதனைகளையும் மறந்து உங்கள் பார்வையை அதற்கு அப்பாலும் நீங்கள் செலுத்தினால் பரிவும் அன்பும் இங்குள்ள நிர்வாகக் குழு, மருத்துவர்கள், செவிலியர், ஏன் சில நோயாளிகளின் முகங்களில் கூட இருப்பதை நீங்கள் பார்க்க முடியும்; அனைவரிடையேயும் திகழும் ஒரு அற்புத நட்புணர்வையும் கூட! இந்த மருத்துவமனையுடன் ஏதாவது ஒரு விதத்தில் சம்பந்தப் பட்டவர்கள் சொந்தக் காரணங்களுக்காக இந்த மன்றத்தை விட்டகன்றவர்கள் உள்பட அனைவருமே தம்முடைய தற்போதைய இருப்பிடங்களுக்கு அந்த அன்பையும் சேவை மனப்பான்மையையும் சிறிதளவாவது கொண்டு சென்றவர்களே. எனக்கு அறிமுகமான, நான் விரும்பிய சிலர் இன்று அங்கில்லை; எனினும் மருத்துவமனையின் குறிக்கோளில் சற்றும் மாற்றமில்லை. இந்த அர்ப்பணிப்பு உணர்வும் சேவை மனப்பான்மையும் தான் இந்த மருத்துவமனையை கோடியில் ஒன்றாக திகழ வைக்கிறது.

இதன் தலைமையில் ஒளிர்பவர் என்னமோ, அந்த நளினமான தோற்றம் கொண்ட, மனதைக் கவரும் நயம் மிக்க பெண்மணி (என்னைப் பொறுத்த வரையில் அவர் ஒர் தேவதை; வேறு பலரும் என்னுடைய இந்த உணர்வை எதிரொலிப்பார்கள்) அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட மன்றத்தின் தலைவி டாக்டர் சாந்தா. அவருடைய குணாதிசயங்கள் அளவற்றவை. இவர் பண்புகளைக் குறிக்கப் போதுமான சொற்கள் என்னிடம் இல்லை. ஒரே வார்த்தையில் நான் அதைக் கூறுகிறேன்; அவர் ஒரு அதிசயமான பொது நல சேவைத் தொண்டர்.

இந்த தன்னலமற்ற சேவை மனப்பான்மை இம்மருத்துவமனையின் பழைய புதிய கட்டிடங்கள் அனைத்திலும் ஊடுருவிப் படர்ந்திருக்கிறதென்பது சொல்லத் தேவையில்லாத ஒன்று. பெரும் கூட்டங்கள் , சில சமயங்களில் நிர்வகிக்க முடியாத அளவில் வரும் மக்கள் கூட்டம் இருந்த போதிலும் ஒரு போதும் ஒரு கடின வார்த்தையோ, முகச் சுருக்கமோ ஒரு நிர்வாகி, மருத்துவர் அல்லது செவிலியர் முகத்திலும் இங்கு கண்டதேயில்லை. “புன்னகையுடன் சேவை” என்னும் தன் கொள்கையை சிறிதும் குறைவில்லாமல், அதை தன் இயல்பாகக் கொண்டிருக்கிறது இந்த மன்றம்.

“நான் உறங்கி கனவு கண்டேன், இந்த வாழ்க்கை மகிழ்ச்சிகரமான ஒன்றென்று. நான் கண் விழித்த பின் தெரிந்தது வாழ்க்கை சேவை தான் என்பது. நான் அதன்படி நடந்தேன்; அப்போது கண்டேன், சேவைதான் மகிழ்ச்சி என்று”. ரபீந்திரனாத் தாகூரின் இந்தப் பொன்மொழிகள் தான் இந்த மருத்துவமனையில் கடைபிடிக்கப்பட்டு வரும் மறை வாக்கு.

சமூகத்தின் வசதியற்றவர்களும், விளிம்பு நிலையில் வாழ்பவர்களும் இலவசமாகவோ, குறைந்த கட்டணம் செலுத்தியோ, இங்கு சிகிச்சை பெறுவதைக் கண்டு நான் பெரிதும் உவகை அடைந்தேன். மருந்துகள் அளிக்கப்பட்டு சிகிச்சைகள் கொடுக்கும் போது தோன்றும் வலிகளையும் சிக்கல்களையும் மறந்து முகத்தில் மகிழ்ச்சியான புன்னகைகளுடன் ஓடித் திரிவதை குழந்தைப் பிரிவின் இளம் நோயாளிகளிடையே காணலாம். அவர்களுக்கு அளிக்கப்படும் இலவச சிகிச்சையையும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அளிக்கும் அன்பான பணிவிடைகளும் அவர்களுக்கு நோயற்ற எதிர்காலம் ஒன்றை, அதிக ஒளிமயமான நாளையை, உறுதி செய்கின்றன. இப்புற்று நோய் மருத்துவ மனையில் நோயாளிகளின் பணிவிடை தான் முதலிடம் வகிக்கிறதென்பதை நான் வேறு பல நோயாளிகளின் வாக்கு மூலங்கள் மூலமாகவும் கேட்டிருக்கிறேன். வாழ்க இந்த சிறப்பு வாய்ந்த மருத்துவமனை!

பெரிய சிறிய தொழில் நிறுவனங்கள் புற்று நோயுடனான தன் யுத்தத்தில் பெரும் வெற்றிகள் கண்டு பண உதவி பெற அனைத்து தகுதிகளும் கொண்ட மருத்துவமனைக்கு, அதிக அளவில் பொருளுதவியை அளிக்க முன் வருமென்று நம்புகிறேன்.

சொந்த அனுபவத்தைக் கூற வேண்டுமானால் புற்று நோய் என்னை முன்பை விட சிறந்த ஒரு பெண்ணாக மாற்றி வாழ்க்கையை முழுமையாக வாழ்வதற்கு கற்றுத் தந்துள்ளது. இத்துடன் சவால்களை ஏற்கும் மனோதிடத்தையும் புற்று

நோய் மன்றத்தின் விசால பார்வை மற்றும் குறிக்கோளில் முழு நம்பிக்கை கொள்ளவும் வைத்திருக்கிறது. மக்கள் சேவை கடவுள் சேவைக்கு ஒப்பானதல்லவா ?

கீதா தாஸ் (புற்று நோயிலிருந்து மீண்டு வந்த ஒருவர்)

பொருளடக்கம்